கல்கி

KALKI 21-5-72 45 காசு



for that millionaire look



Century
for 100% cotton
textiles

CENTURIZED
PRESHRUNK FABRIC

THE
CENTURY
SPG. & MFG. CO. LTD.,
BOMBAY 25 DD

For Fashion Fabrics choose
Century Shirtings!

NPS-CM 16



கல்கி

பொருளடக்கம்

பரிதாபி, வைகாசி 8 - மே 21, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

கல்கி
மலர் 31
இதழ் 43

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

சுயாட்சிக் கோஷம்

"மாநில சுயாட்சிக் கோரிக்கையை விடமாட்டோம்" என்கிறார் தமிழக முதல் மந்திரி. சுயாட்சி என்றால் மாநில சர்க்காருக்கு மேலும் அதிகாரங்களைக் கேட்பதாகத்தான் பொருளே யன்றி, அது தேசப் பிரிவினைக் கோரிக்கையாகாது என்று ஒரு விளக்கமும் தருகிறார். ஆனால் அவரது கட்சிப் பிரமுகர்களோ அவரது முன்னிலையிலேயே பங்களா தேசம், முஜிபுர் ரஹ்மான் முதலிய மேற்கோள்களைத் தங்களுக்கே உரிய சொல்லலங்காரத்துடன் எடுத்துக் காட்டி வருகின்றனர். இவர்களை எல்லாம் மிஞ்சிவிட்டார் தி. மு. க.வின் நண்பரும், குருவும், வழிகாட்டியுமான திரு ஈ. வே. ரா. பெரியார் அவர்கள். மன்னார்குடியில் நடந்த தஞ்சை மாவட்ட தி. மு. க. மகாநாட்டில் விசேஷ விருந்தாளியாகப் பேசிய திராவிடக் கழகத் தந்தையார், தி. மு. க அதிக சுயாட்சிப் பொறுப்புக்கள் கேட்பதில் தமக்குக் கருத்து வேற்றுமை இருப்பதாகவும், தமிழ் நாடு தனிச் சுதந்திர நாடாகப் பிரிந்துபோக வேண்டும் என்பதே தம் கருத்து என்றும் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

இதே கருத்தை வெளியிட்டு அவர் எழுதியிருந்த கட்டுரையைத் தமிழக அரசாங்கத்தின் ஏடான "தமிழர"சில் பிரசுரித்திருந்தது நினைவிருக்கலாம். அரசாங்கப் பத்திரிகையில் தேச ஐக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும் கருத்தை வெளியிட்டது குறித்து ஆட்சேபம் எழும்பியதும் நினைவிருக்கும். முதல் மந்திரியார் அப்போது தமக்கே உரிய சாதுரியத்துடன் ஏதோ சமாதானங்கள் சொன்னார். மன்னார்குடி மகாநாட்டில் முதன் மந்திரியின் முன்பே மீண்டும் தனித் தமிழ் நாட்டுக் கோஷத்தை எழுப்பியதற்கு முதன் மந்திரியோ, அவரது கட்சியின் மற்றப் பிரமுகர்களோ மறுப்புத் தெரிவிக்கக் காணோம்.

தமிழக அரசாங்கம் தனி ராஜ்யம் கேட்கிறதா கேட்கவில்லையா என்பது வேறு விஷயம். தமிழ் நாட்டின் "மாநில சுயாட்சி" என்ற கோஷம் எழுந்தால், அதோடு இணைபிரிக்க முடியாமல், தனி நாட்டுக் கோரிக்கையும் எழும்பத்தான் செய்யும். மற்ற மாநிலங்களுக்கும், தமிழகத்துக்கும் உள்ள ஒரு மாறுபாட்டை மறப்பதற்கில்லை. இங்கு தனித் திராவிட நாட்டுக் கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வந்திருக்கிறது. எனவே இப்போது தமிழ் நாட்டு அரசு மெய்யாகவே தேச ஐக்கியத்துக்கு முரணாக எண்ணா விட்டாலும் கூட, 'சுயாட்சி', 'அதிக அதிகாரம்' என்றெல்லாம் கோஷம் எழுப்பினால், பிரிவினைச் சக்திகளும் தாமாக ஊக்கம் பெறத்தான் செய்யும். இந்த அபாயகரமான போக்குக்கு இடமளிப்பது சற்றும் அறிவுடைமையாகாது.

தமிழகத்தின் வளர்ச்சிக்காகச் செய்ய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. முதலாவதாக, இங்கு ஊழல் ஆட்சி நடக்கவில்லை, கட்சி நலனை மட்டுமே கவனிக்கும் ஆட்சி நடக்கவில்லை என்று மக்கள் திருப்தி கொள்ளுமாறு செய்ய வேண்டியது அவசியம். இதையெல்லாம் விடுத்து, சுயாட்சி கோஷத்தில் மக்களின் கவனத்தைத் திருப்புவது பொருந்தாது. இந்தக் கோரிக்கையை விட்டால் தமது கட்சிக்குத் தோல்வி என்று முதல்வர் எண்ணுகிறார் போலும். ஆகவேதான் 'சுயாட்சிக் கோரிக்கையை விட மாட்டோம்' என்கிறார்.


அதாவது தமிழக அரசு மேலும் மேலும் மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவியை நிர்ப்பந்தித்து வரும்; ரிசர்வ் பாங்கிலிருந்து அதிகப் பற்று (ஓவர் டிராஃப்ட்) பெற அனுமதி கேட்கும். நிதிப் பட்டுவாடாக்களை அதிகமாக்கிக் கொள்வதும், பெர்மிட் — லைசென்ஸ் கொள்ளையில் பங்கு பெறுவதுமே சுயாட்சிக் கோரிக்கையின் உட்கிடக்கை. மத்திய சர்க்கார் பெர்மிட்—லைசென்ஸ் ராஜ்யத்தை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும் வரையில் இந்தக் கோரிக்கை ஓயாது. மாநிலங்களுக்கு இவ்விதமாகப் பெர்மிட் — லைசென்ஸ் அதிகாரத்தில் பங்கு தரப்பட்டால், அப்புறம் இந்த ஊழல் நன்றாக வேரூன்றி விடும். அதைப் பிறகு களையவே முடியாமற் போகும்.


பெர்மிட் — லைசென்ஸ் விநியோகம் என்கிற தங்கச் சுரங்கத்தில் ஏக போக

கியம் கொண்டாடி வரும் மத்திய சர்க்கார், இந்த விநியோகப் பொறுப்பை ஒரு சுதந்திரக் குழுவிடம் ஒப்புவித்தாலொழியப் பிரச்னைக்குத் தீர்வு பிறக்காது. பிரதமரவர்கள் தமது செல்வாக்கைக் கட்சி நலனுக்காகத் துஷ்பிரயோகம் செய்து வருகிறார் என்ற குற்றச்சாட்டிலிருந்து விடுபடுவதற்கும் இதொன்றே வழி. தில்லி சர்க்கார் இவ்விஷயத்தில் காலதாமதம் செய்யாமல் முடிவு எடுக்க வேண்டும். முன்பே பலமுறை கூறிய விஷயம்தான். ஆனால் இதையன்றி விமோசனத்துக்கு வேறு உபாயமில்லை.

ராஜாஜியின் கருத்துக்கள்

தற்போது எஞ்சியுள்ள பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் நிரந்தரமான சமாதானம் உண்டாவது இரு நாடுகளின் முன்னேற்றத்துக்கும் அத்தியாவசியம் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். ஆயினும் ஒருசிலர் வெற்றிகரமாக ராணுவ நடவடிக்கை எடுத்துப் பாகிஸ்தானை இல்லாமற் செய்தாலே நிரந்தர சமாதானம் ஏற்படும் என்று கருதுவதாகத் தெரிகிறது. இது அடியோடு தவறான கருத்தாகும். பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ணம் இவற்றை வளர்த்துக் கொள்வதன் மூலமே நம்மிரு நாடுகள் நிரந்தரமான சமாதானத்தை அடைய முடியும் —ராணுவ சாதனையால் அல்ல. தோல்வியடைந்த நாட்டின் பெருவாரி மக்கள் வெற்றி பெற்ற நாட்டின் ஆட்சியை மனமொப்பி வரவேற்றால்தான் யுத்தத்தின் மூலம் நீடித்த சமாதானம் காண முடியும். இல்லாவிடில் ராணுவச் சாவடிகளைக் கொண்டு ஒரு பிரதேசத்தைத் தனது சொத்தாகப் பிடித்து வைத்துக் கொள்ளலாமே ஒழிய, அப்பிரதேச மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற முடியாது. வெறுப்பும் பகைமையும் கொண்ட மக்களிடமிருந்து நிரந்தர சமாதானத்தைப் பெற முடியாது. மக்களின் அன்பும் விசுவாசமுமே நிரந்தர சமாதானத்துக்கு அத்தியாவசியம். வங்காளத்தைச் சேர்ந்த ஒரு பிரமுகரிடம் பேசிய பின் இதை எழுதுகிறேன்.





★

சுதந்திரக் கட்சியிலிருந்து பலர் காங்கிரஸுக்கு மாறியிருப்பது பிரதமருக்கு அரசியல் ரீதியில் திருப்தி அளிக்கலாம். ஆயினும் அவர் இவ்விதம் கட்சி மாறியவர்களிடம் மதிப்புக் கொண்டிருக்க மாட்டார் என்றும், அவர்களை நம்பிக்கையுடன் வரவேற்க மாட்டார் என்றும் உறுதியாகக் கருதுகிறேன். தேசத்தின் நலனைவிட, தாங்கள் அரசியலில் பெறுகிற நலனையே பெரிதாகக் கருதிச் சுதந்திரக் கட்சியை விட்டு விலகுபவர்கள், புதிய கட்சியில் தாங்கள் எதிர்பார்க்கும் லாபத்தைப் பெற முடியாது. இவர்கள் ஏமாற்றமே அடைவர்.

★

ஒருவர் கட்சி மாறுவதைத் தடுப்பதற்காகச் சட்டம் கொண்டு வருவது பற்றிப் பேச்சு அடிபடுகிறது. நமது அரசியல் சாஸனத்தில் அரசியல் கட்சிகளுக்கு எவ்விதத்திலும் தனி உரிமைகளும்

சஞ்சீவையா மறைவு



காங்கிரஸ் அக்ராசனர் திரு சஞ்சீவையா அவர்களின் அகால மரணம் குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். ஹரிஜன குலத்தில் பிறந்த சஞ்சீவையா உழைப்பாலும், தகுதியாலும் முன்னேறியவர். அவர் எதிர்பாராமல் அரசியலில் புகும்படியாயிற்று. அதைவிட எதிர்பாரா விதத்தில் அவருக்கு வெகு சிறிய வயதிலேயே ராஜாஜி தமது மந்திரி சபையில் இடம் கொடுத்தார். ஆந்திரம் பிரிந்த பின் அந்த ராஜ்ய மந்திரி சபைகளில் இடம் பெற்றதோடு முதன் மந்திரியாகவும் ஆனார். ஜவாஹர்லால்ஜியின் மத்திய அமைச்சரவையிலும் பணி புரிந்தார்.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் முதல் ஹரிஜன அக்கிராசனர் இவரே. ஒருபோதும் பண்புக் குறைவாக நடக்காதவர். தம்மிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பை மனமார்ந்த ஈடுபாட்டுடன் செய்வார். பெரும் பதவிகளில் இருந்தபோதிலும் அரசியல்வாதிகளிடையே அதிகப் பகட்டும் படாடோபமும் இல்லாத அபூர்வப் பிறவிகளில் அவர் ஒருவர். அவரது மறைவு இன்றைய அரசியல் உலகுக்குப் பெரு நஷ்டம்.

கடமைகளும் தந்து அங்கீகாரம் கொடுக்கவில்லை என்பது இங்கு நினைவுக்குரியது. தனி வேட்பாளர்களைப் பற்றி மட்டுமே சாஸனம் விதிகள் வகுத்துள்ளது. ஆனபடியால், கட்சி மாறுவதற்குத் தடை விதித்தால், அது அரசியல் கருத்துச் சுதந்திரம் என்ற முக்கியமான கொள்கைக்கு விரோதமானது என்று அர்த்தம் செய்வதற்கு இடமேற்படும்.

★

இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவியும் ஊக்கமும் அளித்து வருவது நம் அனைவருக்கும் ஆழ்ந்த கோபமும் வெறுப்பும் உண்டாக்குவது நியாயம். ஆனால் அது காரணமாக, துர்ப்பாக்கிய நிலையில் உள்ள தென் வியட்நாமுக்கு ஸ்ரீ நிக்ஸன், எத்தனையோ சிரமங்களுக்கிடையே தம்மால் இயன்ற உதவி முழுவதும் செய்து வருவதைக் குறை கூறலாகாது. தென் வியட்நாமுக்குள்ளே ஹனோயும், அதன் வெளிநாட்டுக் கம்யூனிஸ்ட் துணைவர்களும் திட்டமிட்டுப் பரப்பி வரும் வன்முறையான தேசத் துரோகத்தையும் அராக்கிரகத்தையும் முறியடித்து அந்நாட்டைக் காக்க ஸ்ரீ நிக்ஸன் முயன்று வருகிறார். போர் மூளுவதையோ மூண்ட போர் விஸ்தரிப்பதையோ கண்டித்துவிடுவது சுலபம். ஆனால் இப்போது ஸ்ரீ நிக்ஸனைக் கண்டிப்பவர்கள் காரிய ரீதிக்கு உகந்த வேறு எந்த உபாயத்தைச் சொல்ல முடிகிறது? தென் வியட்நாமுக்கு அமெரிக்கா தந்த வாக்குறுதியை அவர் முறிக்க வேண்டும் என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் வாக்குறுதியை முறிப்பது ஒழுக்கம், கௌரவம், சர்வதேச ராஜரீக சாதுரியம் ஆகிய எல்லா அடிப்படைகளிலுமே முற்றிலும் தவறாகும்.

தென் வியட்நாமிலிருந்து திருப்தியூட்டும் செய்தி எதும் காணோம். அந்த நாட்டுக்கு விநாசமே தலைவிதி என்று நிர்ணயமாகிவிட்டது போலும்! ஏதேனும் அற்புதம் நடந்தால்தான், கம்யூனிஸ்ட்களின் பிடியிலிருந்து தென் வியட்நாமைக் காக்க முடியும். போரை நிறுத்தச் செய்யுமளவுக்குச் சர்வதேச அபிப்பிராயம் வலுவாக உருவானால் அதுவே மேற்சொன்ன அற்புதமாகும். யுத்தம் நின்றால் தான் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரும் நிலவரத்தை அமைதியாகச் சிந்தித்துப் பார்க்க முடியும். அதிலிருந்து தென் வியட்நாமைக் கம்யூனிஸ்ட் ஆட்சிக்குப் பலியிடும் அநீதிக்கும், இந்தப் போரின் காரணமாக ஏற்படக் கூடிய உலக உற்பாதத்துக்கும் நிவாரணம் பெறலாம்.

★

மது என்கிற தீமையைக் குறைப்பது பற்றிப் பிரதமர் பேசியிருக்கிறார். மதுவின் உற்பத்தியையும் விநியோகத்தையும் சர்க்காரே ஏற்று நடத்துவது தீமையைக் குறைக்காது என்பது அநுபவத்தில் கண்ட உண்மை. சர்க்காருக்கு மது விற்பனையில் கிடைக்கும் வருமானத்தில் உள்ள ஆசை காரணமாக, மதுப் பழக்கத்தைக் குறைப்பதில் அது முனைப்புடன் செயல் புரியும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

★

"உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் உள்ளதா என்பதே கேள்வி. வெறும் வார்த்தைகளில் பயனில்லை" என்று பூட்டோ அவர்கள் ராவல்பிண்டியில் பேசியிருக்கிறார். அவர் சொல்வது மிகவும் சரி. இக் காலத்தில் எழுத்து மூலம் உருவாக்கப்படும் உடன்படிக்கைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் மதிப்பே இல்லை.

மே 17 முதல்

தென்னகமெங்கும்

மே 19 முதல்

சென்னை: குளோப் · பத்மநாபா · லிபர்ட்டி

உமா

மாடர்ன் தியேட்டர்ஸ்

கருந்தேள் கண்ணாயிரம்

டைரக்ஷன்

R. சுந்தரம் B.E.



அருள் நிதி தரவரும் ஆனந்த மலை

ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், பரமானந்தத்தில் தோய்ந்து, அந்த ஆனந்தத்தின் வடிவமாகி ஆன்மிக மலையாக விளங்குபவர். தோற்றத்திலும், அநுபவத்திலும், கருணையிலும், பெயரிலும் கூட கிரியாக உள்ள பெரியவர் அவர். முதலாழ்வார் மூவரும் கூடிய வைணவ மகாக்ஷேத்திரமும், சிவபெருமான் விருப்புடன் உகந்த அட்ட வீரட்டங்களில் ஒன்றுமான திருக்கோவலூரை அடுத்து, திருவண்ணாமலைச் சாலையில் உள்ள தபோவனத்தில் குடிகொண்டு எண்ணற்ற அடியாரின் புண்ணுற்ற இதயங்களை ஆற்றி வருகிறார்.

'ஆனைவயதுக்கோர் அளவில்லை' என்றும், 'ஞான குருவயதினைத்தான் உரைக்கலாமோ?' என்றும் பாரதியார் பாடியவாறு, ஸ்ரீ ஞானானந்தஸ்வாமிகளின் வயதை உள்ளபடி உணர்ந்தார் எவருமில்லை. ஸ்வாமிகள், அவ்வப்போது தமது பூர்வ சரிதையைக் குறிப்பிடுகையில் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ராமலிங்க ஸ்வாமிகள் ஆகியோருடன் தமக்கிருந்த தொடர்பை நினைவுகூர்வதிலிருந்தும், வேறு பல அநுமானங்களைக் கொண்டும் அவருக்கு 150 வயதுக்கு மேலாகி விட்டதென்று உறுதிப்படுகிறது. ஞானிகளைப் பொறுத்த மட்டில் சரீரத்தின் வயதுக்கு முக்கியத்துவம் இல்லை. குழந்தையாக இருந்தாலும் அவர்கள் மகா பெரியவர்கள். வயதில் மகா பெரியவர்களானபோதிலும் குழந்தையாக இருப்பவர் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள். தபோவனம் போய் வந்த அடியார்கள், அவர் பிறந்த குழந்தை போல் திறந்த உள்ளத்துடன் நெருங்கி உறவாடி அன்பு பொழிவதைத்தான் முதற்கண் குறிப்பிடுவார்கள்.

கன்னட தேசத்தில் தார்வார் மாவட்டத்தில் உள்ள மங்களபுரி என்ற ஊரில் வெங்கோப கணபாடிகள், சக்குபாய் அம்மை என்கிற உத்தம அந்தணத் தம்பதியர்க்கு ஒரு தைக் கிருத்திகையில் மகவாக உதித்தார் ஸ்ரீ ஸ்வாமிகள். முருகனுக்கு மிகவும் உகந்த புண்ணிய தினத்தில் பிறந்ததால் 'சுப்பிரமணியம்' என்று பெயரிட்டனர். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவருக்கு உலகியல் பற்று இல்லை. பாலப் பருவத்திலேயே பெற்றோரை இழந்ததும் பற்று விட்ட நிலைக்கு அநுகூலமாயிருந்தது. பன்னிரண்டாவது வயதில் ஒரு திவ்விய ஜோதியைக் கண்டு, வீடு வாசலை விட்டு அதைப் பின்தொடர்ந்து சென்றார். பண்டரிபுரத்தைச் சென்றடைந்ததும் ஜோதி மறைந்தது. ஜோதிர் மடம் என்பதாக ஸ்ரீ ஆதி சங்கரர் இமயத்தில் ஸ்தாபித்திருக்கு மடத்தின் அதிபதிகளாகிய ஸ்ரீ சிவரத்னகிரி ஸ்வாமிகள் பண்டரிபுரத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் பாலன் சுப்பிரமணியரை ஆட்கொண்டார்கள். சுப்பிரமணியர் சிவரத்னகிரி ஸ்வாமிகளிடம் குருகுலவாசம் செய்து அத்யாத்ம வித்யையில் தேர்ந்தார். சுப்பிரமணியரை 'ஞானானந்தகிரி' என்ற சந்நியாச சிரோமணியாக ஆக்கியவர் சிவரத்னகிரி ஸ்வாமிகளே.

குரு மறைந்தார். ஏனோ ஞானானந்தர் அவர்களுக்கு ஜோதிர் மடாதிபதிகளாக இருப்பதில் மனம் இல்லை. பகவந்நாம போதேந்திரர்கள் காமகோடி பீடத்தை விட்டு வெளிச் சென்று பக்தி மார்க்கத்தைப் பரப்பினார்கள் அல்லவா? ஸ்ரீ ஞானானந்தகிரி அவர்களும் மடத்தைத் துறந்து வெளியேறினார். இமாசலத்திலேயே முப்பத்தைந்து ஆண்டுகள் கடும் தவம் இயற்றினார்கள். பரம அத்வைத அநுபூதியைத் தமதாக்கிக் கொண்ட பின், தேச சஞ்சாரம் தொடங்கினார்கள். நாட்டு மண் முழுவதையும் புனிதப்படுத்தினார்கள். பாரதத்தின் வட கோடியிலிருந்து இலங்கைத் தீவு உட்பட பாதயாத்திரையாகவே சென்றுள்ள ஸ்வாமிகள், தமிழகத்தில் தவச்சாலை அமைத்துக்கொண்டது நம் பாக்கியம்.

அத்வைதமே அவர் முடிந்த முடிபாகத் தரும் உபதேசம். ஆனால் அடிநிலையிலுள்ளவர்களுக்கும், இனிமையாக எளிமையாக நுட்பங்களைப் பாகுபடுத்தி நல்லுரைகள் தருகிறார். ஓர் உதாரணம் பாருங்கள்:

"சுறுசுறுப்பாயிரு; ஆனால் படபடப்பாயிராதே
பொறுமையாயிரு; ஆனால் சோம்பலாயிராதே
சிக்கனமாயிரு; ஆனால் கருமியாயிராதே
அன்பாயிரு; ஆனால் அடிமையாயிராதே
இரக்கங்காட்டு; ஆனால் ஏமாந்து போகாதே
. . . .
நல்லோரை நாடு; ஆனால் அல்லோரை வெறுக்காதே"

சகல சக்திகளுக்கும் ஆதாரமான ஒன்றிடம் மகான்களுக்கு ஜீவத் தொடர்பு ஏற்படுவதால், பெரும் சக்திகள் இவர்களிடம் இயல்பாகக் கூடுகின்றன. இம்முறையில் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் பக்தர்களின் உலகியல் துன்பங்களைத் தீர்க்கவும், அவர்கள் ஆன்ம பக்குவம் பெறவும் பல அற்புதங்களை ஆற்றுகிறார். அற்புதத்தைவிட அதற்கு ஊற்றான அருட் பாங்கே முக்கியமானது. தம்மிடம் அற்புத உணர்வை மட்டுமே

பெற்று அடியார்கள் விலகி நிற்கக் கூடாதென்பதற்கே போல், ஸ்வாமிகள் அனைவரிடமும் குழந்தையாகக் குழைந்து இழைந்து பழகி வருகிறார்கள். தபோவனத்தில் மயிலையும் மானையும்கூட இப்பெருமான் பந்து மித்திரராகச் சொந்தம் பாராட்டுகிறார். பழுத்த பழமாக விளங்கும் பரம ஞானியின் திருவுருவை இவ்விதழ் மேலட்டையில் வெளியிட்டு அவரது பொன்னார் திருவடிகளைப் பணிகிறோம். (வண்ணப் படம்: ஜூரலிங்கம்)

இருநூறு ஆண்டு கண்ட சீர்திருத்தவாதி

அவர் சநாதன ஹிந்து தர்மத்தின் உயர்ந்த சித்தாந்தங்களையோ ஆன்மிக உணர்வுகளையோ மறுக்கவில்லை. அருவ வழிபாட்டுக்கு அடிகோலவே, உருவ வழிபாடு ஏற்பட்டது; ஆனால் நாளடைவில், உருவ வழிபாடே உண்மை வழிபாடோ என்று நினைக்கும் அளவுக்குச் சமுதாய வாழ்க்கையில் அது ஆதிக்கம் பெற்றது என்று கருதினார். அழகான ஒரு கட்டுரை எழுதினார். இன்று நேற்றல்ல; நூற்றி எண்பத்திநாலு ஆண்டுகளுக்கு முன்பு. அப்போது அவருக்கு வயது பதினாறுதான்.

பரம்பரை பரம்பரையாக வந்த பழக்கத்தை மாற்றுவதென்றால் சிரமம்தானே? அவரது குடும்பமே அவரது கருத்துக்களை ஏற்க மறுத்தது; அவரை வீட்டை விட்டே வெளியேற்றவும் துணிந்தது.

அந்த இளைஞர்தான் ராஜா ராம்மோகன் ராய் என்னும் உலகம் போற்றும் உத்தமர். அவருடைய தாத்தா கிருஷ்ண சந்திர பானர்ஜி, வங்காள நவாப்பின் ஆட்சியில் சிறப்பான பணி புரிந்து ராஜா என்னும் பட்டத்தைப் பெற்றவர். அந்த வழி வழி வந்த பட்டத்தைத் துறக்கவில்லை ராம் மோகன் ராய். அதனால்தான் ராஜா என்னும் அடைமொழி அவர் பெயருடனும் ஒட்டிக் கொண்டது. பரம்பரைப் பழக்கம் சட்டென்று அறுகாது என்பதற்கு இதுவே ஓர் எடுத்துக்காட்டு!

ராஜா ராம்மோகன்ராய், திபெத்தை அடைந்தார். பௌத்த மதத்தைச் சேர்ந்த லாமாக்களின் சம்பிரதாயங்களைக் கண்ணுற்றவர், அவற்றிலும் குறைகள் கண்டு பிடிக்கத் தொடங்கினார்; விளைவு திபெத் நாடு அவர் உயிருக்கே உலை வைக்க முயன்றது!

ஆனால் திபெத்தியப் பெண் ஒருத்தி தனது இயல்பான இரக்கக் கனிவினால், அவர் உயிர் தப்பிப் பிழைக்க உதவினாள்! தாய்நாடு திரும்பியவருக்கு வாரணாசி வடமொழிப் புலமை பெற வாய்ப்பு அளித்தது.



ராஜா ராம்மோகன்ராய் கிழக்கிந்திய கும்பெனியரின் ரெவின்யூத் துறையில் சிறிது காலம் உத்தியோகம் பார்த்தார். பிறகு உத்தியோகத்தை உதறிச் சமூகப் பணியில் தம் முழு நேரத்தையும் செலவிட்டார்.

அவர் சாஸ்திரங்களை அவமதிக்கவில்லை; சாஸ்திரங்களின் பெயரால் வேரூன்றி விட்ட குருட்டுச் சம்பிரதாயங்களையே களைந்தெறிய விழைந்தார். இதன் பொருட்டு அவர் தொடங்கிய சங்கத்துக்கு 'ஆத்மீய சபா' என்று பெயர். அது சக்தியின் சொரூபம் எனப் போற்றப்படும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அறவே ஒழிக்க முனைந்தது.

உடன்கட்டை ஏற வேண்டும் என்னும் ஹிந்துக்களின் பழக்கத்தைத் தகர்த்தெறிய ஸ்ரீ ராய் மிகத் தீவிரமாகப் புரட்சி செய்ததே அரசாங்க ரீதியில் இதனைத் தடுத்துச் சட்டம் கொணர அடிகோலியது.

இதைக் காட்டிலும் கல்வித் துறைக்கு அவர் செய்த பணியை நாடு என்றென்றும் மறக்க முடியாது. பாரத மக்கள் வெறும் கிணற்றுத் தவளையாக இருக்கக் கூடாது என்று ஸ்ரீ ராய் விரும்பினார். நம் நாட்டு மக்களுக்கு ஆங்கில அறிவு புகட்டப்பட வேண்டும், அது வெறும் ஏட்டுப் படிப்பாக இருக்கக் கூடாது, விஞ்ஞான வளர்ச்சியையும் கலாசாரச் சிறப்புக்களையும் கொண்டதாக அமைய வேண்டும் என்று துணிவுடன் முனைந்தார். மக்கள் ஆங்கிலம் கற்றுத்தான் ஆங்கிலேய ஆட்சியை இம்மண்ணிலிருந்து நீக்க முடியும் என்று உணர்ந்து, தமது சொந்தச் செலவிலேயே ஓர் ஆங்கிலக் கல்விக்கூடத்தை நிறுவியதோடு புகழ்பெற்ற கல்கத்தா ஹிந்து கல்லூரிக்கும் வித்திட்டார்.

ராம்மோகன்ராய் மக்களிடையே சமூக, பொருளாதார, கல்வி, விஞ்ஞானத் துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த வங்காள மொழியில் 'ஸம்வாத் கௌமுதி' என்றும் பாரசீக மொழியில் 'மீரத் உல் அக்பார்' என்றும் இரு பத்திரிகைகள் நடத்தினார். இந்தியர்கள் நீதித் துறையில் பெரும் பதவி பெற வேண்டும் என்பதற்காக இயக்கம் நடத்தி வெற்றி கண்டார்.


பத்திரிகை விதிகள் என்ற பெயரால் கட்டுப்பாடுகள் கொண்டு வந்தது ஆங்கிலேய அரசு. அதை வீறுகொண்டு எதிர்த்தார்.

மாற்றுருக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டுபவர்களுக்கு எத்தனை எதிர்ப்புக்களும் இன்னல்களும் ஏற்படக் கூடுமோ, அத்தனையும் ஏற்பட்டு அவற்றிலிருந்து புகுந்து புறப்பட்ட வெற்றி வீரர் ஸ்ரீ ராம் மோகன்ராய்.

இருநூறு ஆண்டுகளாக நிலைத்திருக்கும் ராஜாராம் மோகன்ராயின் புகழ், சரித்திரம் எழுதப்படுமளவும் நீடிக்கும்.

— ரா. வீ.

ஆதாரம்: அருண்ஷோரியின் கட்டுரை



மனிதப் பிறவியும் வேண்டுவதே

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

[இம்மாதம் 17ந் தேதி தேசமெங்கிலும் ஸ்ரீ சங்கர ஜயந்தி மகோற்சவம் நடந்தேறியது]

ஆசார்ய: சங்கராசார்ய: ஸந்துமே ஜன்ம ஜன்மனி:

'எல்லாப் பிறவிகளிலும் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களே என் ஆசாரியராக இருக்க வேண்டும்' — என்று இதற்கு அர்த்தம். புனர் ஜன்மம் இல்லாமல் பரமாத்மாவில் கலந்து விடவேண்டும் என்பதே பொதுவாகப் பிரார்த்திக்கப்படுவது. ஆனால் ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் ஒவ்வொரு ஜன்மாவிலும் ஆசாரியராக அமைவார் என்றால் எத்தனை பிறவியும் எடுக்கலாம் என்று இந்த சுலோகம் சொல்வது போலிருக்கிறது. நடராஜாவைப் பார்த்துக்கொண்டே இருப்பதற்காக 'மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று அப்பர் சுவாமிகள் சொன்னது போலிருக்கிறது.

ஸ்ரீ சங்கரரும் இதே ரீதியில் 'சிவானந்த லஹரி'யில் ஒரு சுலோகத்தில் பிரார்த்திக்கிறார்:

நரத்வம் தேவத்வம் நகவன ம்ருகத்வம் மசகதா
பசுத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதி ஜனனம்!
ஸதா த்வத் பாதாப்ஜ ஸ்மரண பரமாநந்த லஹரீ
விஹாராஸக்தம் சேத் ஹ்ருதயமிஹ கிம்தேன வபுஷா!!

'பரமேசுவரனின் பாதாரவிந்தத்தை ஸ்மரித்து, அந்த ஆனந்த வெள்ளத்தில் முழுகி இருப்பதற்குத் தடையில்லை எனில், நான் எந்தப் பிறவியும் எடுக்கத் தயார். மனிதனாகவோ, தேவனாகவோ, செடி கொடியாகவோ, விலங்காகவோ, கொசுவாகவோ மாடாகவோ, கிருமியாகவோ, பட்சியாகவோ எந்தப் பிறவி வாய்த்தாலும் - சரி. இருதயத்தில் ஈசுவர ஸ்மரணானந்தம் வெள்ளமாகப் பாய்ந்தால் சரீரம் எப்படி இருந்தால் என்ன?' என்கிறார் ஸ்ரீ ஆசார்யாள்.

'ஆசார்யாள்' என்று சொன்னாலே இந்தத் தேசத்தில் ஸ்ரீ சங்கராசாரியர்களைத்தான் குறிப்பிடுகிறது. இதிலிருந்தே அவரது மகிமை தெரிகிறது. பீஷ்மாசாரியார், துரோணாசாரியார், ராமானுஜாசாரியார் இன்னும் எத்தனையோ ஆசாரியர்கள் இருந்தாலும் ஒரு பெயரையும் சேர்க்காமல் 'ஆசாரியாள்' என்றால் அது நம் பகவத்பாதாள் என்றே அனைவரும் புரிந்து கொள்கிறார்கள். 'சாஸ்திர அர்த்தங்களை எடுத்துச் சொல்லி, பிறரை ஆசாரத்தில் நிலைநிறுத்துவதோடு, எவனொருவன் தானே அந்த ஆசாரங்களை அநுஷ்டித்துக் காட்டுகிறானோ அவனே ஆசாரியன்' என்று ஆசார்ய பதத்துக்கு லக்ஷணம் (defenition).

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் அத்வைதத்தை பரம தத்துவமாக ஸ்தாபித்தார், நாமும் "எல்லாம் ஒன்று, பேதமேயில்லை" என்று பிரமாதமாக வேதாந்தம் பேசுகிறோம். ஆனால் யதார்த்தத்தில் இந்த ஏகமான ஸத்வஸ்துவின் ஞானம் நமக்கு வரவில்லை. ஆசாரியாள் பக்தி மார்க்கத்தையும் நிலைநிறுத்தினார். க்ஷேத்திரம் க்ஷேத்திரமாகச் சென்று ஸ்தோத்திரம் செய்தார். நாமும் பக்தி பண்ணுகிறோம். ஆனால் எப்படி? கஷ்டம் வந்தால் அது நிவிருத்தியாகப் பெரிய பூஜை, சாந்தி எல்லாம் செய்கிறோம். நமக்கு உண்மையான ஞானமும் பக்தியும் வருவதற்கு வழி என்ன? இதற்கெல்லாம் அடிப்படையாக ஆசாரியாள் கர்மாநுஷ்டானத்தை விதித்தார். அதை விட்டு விட்டு நாம் செய்கிற பக்தி, ஞானம் எதுவுமே நிலைத்து நிற்கக் காணோம். அவரவரும் உரிய கர்மத்தை ஆசாரங்களோடு பின்பற்றினால்தான் மனதில் ஒழுக்கம், கட்டுப்பாடு, சித்த சுத்தி எல்லாம் உண்டாகிப் பிறகு பக்தியும் ஞானமும் சித்திக்கும். பகவத்பாதர்கள் அத்வைத ஞானம், உபாசனை இவற்றைச் சொன்னதோடு வைதிக கர்மாநுஷ்டானத்தை விதித்து, தாமும் யதி தர்மங்களைப் பூரணமாகப் பின்பற்றிக் காட்டியதால் தான்' ஆசாரியாள்' என்பதன் பூரண லட்சணத்தையும் பெற்றிருக்கிறார்.

'ஆசாரியாள்' என்ற மாத்திரத்தில் ஸ்ரீ சங்கராசாரியர்கள் என்று நாம் அர்த்தம் செய்து கொள்வது போலவே, வெளிநாடுகளில் எல்லாம் 'வேதாந்தம்' என்ற மாத்திரத்திலேயே ஆசாரியாளின் அத்வைத மார்க்கம் என்றே அர்த்தம் செய்து கொள்கிறார்கள். வேதாந்தமாகிய உபநிஷதங்களை அடிப்படையாகக் கொண்டு பல சித்தாந்தங்கள் இருந்தபோதிலும், ஆசாரியர்கள் அவலம்பித்த அத்வைதத்துக்கே இந்தப் பெருமை ஏற்பட்டிருக்கிறது. "வேதாந்த

ஸிம்மம் கர்ஜனை செய்யட்டும்'' (Let the lion of Vedanda roar) என்று சொல்லிக் கொண்டு விவேகானந்தர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அத்வைதத்தைப் பிரசாரம் செய்ததிலிருந்து நம் ஆசாரியர்களின் மதம் சர்வ சம்மதமாகிவிட்டது! ஆனால் இது நாம் புதிதாகச் செய்த மதமல்ல, உபநிஷத தாத்பரியமே என்று ஆசாரியாள் விளக்கியிருக்கிறார்.

அத்வைத மதத்தோடு, ஷண்மதங்களையும் ஸ்தாபித்தது ஆசாரியாளின் இன்னொரு பெருமை. தெய்வ பேதம் என்பதே இல்லாமல் ஈசுவரன், அம்பாள், மகாவிஷ்ணு, விக்நேசுவரர், சுப்பிரமணியர், சூரியன் ஆகிய ஆறு தெய்வங்களின் உபாஸனையையும் ஒழுங்குபடுத்தித் தந்து ஷண்மதாசாரியர் ஆனார்.

ஆசாரியாளின் தனிப் பெருமை இன்னொன்றும் உண்டு. இன்று நம் தேசத்தில் இருக்கிற விசிஷ்டாத்வைதம், த்வைதம், சைவ சித்தாந்தம் முதலிய சித்தாந்தங்களை ஸ்திரப்படுத்திய ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ மெய்கண்டார் முதலியவர்கள் நம் ஆசாரியாளுக்குப் பிற்பாடு தோன்றியவர்கள். ஆனால் நம் ஆசாரியாளுக்கு முன்னால் தோன்றிய கபிலர், ஜைமினி, கணாதர், கௌதமர் ஆகியோர் ஸ்தாபித்த சாங்கியம், மீமாம்சை, வைசேஷிகம், நியாயம் முதலிய மதங்கள் ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுக்குப் பின் இருந்த இடம் தெரியாமலே போய்விட்டன. ஆசாரியாள் அவற்றை அடியோடு நிராகரணம் செய்துவிட்டார். அவருக்குமுன் தோன்றியிருந்த புத்த, ஜைன மதங்களையும் வென்று வைதிக தர்மத்தை நிலைநாட்டினார். முப்பத்திரண்டு வயதுக்குள் இத்தனை காரியங்களைச் செய்த ஆசாரியாள் பரமேசுவர அவதாரமே.

ஆசார்ய: சங்கராசார்ய: ஸந்து மே ஜன்ம ஜன்மனி







1. திருப்பதி தியாகராஜ விழாக் குழுவினர் ஏப்ரல் 16ந் தேதி நடத்திய வைபவத்தில் சங்கீத கலாநிதி சித்தூர் திரு சுப்பிரமணிய பிள்ளை தமது குரு காஞ்சிபுரம் நாயனப் பிள்ளை அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். 2. இவ்வைபவத்தில் சித்தூராருக்கு முடிகொண்டான் மாலை சூட்டி மகிழ்கிறார். 3. காஞ்சிகாமகோடிபீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கன்யாகுமரிக்கு விஜயம் செய்தார். விவேகானந்தா பாறை நினைவுக் கமிட்டியின் நிர்வாகக் காரியதரிசி ஸ்ரீ ஏகநாத் ரானடேக்கும், நினைவாலயத்தின் பிரதம கட்டடக் கலை நிபுணர் திரு எஸ். கே. ஆசாரிக்கும் புதும் பெரியவர்கள் விருதும் பொன்னாடையும் வழங்கிக் கௌரவித்தார்கள்.


மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச்
சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கனமிக்கது ரின்:
சோப்பைவிட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்-
திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக்
கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள
ஆடவரின், பெண்டிரின், குழந்தையரின்...யாவரின் துணிகளிலும்
மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பைவிட அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

எஃகிலும் காலங்களின் மாறுதலுக்கேற்ற முன்னேற்றம்



போர்வாளிலிருந்து தொடங்கி "விஜயந்தா" டாங்க் தயாரிப்பு வரை மனித சமுதாயம் பெருமளவு முன்னேறியிருக்கிறது. அதற்கேற்றவாறு எஃகும் இதுவும் முன்னேறியிருக்கிறது. பண்டைக்காலத்து முறைப்படி மூலப் பொருளை உருக்கி இரும்பு தயார் செய்யப் பட்டது. ஆனால் இன்று நவீன விஞ்ஞான முறைப்படி விசேஷ தேவைகளுக்கேற்றவாறு விசேஷமான எஃகுகள் உருவாகின்றன. விமானங்களுக்கு—க்ரோம் மோலிப்டினம் எஃகு. துப்பாக்கி குண்டுகள் புக முடியாத போர்க் கவசத்திற்கு—[illegible] எஃகு. பாலங்களுக்கு—ஹை டென்ஸைல் எஃகு. 64 ஆண்டுகளுக்கு முன் எங்களுடைய முதல் உலைக்களத்தில் வார்க்கப் பட்ட தீ கிரம் மாறி உருமாறி, முன்னேற்றத்தின் புதிய வண்ணங்களுக்கு என்றென்றும் துணை நிற்கிறது.

டாடா ஸ்டீல்

TH. 3631 (A)


அலை ஓசை
அமரர் கல்கி
இரண்டாம் பாகம்
புயல்



அகண்ட காவேரிக் கரையை யடுத்து ராஜம்பேட்டை என்று ஒரு கிராமம் இருந்தது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பட்டாமணியம் கிட்டாவய்யர் நல்ல மனிதர்; பரோபகார சீலர்; சுற்றுப்புறங்களில் செல்வாக்கு உள்ளவர்.

கிட்டாவய்யருக்கு இரு சகோதரிகள். அவர்களில் அபயாம்பாள் பக்கத்திலிருந்த கிராமத்தில் ஒரு வைதிக குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். ராஜம்மாளின் கணவர் துரைசாமி ஐயர் பம்பாயில் ரயில்வே உத்தியோகம் பார்த்து வந்தார்.

கிட்டாவய்யருக்குக் கங்காதரன், சூரிய நாராயணன் (சூரியா), சுப்பிரமணியன் (சுண்டு) என்னும் மூன்று புதல்வர்களும் லலிதா என்ற ஒரு குமாரியும் இருந்தனர். லலிதாவுக்கு விவாக வயது ஆகியிருந்தது. அவளுக்குக் கல்யாணம் செய்யக் கிட்டாவய்யர் தீவிரமாக வரன் தேடிக் கொண்டிருந்த போது பம்பாய் ராஜம்மாளுக்கு உடம்பு அதிக அசௌக்கியம் என்று கடிதம் வந்தது.

சென்னை - பத்மாபுரத்தில் மாஜி ஸப் ஜட்ஜ் பத்மலோசன சாஸ்திரி சமூகப் பிரமுகர். அவருடைய குமாரன் சௌந்தரராகவன் பி.ஏ. (ஆனர்ஸ்) டில்லி சர்க்காரின் பொருளாதார இலாகாவில் நல்ல உத்தியோகத்தில் இருந்தான். கிட்டாவய்யர் தம்முடைய குமாரி லலிதாவுக்காக ராகவனை வரன் பார்த்தார். லலிதாவை அவருக்கும் பிடித்திருந்தது. பிறகு கிட்டாவய்யர் பம்பாய்க்குத் தம்முடைய சகோதரி ராஜம்மாளைப் பார்க்கச் சென்றார்.

ராஜம்மாள் இல்வாழ்க்கையில் அவ்வளவு சந்தோஷத்தை அடைந்தவளல்ல. அவளுடைய புருஷன் துரைசாமி ஐயரின் ஒழுக்கத்தைப் பற்றியும் அவளுக்குப் பல ஐயங்கள் இருந்தன. அவளுடைய ஏக புதல்வி சீதாவிடம் உயிரை வைத்திருந்ததுடன் அவளை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால் தான் நிம்மதியாகக் கண்ணை மூடலாம் என்று எண்ணியிருந்தாள்.

ராஜம்மாள் நோயாகப் படுத்திருந்தபோது வடக்கத்தியானாகத் தோன்றிய ஒரு ஸ்திரீ வந்து ராஜம்மாளிடம் அவளுக்குத் தான் ஏதோ தீங்கு செய்துவிட்டதாக மர்மமாகச் சொல்லிவிட்டுச் சீதாவின் கல்யாணத்துக்காக இரண்டாயிரம் ரூபாய் பணமும் ஒரு விலையுயர்ந்த ரத்தின ஹாரமும் கொடுத்துவிட்டுப் போனாள். அவளுடைய கைப்பையைத் திறந்தபோது எடுத்து வைத்த விசித்திரப் பிடியுள்ள கத்தி ராஜம்மாளுக்குப் பயங்கரத்தை உண்டாக்கியது.

கிட்டாவய்யர் ராஜம்மாளைத் தம்முடன் கிராமத்துக்கு அழைத்துப் போவதாகச் சொன்னார். வைத்தியம் செய்த டாக்டரும் துரைசாமி ஐயரும் வற்புறுத்தியதன் பேரில் ராஜம்மாள் சீதாவையும் அழைத்துக் கொண்டு கிட்டாவய்யருடன் ராஜம்பேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

சௌந்தர ராகவன் 1931-ல் கராச்சி காங்கிரஸின்போது தாரிணி என்னும் மங்கையைச் சந்தித்தான். தேசசேவிகை தாரிணி அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். கராச்சியிலிருந்து பம்பாய்க்குக் கப்பலில் பிரயாணம் செய்கையில் தாரிணிக்கும் ராகவனுக்கும் நட்பு முதிர்ந்தது.

ராகவனுடைய தாயார் காமாட்சி அம்மாள் அவனிடம் உயிரை வைத்திருந்தாள். அவளுடைய மூத்த நாட்டுப் பெண் மாமியாருடன் சண்டை போட்டுக் கொண்டு தன் புருஷனையும் அழைத்துக் கொண்டு தகப்பனார் வீட்டுக்குப் போய்விட்டாள். இதனால் மனமுடைந்திருந்த காமாட்சியம்மாள் ராகவனையே நம்பியிருந்தாள். அவன் சாதி தெரியாத வடநாட்டுத் தாரிணியை மணந்து கொள்வது என்பது அவளால் சகிக்க முடியவில்லை. தாரிணி பத்மாபுரத்துக்கு வந்திருந்தபோது அவளிடம் காமாட்சி அம்மாள் ஏதேதோ சொல்லி ராகவனிடம் சொல்லிக் கொள்ளாமலே திரும்பிப் போகும்படி செய்து விட்டாள். தாரிணி ரயில் பிரயாணத்தின் போது எழுதிய கடிதத்தில் பீஹார் பூகம்பத்தினால் கஷ்டப்பட்டவர்களுக்குச் சேவை செய்யப் போவதாகச் சௌந்தரராகவனுக்குத் தெரிவித்திருந்தாள்.

காமாட்சி அம்மாளின் தூண்டுதலின் பேரில் ராகவன் கிட்டாவய்யர் பெண்ணைப் பார்ப்பதற்காக ராஜம்பேட்டைக்கு வந்தான். அங்கே லலிதாவுடன் பம்பாய் சீதாவையும் பார்த்தான். சீதாவைத்தான் தனக்குப் பிடித்திருக்கிறதென்றும் பணங்காசு எதிர்பாராமல் அவளை மணந்து கொள்ளத் தயார் என்றும் தெரிவித்தான்.

லலிதாவின் தாயார் சரஸ்வதி அம்மாள் ஏற்கனவே சீதா தன் குமாரியைவிட அழகாகவும் சமர்த்தாகவும் இருப்பது பற்றி அசூயை கொண்டிருந்தாள். இப்போது அவளுடைய ஆக்ரோஷம் பொங்கிற்று. ஆனால் சீதாவிடம் அளவில்லாத சிநேகம் பற்றுக் கொண்டிருந்த லலிதா அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. சீதாவின் பக்கம் அவள் பலமாகப் பரிந்து பேசினாள்.

லலிதாவின் தமையன் சூரியா பிராயத்துக்கு மேற்பட்ட அறிவு முதிர்ச்சியுடையவன். அத்தை ராஜம்மாளிடமும் அத்தங்காள் சீதாவிடமும் அவனுக்கு அதிக அபிமானம். அவன் தன்னுடைய தாயாரைச் சாந்தப்படுத்தினான்.

சூரியா தேவபட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தான். அங்கே வக்கீல் ஆத்மநாதய்யரின் மகன் பட்டாபிராமன், சூரியாவுக்கு நெருங்கிய சிநேகிதன். பட்டாபிராமன் ஏற்கனவே லலிதாவைப் பார்த்திருந்ததுடன் அவளை மணந்து கொள்ள

விருப்பம் கொண்டிருந்தாள். இதை அறிந்திருந்த சூரியா தன் பெற்றோர்களிடம் சொல்லி லலிதாவுக்கும் பட்டாபிராமனுக்கும் கல்யாணம் நிச்சயம் பண்ணி வைத்தான்.

ஒரே பந்தலில் ஒரே முகூர்த்தத்தில் சீதா, லலிதா இருவருடைய கல்யாணங்களும் நடைபெற்றன. எதிர்பார்த்தபடி துரைசாமி ஐயர் கல்யாணத்துக்கு முதல் நாள் வந்து சேரவில்லை. ஆகையால், ராஜம்மாளின் தமக்கையும் அவள் கணவரும் சீதாவைச் சௌந்தர ராகவனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்கள்.

முகூர்த்தத்துக்கு முதல் நாள் ராஜம்மாள் பெயருக்கு ஒரு தந்தி வந்தது. அதைச் சூரியா வாங்கிப் பிரித்துப் படித்தான். "சீதாவின் கல்யாணத்தை நிறுத்திவிடவும் -- துரைசாமி" என்று எழுதியிருந்தது. இதைப் பொய்த் தந்தி என்று சூரியா சந்தேகித்தபடியால், அதைப் பற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்கவில்லை.

சீதாவுக்கும் லலிதாவுக்கும் திருமாங்கல்யதாரணம் நடந்த பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் துரைசாமி ஐயர் வந்து சேர்ந்தார். அவரை முதலில் சூரியா வரவேற்றுக் கல்யாணம் நடந்த சந்தோஷ சமாசாரத்தையும் சொன்னான். "என்னுடைய தந்தி வரவில்லையா?" என்று துரைசாமி ஐயர் பரபரப்புடன் கேட்டார். "சற்று முன்னால்தான் ஒரு தந்தி வந்தது. கல்யாண நடபுடலில் அதைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை!" என்று சூரியா கூறித் தந்தியை அவரிடம் கொடுத்தான். அவர் அதைப் பிரித்துப் பார்த்து "இதுதான்!" என்று சொல்லித் தந்தியைக் கிழித்தெறிந்தார். "கடவுளுடைய சித்தம்; நாம் என்ன செய்யலாம்?" என்றார்.

தந்தையைப் பார்த்ததும் சீதா விம்மி விம்மி அழுதாள். ராகவன் அவளுடைய கரத்தைத் தொட்டு "சீதா!" என்றதும் அழுகை நின்றது.

பிறகு நாலு நாள் கல்யாணம் சிறப்பாகவும் குதூகலமாகவும் நடந்து முடிந்தது.

முதல் அத்தியாயம்

டில்லிப் பிரயாணம்

சென்னையிலிருந்து புறப்பட்டு நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு மேலே ஆனபடியினால் உட்கார்ந்து உட்கார்ந்து சலித்துப் போன பிரயாணிகளைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டும், பெருமூச்சு விட்டுப் புகையையும் கரித் தூளையும் கக்கிக்கொண்டும் சில சமயம் 'வீல்' என்ற சத்தமிட்டு அலறிக் கொண்டும் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் என்னும் பெயரினால் பிரசித்தி பெற்ற நீராவித் தொடர் வண்டி தண்டவாளத்தின் மீது நீள நெடுகச் சென்றது.

டில்லி ஸ்டேஷன் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரந்தான் இருந்தது. என்றாலும், அந்த ஒரு மணியும் ஒரு யுகமாக மேற்படி ரயிலில் பிரயாணம் செய்தவர்களுக்குத் தோன்றியது.

அவர்கள் எல்லாரிலும் அதிகமாக மனத்தில் அவசரமும் பரபரப்பும் கொண்டிருந்த சீதாவுக்கோ பாக்கியிருந்த அந்த ஒரு மணியும் ஒரு பிரம்ம யுகமாகத் தோன்றியது. மனிதர்களுக்கு ஒரு யுகம் பிரம்மதேவருக்கு ஒரு பகல் என்று கணக்கு. அப்படியென்றால் பிரம்ம யுகம் எவ்வளவு நீண்டது என்பதை நேயர்கள் கற்பனை செய்து கொள்ளலாம்.

அந்த கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டி ஒன்றில் சீதா பிரயாணம் செய்தாள். சீதாவின் மாமியார் காமாட்சி அம்மாளும் அதே வண்டியில் பக்கத்தில் இருந்தாள்.

காமாட்சி அம்மாளின் மடியைச் சிம்மாதனமாகக் கொண்டு வீற்றிருந்த இன்னொரு ஸ்ரீமதி யார்? அந்த ஸ்ரீமதியிடம் காமாட்சி அம்மாள் ஏன் அவ்வளவு பயபக்தி கொண்டிருக்கிறாள்? அவள் தன் தோளிலும் கன்னத்திலும் 'பளீர் பளீர்' என்று அடிப்பதை எதற்காகப் பொறுத்துக் கொண்டிருக்கிறாள்?

அப்புறம் நடப்பது இன்னும் விசித்திரமாயிருக்கிறது. காமாட்சி அம்மாளின் மடியில் வீற்றிருந்த ஸ்ரீமதியைச் சீதா கோபமாகப் பார்த்துப் பயமுறுத்துவதற்காகத் தன் மூக்கில் விரலை வைத்துக் கொண்டு, "வஸந்தி! இதோ பார்! பாட்டியை அடிக்காதே! தெரியுமா!" என்று அதட்டுகிறாள். உடனே சீதாவுக்கும் அந்த ஸ்ரீமதி இரண்டு அடி



கொடுக்கிறாள். மாமியார், மருமகள் இருவரும் பலமாகச் சிரிக்கிறார்கள்.

''லயிலு கயவைத் தற! கயவைத் தறக்காத்தா அப்பித்தான் அய்ப்பேன்'' என்று ஸ்ரீமதி வஸந்தி மழலை மொழி பேசியதும் நமக்கு ஒருவாறு விஷயம் புரிகிறது.

ஸ்ரீமதி வஸந்தா தேவி காமாட்சி அம்மாளின் கண்ணுக்குக் கண்ணான செல்லப் பேத்தி. ஸௌந்தர ராகவனும் சீதாவும் பெற்றெடுத்த சிமந்த புத்திரி. இப்போது அவளுடைய பிராயம் இரண்டு வருஷம், ஆறு மாதம்.

பாட்டியையும் அம்மாவையும் வஸந்தி மாற்றி மாற்றி அடித்ததற்குக் காரணம் என்னவென்பதை நேயர்கள் அவளுடைய மழலைப் பேச்சிலிருந்து ஊகித்திருப்பார்கள். ரயிலின் பலகணி வழியாகக் குழந்தை வெளியே எட்டிப் பார்க்கிறாள் என்பதற்காகக் காமாட்சி அம்மாள் பலகணிக் கதவை மூடியிருந்தாள். மூடிய கதவைத் திறக்க வேண்டும் என்பது வஸந்தியின் கட்சி. இரண்டு பக்கமும் ஜன்னல் வழியாகப் பார்க்க முடியாவிட்டால் ரயில் பிரயாணம் செய்வதன் உபயோகம்தான் என்ன என்பது வஸந்தியின் கேள்வி. இதற்குத் தக்க பதில் சொல்ல முடியாத காரணத்தினால் காமாட்சி அம்மாள் சீக்கிரத்திலேயே ஜன்னல் கதவைத் திறக்கும்படி நேர்ந்தது.

கதவைத் திறந்ததும் வஸ்ந்தி தன் சின்னஞ் சிறு கையின் பட்டுப் போன்ற மிருதுவான ஆள்காட்டி விரலை வெளியிலே சுட்டிக் காட்டி, ''அம்மா! அது என்ன? பாத்தி! அது என்ன?'' என்று கேட்டாள்.

''அது ஒரு பழைய காலத்துக் கோட்டை!'' என்றாள் சீதா.

''கோத்தைன்னா என்ன?'' என்று வஸந்தி கேட்டாள்.

''கோட்டைன்னா கோட்டைதான்! உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது. சூரியா மாமாதான் வர வேணும்'' என்றாள் சீதா.

'' சூரியா மாமாவைக் கூப்பிது, அம்மா!'' என்றாள் வஸந்தி.

''இப்போது கூப்பிட்டால் அவருக்குக் காது கேட்காது. ரயில் நின்ற அப்புறம் வருவார். கொஞ்ச நேரம் சும்மா இரு!'' என்றாள் சீதா.

''லயிலு நின்னா அப்பதும் எதுக்கம்மா வதணும்? லயிலு ஓதறபோதே மாமா வந்தா என்ன?''

''ரயிலு ஓடுகிறபோதே வந்தால் உன் தலையில் ஒரு குட்டு!'' என்று சீதா குழந்தையின் தலையிலே ஒரு செல்லக் குட்டுக் குட்டினாள்.

''போ அம்மா!'' என்று சொல்லி விட்டு வஸந்தி மறுபடியும் வெளியே பார்க்க ஆரம்பித்தாள்.

வஸந்தியைப் போலவே வெளியே நோக்கிக் கொண்டிருந்த காமாட்சி அம்மாள், ''அதோ ஒரு கோட்டை! அங்கே ஒரு கோட்டை! எங்கே பார்த்தாலும் ஒரே கோட்டையா யிருக்கிறதே? சீதா! இதையெல்லாம் யார் கட்டியதோ?'' என்றாள்.

''பல ராஜாக்கள் கட்டியதாயிருக்கும் அம்மா! சுமார் ஆயிரம் வருஷம் டில்லிதான் இந்தியாவின் தலைநகரமாக இருந்தது. ஆக்ரா ஸ்டேஷன் தாண்டி வந்தோமே, அதற்கும் டில்லிக்கும் நடுவிலே இப்படித்தான் எங்கே பார்த்தாலும் இடிந்த கோட்டையா யிருக்கும்'' என்றாள் சீதா.

'' நம்முடைய தென் தேசத்திலே யாத்திரை போனால் இரண்டு பக்கமும் ஒரே கோவிலாக இருக்கும். ஐந்து நிமிஷத்துக்கு ஒரு கோபுரம் தெரியும். சிதம்பரத்திலே யிருந்து திருச்சினாப்பள்ளி போகிறவரைக்கும் ஒரு தடவை நான் கோயில் கோபுரங்களை எண்ணினேன், சீதா! மொத்தம் ஐந்நூறு கோயில் கோபுரத்துக்கு மேலே எண்ணினேன். இந்தப் பக்கத்திலே கோவில் என்கிற பேச்சே கிடையாது போலிருக்கிறது!''

''இந்த வழியிலே மதுரை — பிருந்தாவனத்திலே மட்டும் கோவில் இருக்கிறது.. அம்மா! அதிலும் பிருந்தாவனத்திலே இருக்கிற கோவில் நம்ம பக்கத்திலே யிருந்து வைஷ்ணவாள் வந்து கட்டியதாம். மற்றபடி இந்த வழியிலே கோயில் கிடையாதுதான். காசிப் பக்கம் போனால் ஏராளமான கோயில் இருக்குமாம்.''

''டில்லிப் பட்டணத்திலே கூடக் கோவில் கிடையாதா, சீதா?''

''கிடையாது, அம்மா! அவ்வளவு பெரிய பட்டணத்திலே ஒரு கோயிலைக் கூட நான் பார்க்கவில்லை. ரொம்ப காலமாய் டில்லியிலே துருக்க ராஜ்யம் தான் நடந்தது, அம்மா! அதனாலே டில்லியில் எங்கே பார்த்தாலும் மசூதிகளாயிருக்கும். மசூதி யில்லாவிட்டால் துருக்க ராஜாவைப் புதைத்த சமாதி இருக்கும். நான் பார்த்த வரையிலே டில்லியில் ஒரு கோவில்கூட என் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. யாரோ பிர்லா என்கிற பணக்காரச் சீமான்

...இட்டால் இதமளிப்பு



டெட்டால் அரவணைப்பு

காயங்களைத் தூய்மைப் படுத்துவதோடன்றி
ஆற்றவும் துணை டெட்டால்.

பட்ட காயம் எதுவாயினும் இட்டுப் பயன்காணத் தட்டாமல் உதவுவது டெட்டால். உங்கள் டாக்டரே கூறுவார்: ஒழுங்குதவறாமல் காயத்தின்மீது அடிக்கடி இட்டால், கிருமிகள் அணுகாமல் காக்க உதவுவது டெட்டால் ... பரிபூரணமான ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு அது.

குளி நீரிலே இட்டால்: புத்துணர்வூட்டுகிறது டெட்டால்.
க்ஷவரத்திற்கான நீரிலே: பாதுகாக்கிறது டெட்டால்.



புதுமைக் கோல டெட்டால் - பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு

லின்டாஸ்-DTL. 3 - 140 TM(R)

புதிதாகக் கோவில் கட்டுகிருர் என்று சொன்னுர்கள்.''

''தாஜ்மகால், தாஜ்மகால் என்று ஜபம் பண்ணுகிருயே, அதுவும் யாரோ ஒரு ராஜாவைப் புதைத்த இடந்தானே?''

உண்மையில் சீதாவின் மனம் அப்போது ''தாஜ்மகால்'' ஜபம் செய்யவில்லை. ரயில் ஓடும் சமயம் சக்கரங்கள் உருண்டு உருண்டு உருண்டு போகும் போது அந்தச் சத்தத்திலிருந்து ஒருவித சுருதியும் தாளமும் ஏற்படுகின்றன அல்லவா? அந்தச் சுருதிக்கும் தாளத்துக்கும் இசையச் சீதாவின் மனசு ''டில்லி ஜங்ஷன்'' ''சௌந்தரராகவன்'' என்று தான் ஜபம் செய்து கொண்டிருந்தது.

டில்லி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் தங்களுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு தன் கணவன் காத்திருப்பான் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. நீண்ட காலமாகப் பிரிந்திருந்த கணவனைச் சந்திப்பதில் அவளுக்கு இருந்த அவசரத்திலேதான் ரயில் வெகு மெதுவாகப் போவதாய் அவளுக்குத் தோன்றியது.

இவ்விதம் மனம் சௌந்தரராகவனிடம் லயித்திருந்தாலும், மாமியாரின் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமையைக் கருதியே பதில் சொல்லி வந்தாள்.

''இல்லை, அம்மா! தாஜ்மகால் ராஜாவைப் புதைத்த இடமல்ல; ராணியைப் புதைத்த இடம். துருக்க ராணிதான். ஷாஜஹான் என்னும் டில்லி பாதுஷாவுக்கு மும்தாஜ்மகால் என்று ராணி இருந்தாள். அவளிடம் பாதுஷாவுக்கு ரொம்ப ஆசை. அவள் இறந்த பின் ஷாஜஹான் வேறு கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அவளைப் புதைத்த இடத்தில் தாஜ்மகால் என்னும் அற்புதமான கட்டிடத்தைக் கட்டினுன். முழுவதும் வெள்ளைப் பளிங்குக் கல்லால் கட்டி அதில் பல வர்ணக் கற்களால் சித்திரப் பூ வேலைகள் செய்வித்தான். உலகத்திலேயே அவ்வளவு அழகான கட்டிடம் வேறு கிடையவே கிடையாதாம்!''

''நீ பார்க்கவில்லையா, சீதா!''


''இன்னும் பார்க்கவில்லை. முன்னே நான் இங்கே வந்திருந்தபோது முழுசாக மூன்று மாதங்கள்கூட இருக்கவில்லையே? 'தாஜ்மகாலுக்குப் போகலாம், போகலாம்' என்று உங்கள் பிள்ளை சொல்லிக் கொண்டிருந்தார். அதற்குள் சீமைக்குப் போக உத்தரவு வந்து விட்டது!''

''அதனுல் என்ன சீதா! இனிமேல் டில்லியில்தானே இருக்கப் போகிறீர்கள்? எப்போது இஷ்டமோ அப்போது போய்ப் பாருங்களேன்!''

''அதென்ன 'போய்ப் பாருங்களேன்' என்று சொல்கிறீர்கள்? நீங்களுந்தான் எங்களோடு வரவேண்டும். எல்லாருமாய்ப் போய்ப் பார்த்தால் போகிறது!''

''எனக்கு என்னத்துக்கடி அம்மா, இதெல்லாம்? ஏதாவது கோவில் குளத்துக்குப் போனுலும் பிரயோஜனம் உண்டு. தாஜ்மகாலும் கீஜ்மகா





லும் எனக்கு எதற்கு? நான் பார்த்து என்ன ஆகப் போகிறது?''

''அப்படிச் சொல்லாதீர்கள்! போய்ப் பார்த்தால் அதிசயப்படுவீர்கள். டில்லியில்கூட ஷாஜஹான் கட்டிய அரண்மனை இருக்கிறது. அதில் திவானிகாஸ் என்றும், திவானி ஆம் என்றும் இரண்டு இடங்கள் இருக்கின்றன. அவற்றை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். பதினாயிரம் கண்ணால் பார்த்தாலும் அலுக்காது. ஓரிடத்தில் ஷாஜஹானுடைய அந்தப்புரமாம். அதில் ராணிகள் குளிப்பதற்காகப் பளிங்குக் கல்லாலேயே குளங்களும், வாய்க்கால்களும் அருவிகளும் கட்டியிருக்கிறார்கள். அடடா! அந்த அற்புதத்தை நேரில் பார்த்தால்தான் அதன் மகிமை தெரியும்.''

''அது எவ்வளவு மகிமையாயிருந்தாலும் சரி, எனக்கு வேண்டாம். டில்லியில் கோவில் இல்லாவிட்டால் போகட்டும்; இந்தக் கண்மணிதான் (வஸந்தியைக் காட்டி) எனக்கு சுவாமி, அம்மன், கோவில், குளம் எல்லாம் என்று நினைத்துக் கொள்கிறேன். ஆனால் சீதா! டில்லிப் பட்டணத்தில் எப்போதுமே துருக்க ராஜாக்கள்தான் ஆண்டார்களா? ஹிந்து ராஜாக்கள் எப்போதுமே ஆளவில்லையா?''

''ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் டில்லியில் ஹிந்து ராஜாக்கள் இருந்தார்களாம். பிருதிவிராஜன் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''பிருதிவிராஜன் என்ற பெயரைக் கேட்ட மாதிரி இருக்கிறது. அதற்குமேல் ஒன்றும் ஞாபகம் இல்லை. நீ சொல், சீதா! பொழுது போகட்டும்!''

''டில்லியில் பிருதிவிராஜன் என்று ஒரு ராஜா இருந்தான். டில்லிக்குப் பக்கத்தில் இன்னொரு ராஜ்யத்தில் ஜயசந்திரன் என்ற ராஜா இருந்தான். ஜயசந்திரனுக்குச் சம்யுக்தை என்ற குமாரி இருந்தாள். ஜயசந்திரனுக்குப்

பிருதிவிராஜன் மீது ஜன்மப் பகை. ஆனால் ஜயச்சந்திரனுடைய குமாரி சம்யுக்தை பிருதிவிராஜன்பேரில் காதல் கொண்டு அவனையே கல்யாணம் செய்து கொள்ளுவதென்று தீர்மானித்திருந்தாள்...''

''அது எப்படி அவளுக்குப் பிருதிவிராஜன்பேரில் காதல் உண்டாயிற்று? அவர்கள் எப்போதாவது பார்த்துக் கொண்டது உண்டா?''

''இல்லை, அம்மா! பிருதிவிராஜனுடைய பராக்கிரமத்தையும் அழகையும் பற்றி சம்யுக்தை கேள்விப் பட்டிருந்தாள். நளனைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தமயந்தி காதல் கொண்டது போல் சம்யுக்தையும் பிருதிவிராஜன் பேரில் காதல் கொண்டாள்..''

''நல்ல காதல்! அப்புறம்?''

''அப்புறம் சம்யுக்தையின் கல்யாணத்துக்காக ஜயச்சந்திரன் சுயம்வரம் வைத்தான். அதற்கு ஐம்பத்து நாலு தேசத்து ராஜாக்களையும் அழைத்தான். ஆனால் டில்லி பிருதிவிராஜனை மட்டும் அழைக்கவில்லை. அழைக்காததோடு, பிருதிவிராஜனை அவமானப்படுத்துவதற்காக அவனைப் போல் ஒரு சிலை செய்து சுயம்வர மண்டபத்தின் வாசலில் காவல்காரனைப் போல் நிறுத்தி வைத்திருந்தான்!''

''சேச்சே! என்ன கேவலமான காரியம்! அவனுக்கு ஏன் அப்படிப் புத்தி போயிற்று?''

''போதாத காலம்தான். நம்முடைய இந்தியா தேசத்துக்கே போதாத காலம் அப்போது. சம்யுக்தை என்ன செய்தாள் தெரியுமா? கையில் மணமாலையுடனே ஒவ்வொரு ராஜாவாகப் பார்த்துக்கொண்டு வந்தாள். அவர்கள் கழுத்திலே யெல்லாம் மாலையைப் போடவில்லை. மண்டபத்தின் வாசலிலே பிருதிவிராஜனுடைய சிலை வைத்திருந்ததை அவளுடைய தோழி அவளுக்குச் சொல்லியிருந்தாள். மண்டப வாசலண்டை வந்ததும் சட்டென்று அந்தச் சிலைக்குப் பக்கத்தில் போய்க் கையில் இருந்த சுயம்வர மாலையைச் சிலையின் கழுத்தில் போட்டாள்!....''

''சுத்த அசட்டுப் பெண்ணாயிருக்கிறாளே! சிலையின் கழுத்திலே மாலையைப் போட்டு என்ன பிரயோஜனம்?''

''என்ன பிரயோஜனமா? கேளுங்கள் அம்மா! சிலையின் கழுத்திலே மாலையைப் போட்டதும் அதற்கு அந்த க்ஷணமே உயிர் வந்து விட்டது! சம்யுக்தையைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய்...''

''சிலைக்காவது, உயிர் வரவாவது? ஏதோ நிஜமாக நடந்த கதை சொல்கிறாய் என்றல்லவா நினைத்தேன்? விக்கிரமாதித்தன் கதை மாதிரி இட்டுக் கட்டிக் கதை சொல்கிறாயாக்கும்!''

''இல்லை, அம்மா! நிஜமாக நடந்த கதைதான்!''

''நிஜமாக நடந்த கதை என்றால் சிலைக்கு எப்படி உயிர் வந்திருக்கும்?''

''சிலைக்கு உயிர் வந்தது என்றால் உண்மையாகவே சிலைக்கு உயிர் வந்தது என்று அர்த்தமா?''

''பின் என்ன அர்த்தம்?''


''அந்தச் சிலைக்குப் பின்னால் நிஜப் பிருதிவிராஜன் ஒளிந்து கொண்டிருந்தான். சமயம் பார்த்து சம்யுக்தையைக் கொண்டு போவதற்காகவே அவன் வந்து காத்துக் கொண்டிருந்தான். உடனே அவன் சம்யுக்தையைத் தூக்கிப் பக்கத்திலே தயாரா யிருந்த குதிரையின்மேல் வைத்துக் கொண்டு பறந்தான். நிஜமாகப் பறந்தானா என்று கேட்காதீர்கள்! பறக்கிறது மாதிரி வேகமாகக் குதிரையை விட்டுக் கொண்டு போனான். அவனைப் பிடிப்பதற்காக ஜயச்சந்திரனும் அவனுடைய ஆட்களும் தொடர்ந்தார்கள். ஆனால் முடியவில்லை. பிருதிவிராஜனுடைய வீரர்கள் குறுக்கிட்டு அவர்களைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள்...''

''அப்புறம் பிருதிவிராஜனும் சம்யுக்தையும் கல்யாணம் செய்து கொண்டு ரதியும் மன்மதனையும் போல் சந்தோஷமாயிருந்தார்களாக்கும்!''

''அப்படி இருந்தால்தான் தேவலையே? இல்லவே இல்லை. அந்தக் காலத்திலே கோரி முகம்மது என்ற துருக்க ராஜா வடக்கே யிருந்து படையெடுத்து வந்தான். டில்லி வரையில் வந்துவிட்டான். அவனைப் பிருதிவிராஜன் நன்றாகத் தோற்கடித்துத் திருப்பி அனுப்பினான். முதலில் இரண்டு மூன்று தடவை இப்படி நடந்தது. அதற்கப்புறம் சம்யுக்தையின் தகப்பன் ஜயச்சந்திரன் கோரி முகம்மதுக்கு ஓலை அனுப்பினான், 'நீ மறுபடியும் படையெடுத்து வா! உனக்கு நான் உதவி செய்கிறேன்' என்று. கோரி முகமது, ஜயச்சந்திரன் இரண்டு பேரும் சேர்ந்து பிருதிவிராஜனுடன் யுத்தம் செய்தார்கள். பிருதிவிராஜன் கடைசி வரையில் சண்டை போட்டு யுத்த களத்தில் செத்து விழுந்தான்.''

''ஐயோ பாவம்! சம்யுக்தையின் கதி என்னவாயிற்றோ?''

''சம்யுக்தை தீயில் குதித்துப் பிராணனை விட்டாள். அது முதல் டில்லியில் துருக்க ராஜ்யம் ஏற்பட்டது. சீக்கிரத்தில் ஜயச்சந்திரனும் தன் ராஜ்யத்தை இழந்து துருக்க ராஜாவுக்கு அடிமையானான்.''



GOVAN/OCL/7113

''என்ன விபரீதம்? இதற்குத்தான் பெரியவர்கள் சொல்கிறதைக் கேட்டு நடக்க வேண்டும் என்கிறது. சம்யுக்தை தகப்பனர் சொன்னபடி கேட்டிருந்தால் இப்படி யெல்லாம் நடந்திராது அல்லவா?''

''அழகாயிருக்கிறதே, நீங்கள் சொல்வது? அது எப்படி சம்யுக்தையின்பேரில் பழியைப் போடுகிறீர்கள்? ஜயச்சந்திரன் செய்தது என்ன நியாயம்? மகளுடைய விருப்பப்படி அவளைக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தால் என்ன? அது மட்டு மல்லாமல் சொந்த மாப்பிள்ளையின் பேரில் துவேஷத்தினல் அன்னிய ராஜாவோடு சேர்ந்தானே? அது எவ்வளவு பெரிய துரோகம்? என்னைக் கேட்டால், கல்யாண விஷயத்தில் மட்டும் அப்பா அம்மா தலையிடுவது ரொம்பப் பிசகு என்று சொல்லுவேன். பெண்ணுயிருந்தாலும் சரி, பிள்ளையாயிருந்தாலும் சரி, அவர்களுக்குப் பிடித்திருப்பவர்களைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு அம்மா அப்பா குறுக்கே நிற்கக் கூடாது. அப்படிக் குறுக்கே நிற்பவர்களைச் சுண்ணும்புக் காளவாயில் போட்டுவிட வேண்டும்!''

இந்த வார்த்தைகள் காமாட்சி அம்மாளுக்கு ஒரு பழைய ஞாபகத்தை உண்டாக்கின. அவளுடைய முகம் கருங்கியது. இதைப் பார்த்த சீதா, ''அம்மா! உங்களுக்குத் தலை வலிக்கிறதா, என்ன?'' என்று கேட்டாள்.

''இல்லை'' என்று சொன்னுள் காமாட்சி அம்மாள். பிறகு, ''நீ சொல்றது அவ்வளவு சரியில்லை, சீதா! தாயார் தகப்பனர் சொல்றதே எப்போதும் தப்பா யிராது! குழந்தைகளின் நன்மைக்காகத்தான் சொல்லுவார்கள். குழந்தைகள் சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருக்க வேண்டும் என்றுதானே தாயார் தகப்பனுருக்கு இருக்கும்? எல்லாரும் ஜயச்சந்திரனைப் போல் இருக்க மாட்டார்கள். குழந்தைகள் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்றுதான் பெற்றவர்கள் யோசனை செய்து சொல்லுவார்கள்!'' என்றாள்.

''வாஸ்தவம்தான், அம்மா! எல்லாரும் ஜயச்சந்திரனைப் போல் இருப்பார்களா? இப்போது என்னுடைய கல்யாணத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். உங்கள் பிள்ளையின் இஷ்டம் போல் நீங்கள் விட்டதனால்தானே நடந்தது? இல்லாவிட்டால் நடந்திருக்குமா?'' என்றாள் சீதா.

மறுபடியும், காமாட்சி அம்மாளின் மனத்தில் சுருக்கென்று தைத்தது. எனவே அவள் பேச்சை மாற்ற விரும்பினாள்.

''சூரியாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையே, சீதா! ஏன் ஆகவில்லை என்று உனக்கு ஏதாவது தெரியுமா? குற்றம் குறை ஏதேனும் உண்டா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. சூரியாவுக்கு அப்படி யொன்றும் வயதாகி விடவில்லையே? இருபது அல்லது இருபத்தொன்றுதான் இருக்கும். ஆனால் அவனிடம் கல்யாணத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தவர்களிடம், 'நான் கல்யாணமே பண்ணிக்கொள்ளப் போவதில்லை' என்று சொல்லிக் கொண்டிருக்கிறான்.''

''பசங்கள் எல்லாமே கொஞ்ச காலம் அப்படித்தான் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். இட்டிமுட்டி வரும்போது சரி என்று சொல்லிவிடுவார்கள். சூரியா எதுவரையில் படித்திருக்கிறான்?''

''பி.ஏ. படித்துக் கொண்டிருந்தான். இப்போது படிப்பை விட்டுவிட்டான்.''

''ஏன் விட்டு விட்டான்? படிப்பு வரவில்லையோ? சூரியாவைப் பார்த்தால் கொஞ்சம் அசடு போல்தான் தோன்றுகிறது.''

''பார்ப்பதற்குச் சூரியா அப்படித்தான் இருப்பான். ஆனால், உண்மையில் அசடு இல்லை, அம்மா! ரொம்பக் கெட்டிக்காரன். **என் கல்யாணம் நடந்ததே அவனால்தான் என்று சொல்ல வேண்டும்.** உங்கள் பிள்ளை 'லலிதாவைப் பிடிக்கவில்லை; சீதாவைத்தான் பிடித்திருக்கிறது' என்று சொன்னதும் என் மாமாவும் மாமியும் மிக்கக் கோபம் அடைந்து விட்டார்கள். அவர்களைச் சூரியாதான் சமாதானப் படுத்தினான்.''

''உன் மாமாவும் மாமியும் கோபித்துக்கொண்டால் கல்யாணம் நின்று போய்விடுமா? கடவுள் யாருக்கு யார் என்று முடி போட்டிருக்கிறாரோ அந்த மாதிரிதான் நடக்கும். அது இருக்கட்டும், சீதா! சூரியா ஏன் படிப்பை விட்டு விட்டான்?''

''அவனுக்கு என்னவோ இங்கிலீஷ் படிப்புப் பிடிக்கவில்லையாம். பி.ஏ. பாஸ் செய்துவிட்டால் அப்பாவும் அம்மாவும் ஏதாவது உத்தியோகம் பார்க்கும்படி வற்புறுத்துவார்களாம். யாராவது பெண்ணைக் கொடுக்கிறேன் என்று வந்து அவனைத் தொந்தரவு செய்வார்களாம்....''

''பெண்ணைக் கொடுக்கிறேன் என்று வந்தால் அது ஒரு தொந்தரவா? நான் கூட என் தம்பி பெண்ணுக்குப் பார்க்கச் சொல்லலாம் என்றுதான் இவ்வளவு

தூரம் சூரியாவைப் பற்றிக் கேட்கிறேன். படிப்பை விட்டு விட்டு உத்தியோகம் பார்க்காமல் அவன் வேறு என்ன செய்யப் போகிறானாம்?''

''இந்தப் பக்கத்தில் எங்கேயோ காங்கிரஸ் நடக்கிறதாம். அதற்காக வருகிறானாம். ஆனால் திரும்பி ஊருக்குப் போகப் போவதில்லையாம். டில்லியிலேயே தங்கியிருந்து பத்திரிகைகளுக்கு எழுதலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறானாம்.''

''ஓகோ! பத்திரிகைக்கு எழுதுவானா என்ன? அவ்வளவு கெட்டிக்காரனா? அப்படியென்றால் தேவலையே? சீதா! ராகவன் பத்திரிகைக்கு எழுதினதால்தான் அவனுக்குப் பெரிய உத்தியோகம் கிடைத்தது என்று உனக்குத் தெரியுமோ, இல்லையோ?''

''உங்கள் பிள்ளையையும் இவனையும் ஒன்றாகச் சொல்லாதேயுங்கள். அவரைப் போல் இவனுக்குப் படிப்பு உண்டா? அவ்வளவு சாமர்த்தியம்தான் உண்டா? ஏதாவது காமா சோமா என்று தமிழ்ப் பத்திரிகைகளுக்கு எழுதுவான் போலிருக்கிறது!''

இந்தச் சமயத்தில் ரயில் 'வீல்' என்று சத்தமிட்டுக் கொண்டு கொஞ்சம் மெதுவாயிற்று. தூரத்தில் அநேக ஜனங்கள் ஏககாலத்தில் இரைச்சல் போடும் சத்தமும் வேறு பல ஓசைகளும் கேட்டன. சீதா ரயிலுக்கு வெளியில் எட்டிப் பார்த்தாள்.

''அம்மா! அம்மா! டில்லி ஸ்டேஷன் அதோ தெரிகிறது. உங்கள் பிள்ளை ஸ்டேஷனுக்கு வந்திருப்பார் இல்லையா?'' என்று கேட்டாள்.

''வந்திருக்கிறானோ அல்லது ஆபீஸில் அதிக வேலை என்று வேறு யாரையாவது அனுப்பி வைக்கிறானோ?''

''அதெல்லாம் இல்லை. அவர் கட்டாயம் ஸ்டேஷனுக்கு வந்திருப்பார்!'' என்றாள் சீதா.

''உனக்குத்தான் தெரியுமே? பின்னே என்னை எதற்காக அதைப் பற்றிக் கேட்கிறாய்?''

இந்தச் சம்பாஷணையின் ஆரம்பத்திலேயே வஸந்தி தூங்கிப் போய்விட்டாள். குழந்தையைச் சீதா தட்டி எழுப்பி, ''வஸந்தி, வஸந்தி! டில்லி வந்து விட்டது. அப்பா பிளாட்பாரத்தில் வந்திருப்பார்! எழுந்திரு; எழுந்திரு!'' என்றாள்.

காது செவிடுபடும்படியான பல வகை இயந்திரச் சத்தங்களுக்கும் மனிதரின் கூக்குரலுக்கும் மத்தியில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் டில்லி ஸ்டேஷனுக்குள் பிரவேசித்தது. (தொடரும்)

தீர்ந்தது கணக்கு

நாடக நிகேதன் குழுவினர் அண்மையில் நிகழ்த்திய ''தீர்ந்தது கணக்கு'' என்ற பரபரப்பூட்டும் நிகில் நாடகம் அருமையாயிருந்தது.

கிரிமினல் வக்கீல் பாஷ்யம், கொலை செய்ததாகக் கருதப்படும் இளைஞன் ஸ்ரீதரனுக்காகக் கோர்ட்டில் ஆஜராகுமுன் அவனைத் தம் வீட்டில் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்கிறார். அப்பொழுது மேடையில் அசல் வக்கீலைப் பார்ப்பது போலவே இருந்தது. நீதிமன்றத்தில் சாட்சியை மிரட்டி உருட்டித் தம் வழிக்குக் கொண்டு வரும் கிரிமினல் வக்கீலின் வாதத் திறமை நன்கு வெளிப்பட்டது. இந்த நாடகத்தை எழுதிய குமார்தான் கிரிமினல் வக்கீல் பாஷ்யமாக வந்து சக்கைப் போடு போட்டார் என்பது பாராட்டிற்குரிய விஷயம். Witness for the Prosecution என்ற பிரபல ஆங்கில நாடகத்தின் தமிழாக்கமே இது.



பப்ளிக் பிராஸிக்யூடர் தாத்தாச்சாரியார் ஆசனத்திலிருந்து எழுந்து வாதம் செய்யத் தொடங்கும் போது அவர் மட்டும் அல்ல, அவர் தலைப்பாகைகூட அபாரமாக நடித்துப் பாராட்டைப் பெற்றுவிட்டது. அந்தப் பாத்திரத்தை ஏற்ற டி. எஸ். ராமானுஜத்துக்கு நம் பாராட்டுக்கள். கனகதுர்க்காவின் கவர்ச்சியும் நடிப்பும் நாடகக் கதையில் பயன்படுத்துவதற்குப் பதிலாக நீதிமன்றத்துக் குற்றவாளிக் கூண்டில் துயரமும் சீற்றமும் பொங்கப் புதுமையான காட்சியாகத் தோற்றம் அளிக்கப் பயன்பட்டிருக்கின்றன.

கிரிமினல் வக்கீல் பாஷ்யத்தின் மனைவியாக வந்த கே. ஆர். தேவகி மேடை அனுபவம் மிக்கவர். அடிக்கடி வக்கீலின் ஆபீஸ் அறைக்கு வந்து அவரைச் சீண்டிவிட்டுக் கலகலப்பை ஏற்படுத்தினார்.

இந்த இரண்டு நடிகைகள் மட்டும் நாடகத்தில் இல்லையென்றால், நாடகம் முழுதும் ஹைகோர்ட்டில் உட்கார்ந்து பார்க்கும் வழக்கு விசாரணைக் காட்சியாகவே இருந்திருக்கும்!


என். எஸ். பார்த்தசாரதி, மிக மிக நல்லவனாகத் தோன்றும் உண்மை வில்லனை ஸ்ரீதரனாக நடித்தார். பாராட்டிற்குரிய நல்ல நடிப்பு.

இந்த நாடகத்தின் முக்கியமான குறை, முழு நாடகத்தையும் நீதிமன்ற விசாரணைக் காட்சிகளிலேயே காட்டிவிடுவதுதான். இதனால் நாடகத்தின் சுவை பெரிதும் குன்றிவிட்டது. நீதி மன்ற விசாரணைக் காட்சிகளுக்கு இடையே பின்னணிக் காட்சிகளாக (Flash back)க் காட்டும் அரிய வாய்ப்புள்ள கதை அம்சங்கள், பாத்திரங்களின் வாய்ச் சொல்லாகவே வெளிப்பட்டு வீணாகிவிட்டன.

கொஞ்சம் முயன்று புனைந்திருந்தால் இந்த நாடகம் ஒரு நாளும் தீர்ந்த கணக்காகி இருக்காது! பல முறை பல சபாக்களில் நடத்தப்படும் நல்ல வாய்ப்பையும், ரசிகர்களின் பாராட்டையும் பெற்றுச் சுவை மிகுந்த நாடகமாகக் கூடாவிட்டிருக்கும். -- காந்தன்



"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்..."



கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

கால்கேட் பற்பொடி நவீன பல் பராமரிப்பை சிக்கனமாக்குகிறது. அதன் குளுமையான, இன்மணத்தை நீங்கள் மிகவும் விரும்பு-வீர்கள். உங்கள் குடும்பத்திற்கு இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

TP.G. 30. TM

வியக்கத்தக்க விதிமுறை அறுவை சிகிச்சை இன்றியே மூலத்தைச் சுருக்க உதவுகிறது

நமைச்சலை நிறுத்துகிறது - நிமிடங்களில் வலியைப் போக்குகிறது


நியூ யார்க் - இப்பொழுது விஞ்ஞானத் துறை, முற்றிவிட்ட மூலநோய் கண்டவர்களைத் தவிர மற்றவர்களின் மூலத்தை அறுவை சிகிச்சை இன்றியே சுருக்கும் ஓர் அற்புதமான மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. இம் மருந்தால், மூலநோய் கண்டிருந்த கணக்கற்றவர்களுக்கு 'கருத்தைக் கவரும் அபிவிருத்தி' ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களின் பரிசோதனைகளும் உறுதி கூறியுள்ளன. மூலநோயால் ஏற்படும் வலியும் நமைச்சலும் அதிவிரைவில் நீக்கி மூலம் சுருங்கிக் குணமளித்திருக்கிறது. இதன் விளைவுகள் வியக்கும்படி உள்ளன. இந்த நோயால் 10, 20 ஆண்டுகளாக அவதிப்பட்டு வருவோர்கூட ''இப்போது மூலநோய் ஒரு பிரச்னையே இல்லை'' என்று கூறுகிறார்கள். இந்த சிகிச்சை, மயக்க மருந்து, உணர்விழப்பு மருந்து, மற்றும் சுருக்கச் செய்யும் மருந்துகளைப் பயன்படுத்தாமலேயே வெற்றி தந்துள்ளது. மூலத்தைக் குணப்படுத்தும் இந்தப் புதிய மருந்தின் பெயர் பிரிபரேஷன் எச்* ஆயின்ட்மென்ட். மூலத்தைச் சுருக்குவதோடு, பிரிபரேஷன் எச் ஆயின்ட்மென்ட் நமைச்சலை நீக்கி, வலி தணிந்து குடல் இயங்க உதவுகிறது.

உங்கள் மருந்து வியாபாரியை பிரிபரேஷன் எச் பற்றிக் கேளுங்கள். (மருந்து இடும் குழாயுடன்) 30 கிராம் மற்றும் 50 கிராம் கொண்ட டியூபுகளில் கிடைக்கிறது.

* ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்

ரெஜிஸ்டர்டு யூசர்ஸ், ஜெப்ரி மேனர்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட், பம்பாய் -1.

74 PH 82 TAM



அழகு முகம்
ஒவ்வொன்றுக்குள்ளும்
அழகு ரகசியம்
ஒன்று ஒளிந்திருக்கிறது

SISTA'S-DIL-552 TAM



அதுவே
எழில் பராமரிப்பு ரகசியம்

உங்கள் நோக்கம் அழகாகத் தோற்றமளிப்பது. உங்கள்
சருமத்தை அதற்கேற்ப வைத்திருப்பது க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன் வேலை— துல்லியமாக, புதுமையுடன்,
கவர்ச்சி மெருகுடன் வைத்திருப்பது. இவ்வளவு அனாயாசமாக
சருமத்தை இவ்வளவு அழகாகப் பேணிப் பராமரிப்பது
வேறெதுவுமில்லை. காலையிலும், மாலையிலும்
கடைசியாக இரவில் படுக்கப் போவதற்கு
முன்பும் க்ருக்ஸ் லாக்டோ-காலமைன் உபயோகியுங்கள். '
உங்கள் சருமம் எப்படி அழகாகத் திகழ்கிறது என்று பாருங்கள்.

க்ருக்ஸ்
லாக்டோ-காலமைன்

டூ:பார்-இன்டர்:ப்ரான் லிமிடெட்,பம்பாய்-18

கதை: குமரன்

அன்பே, அகிலா!

சித்திரம் :






விக்கோ டெர்மரிக் வானிஷிங் கிரீமைத்
தடவியவுடன் நறு சுவகிறதும்
இயற்கையாக எண்ணெய்ப்பசை
மாறுகிறது. இதில் மஞ்சள் சுத்த
மான சந்தன எண்ணெயுடன் கலக்கப்
பட்டிருக்கிறது. பண்டைக் காலமுத
லாகவே கிருமிநாசினியும், துவர்ப்
அதிப்பு சக்தியுமான மஞ்சள் எழிலை ஒளிரச்
செய்ய உபயோகிக்கப்பட்டு வருகிறது. அது
தேவையற்ற பொடி ரோமம் வளர்வதைத் தடை
செய்கிறது. மஞ்சளின் இத்தன்மைகள் பண்
டைய காலம் முதல் அறியப்பட்டவையே!
கிருமி நாசினியான இந்தக் கிரீம் முக அழகைக்
கிற்றுப் பின் ஏற்படும் புண், வெட்டுக்காயங்
களைக் குணப்படுத்துகிறது. முகச் சருமத்தில்
சோப்பினால் ஏற்படும் கெட்ட விளைவுகளை
அகற்ற உதவுகிறது.
எழிலுக்கு இயற்கையானவழி...
விக்கோ டெர்மரிக்
வானிஷிங் கிரீம்
VICCO
TURMERIC
VANISHING CREAM
IN SANDAL PERFUME
VICCO LABORATORIES, BOMBAY 14
VICCO
SNOW
WITCH HAZEL
மேனி எழிலை அதிகப்படுத்திப்
பாதுகாக்க மென்மையும் குளுமையும்
கொண்ட விக்கோ ஸ்நோவும் இருக்
கிறது. இதில் "விட்ச்ஹேஸல்"
(Witch Hazel) என்ற புகழ் பெற்ற
சருமத்தைலம் அடங்கியுள்ளது.
விக்கோ லாபரெட்டரீஸ்
தாதர், பம்பாய் 14
TML

14.

அனுசூயாவுக்கு ஓர் அனுபவம்!

"ஸைக்கோ" ஸாரநாதன்

கீ.ராஜேந்திரன்

தொடர்ந்து சிரித்துக் கொண்டே எழுந்து டி. ஐ. ஜி. நடராஜன் சோம்பல் முறித்தார். ''ளெம்புவோமா? காலாற நடந்தால் ஹோட்டலைச் சென்றடையும்போது சாப்பாட்டு நேரம் சரியாக இருக்கும்'' என்றார்.

அம்புஜம் தவிர மற்றவர்களும் எழுந்தார்கள். அவள் மட்டும் மடியில் தூங்கிவிட்டிருந்த விகப் பயலைப் பத்மநாபன் தூக்கிக் கொள்ளக் காத்திருந்தாள். ''என்னவோ நீங்க ஒரேயடியாச் சிரிச்சு மழுப்பறேள்'' என்றாள் அவள், நடராஜனை ஏறிட்டுப் பார்த்து. ''ஆனால் நீங்க ஸைக்கோவைப் பிடிக்கத்தான் இங்கே வந்திருக்கணும்னு சில பேர் பேசிக்கிறதையும் நாங்க கேட்டோம். ஊரிலே பீதி பரவி விடக் கூடாது என்பதற்காக நீங்கள் லீவில் வந்திருப்பதாகச் சொல்லிக்கறேளாம்.''

''பீதி பரவக்கூடாது என்றால் இந்த மாதிரி வீண் வதந்திகளை உங்களைப் போன்றவர்கள் பேசிப் பரப்பக் கூடாது'' என்றார் நடராஜன் கண்டிப்பது போல.

''அதெப்படி ஸார் முடியும்? வம்பு பேசுவதில் உள்ள ஸ்வாரசியம் வேறு எதிலே இருக்கு. சொல்லுங்க?'' என்று தாயாருக்குத் துணை நின்றாள் மீனு.

''காலமெ ஒன்பது மணியிலிருந்து ராத்திரி ஒன்பது மணி வரை யார் எப்போ டெலிஃபோன் செய்தாலும் எங்க வீட்டு ஃபோன் என்கேஜ்டாகத்தான் இருக்கும். ஏன்னா, ஒண்ணு மீனுவும் அவள் அம்மாவும் அவா சிநேகிதிகளிடம் அரட்டை அடிச்சுண்டிருப்பா; இல்லாத போனா ஃபோன் ரிப்பேரா இருக்கும். ஆக மொத்தம் என் சௌகரியத்துக்காக என் வீட்டில் வைக்கப்பட்ட ஆபீஸ் டெலிஃபோனை நான் மட்டும் உபயோகப்படுத்தறதே யில்லை'' என்று குறைப்பட்டுக் கொண்ட பத்மநாபன் ஒரு ஹூங்காரம் செய்து விகனைத் தூக்கித் தோளில் சாத்திக்கொண்டார்.

''வம்போ தும்போ, கேட்டதுக்குப் பதிலைக் காணுமே?'' என்று கூறியபடியே அம்புஜம் மணலை நீக்கப் புடவையை உதறிக் கொண்டாள்.

''இதோ பாருங்கம்மா, பம்பாயில் போலீஸாரிடமிருந்து தப்பிச்சுக்கிட்ட ஸைக்கோ ஸாரநாதன் கொடைக்கானல் பக்கம் வந்தான் என்கிறதுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ராக் ஆஃப் விஷன் அருகே நேர்ந்த துர்மரணத்துக்கு அவன்தான் காரணம் என்று நினைக்க ஒரு சாட்சியமும் இல்லை.... வாங்க போகலாம்'' என்று சொல்லிக் கொண்டே நடந்தார் நடராஜன். மற்றவர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

''அப்படியானால் அது தற்கொலை என்கிறதுதான் உங்க முடிவா?'' — பக்கத்தில் நடந்த பத்மநாபன் கேட்டார்.



''நீங்க ஒரு பத்திரிகையாளர் என்கிறதைக் காட்டிக் கொள்றீங்க. துருவித் துருவிக் கேள்வி கேட்டு என் வாயைப் பிடுங்கப் பார்க்கிறீங்க. ஒண்ணு சொல்றேன். 1969ம் வருஷத்தில் மட்டும் நம் பாரத நாட்டில் எத்தனை தற்கொலைகள் நடந்திருக்கின்றன தெரியுமா? நாற்பத்திமூவாயிரத்து அறுநூற்றி முப்பத்து மூணு! இவற்றில் ஏறத்தாழப் பாதி தற்கொலைகளுக்கான காரணங்கள் இன்று வரையில் கண்டு பிடிக்கப்படவேயில்லை! ஆகவே, இதையும் தற்கொலை என்று கருதுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். ஆனாலும் சொல்கிறேன் — அதுவும் கடைசித் தடவையாக: திகேஸ் இஸ் நாட்குளோஸ்ட்! தற்கொலையா, கொலையா அல்லது விபத்தா என்பது பற்றி நான் எந்த ஒரு முடிவுக்கும் இன்னும் வரவில்லை. நீங்கள் நினைப்பது போல் இது சைக்கோ செய்த காரியம் என்று நம்புவதற்கும் ஒரு தடயமும் அகப்படவில்லை. நான் யார் பேரிலாவது சந்தேகப்பட்டு அரெஸ்ட் பண்ணினாலும் அவனையோ அல்லது அவளையோ குற்றவாளி என்று சொல்ல மாட்டேன். அதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. இந்தக் காரியத்தை இன்னார் செய்திருக்கலாம் என்று நம்புவதற்கு இன்னின்ன சாட்சியங்கள், தடயங்கள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டுவேன்; அவ்வளவுதான். குற்றவாளி என்று தீர்ப்புக் கூற வேண்டியவர் நீதிபதி. அவர் அவ்வாறு கூறும் வரையில் யாருமே குற்றவாளி இல்லை.''

பாதை ஏற்றமாக இருந்தது. விசுவைத் தூக்கிக் கொண்டு நடப்பது பத்மநாபனுக்குச் சிரமமாக இருந்தது. பிறக்கும்போதே அவன் எட்டு பவுண்டு 'நல்ல போன் வெய்ட்' என்று லேடி டாக்டர் சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்டாள் அப்போது. இன்று மூன்று வருஷ வளர்ச்சியும் சேர்ந்து கொள்ளவே பத்மநாபனுக்கு இரைத்தது. ரங்கனைத் தூக்கிக் கொள்ளச் சொல்லலாமே என்று எண்ணியவராகத் திரும்பிப் பார்த்தார்.



அவனும் மீனுவும் அருகருகே தோளும் தோளும் இடித்துக் கொள்ளாத குறையாக நெருக்கியடித்துக்கொண்டு நடந்து வருவதைப் பார்த்தார். விரல்கள் தொட்டுக் கொண்டன; ஆனால் நடக்கும் வேகத்தில் யதேச்சையாகப் பட்டுவிட்டதுபோல் அவர்கள் நடந்து கொள்ளத் தவறவில்லை. 'இவர்கள் இருவரும் இன்று ஃபேரி ஃபால்ஸுக்கு வருவது என்று ஏற்கனவே பேசி வைத்துக் கொண்டிருந்திருப்பார்களோ?' என்று யோசிக்க ஆரம்பித்தார் பத்மநாபன். ஹோட்டலில் தங்கியிருப்பவர்களுக்கென்றே பிரத்தியேகமாக உள்ள பஸ் இன்று ஃபேரி ஃபால்ஸுக்கு வரவில்லை. பேர்ஷோலா ஃபால்ஸுக்குப் போவதாகச் சொன்னார்கள். சௌக



அப்பாவும் பின்னேயும் அருமையான மனிதர்கள்தாம்..... ஆனலும்... இருந்தாலும்.... ஜாதி என்கிற அந்த ஒரு பிரச்னை இருக்கிறதே! சம்பந்தம் என்று வந்தால் யார் யார் எப்படி எப்படி இதை ஏற்பார்களோ புரியவில்லையே? ஆண்டவனே, பெரிய சோதனை வைத்து விடுவாய் போலிருக்கிறதே. எலக்டர் வயதுப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு எதற்காகக் கொடைக் கானலுக்கு வந்தோம் என்று வருத்தப் படும் வேளை வந்துவிட்டதோ?...'

''அப்படியானல் நீங்க லைக்கோவைத் தேடிண்டு இங்கே வரலே?.... கோவிச்சுக்காதேங்கோ! எதுக்குக் கேக்கறேன்னு, பாக்கி யிருக்கிற பத்துப் பண்ணண்டு நாளேயும் பயமில்லாமல் நிம்மதியா கழிச்சுட்டு வீட்டுக்குத் திரும்பலாம், பாருங்கோ!'' என்ருள் அம்புஜம்.

''லைக்கோவைத் தேடிக்கிட்டு நான் வரலே; விடுமுறையில்தான் வந்தேன், இது சத்தியம். ஆனல் ஸாரநாதன் இங்கே வந்திருந்தால் அவனைக் கண்டு பிடிப்பது அப்படி ஒன்றும் கஷ்டமாயிராது. சிறை உடைகளைக் களைந்து விட்டு அவன் சாதாரண பைஜாமா ஜிப்பா அணிந்து டாக்டரைப் பார்க்க

ரியமாகப் பஸ்ஸிலேயே போய் வந்து விடலாம் என்றுதான் பத்மநாபனும் அம்புஜமும் திட்டம் போட்டார்கள். ஆனல் மீரு, ஒரே பிடிவாதமாக, 'நடந்து போனலும் பரவாயில்லே; ஃபேரி ஃபால்ஸுக்குத்தான் போக வேண்டும்' என்று ஒற்றைக் காலில் நின்ருள். 'ரங்கனுக்கு ஏமாற்றமாகி விடப் போகிறதே என்றுதான் அவள் அப்படி முரண்டு பிடித்தாளா?'

''ரங்கன்! ஐ நீட் யுவர் ஹெல்ப்'' என்று சொல்லி வி[illegible]வை அவன் கரங்களில் தள்ளிவிட்டார் பத்மநாபன்.

''வித் ப்ளெஷர்!'' என்று பதில் உரைத்து ரொம்பப் பிரியத்துடன் அவன் குழந்தையை வாங்கிக் கொண்டது அவருக்குத் திருப்தியளித்தது.

வந்தான். டாக்டர் குஹாவைக் கொன்றுவிட்டுப் போலீஸாரிடமிருந்து தப்பியபோது அவன் டாக்டரின் உடைகளை மாட்டிக் கொண்டிருந்தான். ஆக, தலைமறைவாக இருக்க எப்படியெல்லாம் வேஷம் 'போடலாம் என்று புரிந்து கொள்கிற அளவுக்கு அவனுக்குச் சிந்தனைத் தெளிவு இருக்கிறது என்றாகிறது. இப்போது எந்த ரூபத்தில் இருக்கிறானோ, யாருக்குத் தெரியும்?''

''பார்த்தேளா, பார்த்தேளா! சித்த முன்னாடிதான் அவன் இங்கே வரவேயில்லைன்னேள்; இப்போ, அவனை எப்படி அடையாளம் புரிஞ்சுக்கிறதுன்னு கேக்கறேள்!''

''அவன் இங்கே வரவில்லை என்று நான் சொல்லவில்லையே, அம்மா!'' என்றார் நடராஜன், அலுப்புத் தட்டும் குரலில். ''அவன் இங்கே வந்தான் என்பதற்கான சாட்சியம் ஏதுமில்லை என்றுதான் சொன்னேன்.''

''அப்படியானால் அவன் இங்கே வந்திருக்கலாம்னு ஒப்புக்கொள்றேள்!''

''அவன் இங்கேயும் வந்திருக்கலாம், அல்லது ஊட்டிக்கும் போயிருக்கலாம். டில்லிக்கோ, புவனேசுவரத்துக்கோ ரயில் ஏறியிருக்கலாம். ஒரு வேளை திருச்சியில் ஏதாவது ஒரு சந்தில் இப்போ அவன் உலவிக் கொண்டிருக்கலாம். நான் எப்படிச் சொல்ல முடியும்?''

''ஸார்! இப்படியெல்லாம் நீங்கள் பேசினால் இவங்களுக்கு உங்ககிட்டே மதிப்பு ரொம்பக் குறைஞ்சுடும். 'ஸைக்கோ ஸாரநாதன்தான் இதைச் செய்திருக்கான். அவனை எப்படியாவது கண்டுபிடிச்சுக் கட்டி வைச்சு உதைச்சு உண்மையைக் கக்க வைக்கப் போறேன்' என்று டிராமாட்டிக்கா ஏதாவது சொல்லுங்க'' என்றான் அதுவரை வாளாவிருந்த அமிர்தலிங்கம்.

நடராஜன் சிரித்தார். ''உண்மைதான். ஐயான் ஃபிளெமிங் ஜேம்ஸ் பாண்ட் என்று ஓர் ஒற்றனை சிருஷ்டித்துத் தமது நாவல்களில் உலவவிட்டாலும் விட்டார், துப்பறிபவர்களைச் சுற்றி ஒரு கிளாமர் உருவாகிவிட்டது.''

''ஆனாலும் அவருடையது முதல் தரப் படைப்புத்தான்'' என்றார் பத்மநாபன். ''அவர் பாணியில் எத்தனையோ பேர் எழுதுகிறார்கள். எல்லாம் வெறும் பூஜ்யம். புவர் இமிடேஷன். அதே போல் அசல் 007 சினிமாக்களும் வந்துவிட்டன; அவற்றைப் பார்த்துக் காப்பி அடித்த உதவாக்கரைத் திரைப்படங்களும் வந்து விட்டன.''

''யதார்த்த ரீதியில் நோக்கினால் ஸி. ஐ. டி.யின் வாழ்க்கை அத்தனை பரபரப்பானதாக இருப்பதில்லை. ஒற்றர்கள் நிலையும் இதுவேதான். ஜேம்ஸ் பாண்ட் இரண்டு பணக்காரப் பெண்களை ஒருவர்பின் ஒருவராகக் கட்டி அணைப்பான். ஒருத்தி அவனிடம் மயங்கி ரகசியங்களை வெளியிட்டுவிடுவாள். மற்றொருத்தி அவனை மயக்கி ஏமாற்றப் பார்ப்பாள். ஆனால் பாண்ட் என்றுமே ஏமாறுவதில்லை. அவளை உதறிவிட்டுக் காரில் ஏறி விரைவான். ஆபத்து, பல குண்டர்கள் உருவில் அவனை மற்றொரு காரில் பின் துரத்திக் கொண்டு வரும். எத்தனை பேரானால் என்ன? ஜூடோ பிடியும் கராட்டே அடியும் 007ஐக் காக்கும். அவன் துப்பாக்கி என்றுமே குறி தப்புவதில்லை. இஷ்டத்துக்குக் கொல்லலாம். கேட்பார் கிடையாது. எப்போதும் வெற்றி தான் அவனுக்கு.

''ஆனால் ஓர் அசல் ஒற்றன் அல்லது ஸி.ஐ.டி.யின் வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. ஒற்றன் எந்த விநாடியில் தன் வேஷம் அம்பலமாகிவிடுமோ என்று சதா பயந்து செத்துக் கொண்டிருக்கிறான். ஏனெனில், பிடித்தால் உடனே அவனை விசாரணைகூட இன்றித் தூக்கில் தொங்கவிட்டு விடுவார்கள். மரணம் என்பது மட்டுமல்ல, அவமானம் மிக்க மரணம். அவனிடம் துப்பாக்கி உண்டு; ஆனால் தூக்கில் தொங்க விடுவதற்குப் பதில் தற்கொலை செய்து கொண்டு சாகலாமே என்பதற்காகத்தான் அதை வைத்திருப்பான். பெண்களுடன் அவனுக்குத் தொடர்பு உண்டு. ஆனால் அநேகமாக அவர்கள் கிழவிகளாகவோ குரூபிகளாகவோதான் இருப்பார்கள். ஒரு ஸி. ஐ. டி.யின் வாழ்க்கை இதைவிடப் பரிதாபம். நாள்தோறும் மணிக் கணக்கில் அவன் கால் கடுக்க நிற்கிறான் அல்லது அலைகிறான். இரவில் தூக்கம் பிடிக்காமல் சிந்தித்துச் சிந்தித்து அவன் தலை நரைத்துப் போகிறது.... கேடிகள், சோதாக்கள், வேசிகள் போன்றோருடன் தொடர்பு வைத்துக் கொண்டு அவ்வப்போது அவர்களுக்கு வாய்க்கரிசி போட்டுத் தகவல்களைச் சேகரிக்கிறான். யாரையாவது இவன் தப்பித் தவறிக் கை நீட்டி அடித்துவிட்டால் உடனே, தன் அதிகார எல்லையைத் தாண்டி இவன் நடந்து கொண்டதாக வழக்கு இவன் பேரிலேயே சுமத்தப்படும்! கொஞ்சம்கூட சுவாரசியமற்ற, டல், மெகானிகல் லைஃப்!''

''இந்தக் கூத்துக்காகத்தான் ஸார் நான் துப்பறியும் கதைகளே எழுதறதில்லை'' என்றார் பத்மநாபன். ''விருவிருப்பா எழுதினால் ஜேம்ஸ்பாண்ட் டைப்னு லேபிள் ஒட்டிப்பிடுவாங்க. யதார்த்த நோக்கில் எழுதினால்

கூடைப் பந்தாட்டம்

தெரிந்த விளையாட்டு தெரியாத விவரம்-6

☐ கூடைப் பந்தாட்டத்தில் ஒரு முறை 'ப்ரீ த்ரோ' வீசும்போது கடிகாரத்தை நிறுத்தத் தவறிய பில்லி எடிசன் என்ற லீக் 'கோல்' அடித்து விட்டார். இதற்காக உரிய தண்டனை பெற்றார்.

☐ ஒரு சமயம் கூடைப் பந்தாட்டம் கலிபோர்னியா சர்வகலாசாலையில் 45 மணி நேரம் நீடித்தது. இந்த ஆட்டத்தில் இருநூறு பேர் மாறி மாறி வந்து ஆடினர். எண்ணிக்கை 3496-3178. உலகிலேயே மிக நீண்ட நேரம் கூடைப் பந்தாட்டம் நடந்ததும் கலிபோர்னியாவில்தான். 85 மணி நேரம் நீடித்தது. மாணவர்களான 150 ஆட்டக்காரர்கள் பங்குபற்றினர். இரண்டு மணிக்கொரு தரம் ஆட்டக்காரர்கள் மாறினர். ஸ்கோர் 4053-3969.

☐ ஓர் ஆட்டத்தில் ஜமைக்கா குழு 25 'பௌல்' ஷாட் போடும் வாய்ப்பைப் பெற்றே பேத்னார்ட் கோஷ்டியைத் தோல்வியடையச் செய்தது. மாட்சில் எண்ணிக்கை 25-16.

☐ அமெரிக்காவில் குளோப் டிராட்டர் குழுவினர் 1927ல் கூடைப் பந்தாட்டம் ஆடியபொழுது சொற்பப் பேர்களே ஆட்டத்தைக் காண வந்தனர். வரும்படி 2 டாலர் 60 செண்ட். இருபத்தி நாலு வருஷங்களுக்குப் பிறகு கூடைப் பந்தாட்டத்துக்கு 75000 ரசிகர்கள் கூடினர். நியூயார்க்கில் நடைபெற்ற ஒரு மாட்சில் 37,000 டாலர் குளோப் டிராட்டர்களுக்குக் கிடைத்தது.

☐ 1891ல் டாக்டர் ஏ. ஜேம்ஸ் நயிஸ்மித் என்ற கனேடியர் ஸ்பிரிங்பீல்டு உடற்பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவர்தான் கூடைப் பந்தாட்டம் ஆட வழி வகுத்தவர். முதன் முதலில் 1892 ஜனவரி 20ந் தேதி கூடைப்பந்தாட்டம் அங்குரார்ப்பணம் ஆயிற்று. மழை, வெண்பனி இவற்றால் மாணவர்கள் தேகப் பயிற்சி பெறுவது பாதிக்கப்படுகிறது என்பதால் கட்டடத்துக்குள்ளேயே ஓடியாடி விளையாடும்படியான ஓர் ஆட்டத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியதன் விளைவாய்ப் பிறந்தது கூடைப் பந்தாட்டம்.

☐ அமெரிக்க தேசிய கூடைப் பந்தாட்டத்தில் ஜியார்ஜ் மிக்கான் 15,000 டாலர் பெற்ற முதன்மை ஆட்டக்காரர் ஆவார்.

- குண்டுமணி



அறுவைன்னு முடிவு கட்டி ஒருத்தரும் படிக்க மாட்டாங்க!''

''நீங்க ஸயன்ஸ் ஃபிக்க்ஷன் எழுதுங்க ஸார். மேனாடுகளில் எத்தனை விஞ்ஞானக் கதைகள், நாவல்கள் வந்திருக்கின்றன பார்த்தீங்களா? தமிழ் எழுத்தாளர்களில் யாருமே இந்தத் துறையில் இதுவரை கவனம் செலுத்தவில்லையே!'' என்றார் டி. ஐ. ஜி."(வி. ஐ. டி.)

''ஐயோ! தலை கீழா நின்னாலும் அப்பாவுக்கு ஸயன்ஸ் வராது!'' என்றான் மீனு கலவரம் தொனித்த குரலில். ''பிப்பெட்டுக்கும் பியூரெட்டுக்கும் வித்தியாசம் தெரியாதவர் ஸயன்ஸ் ஃபிக்க்ஷன் எழுதவா?''

''அதென்னவோ வாஸ்தவம்தான் ஸார்!'' என்றார் பத்மநாபன். ''உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லே; நான் ஒரு ஃபார்மஸி கிராஜுவேட். அந்தத் துறையில் நான் இறங்கமாட்டேன்னு சத்தியம் செய்து கொடுத்த தின்பேரிலேதான் என் புரொபஸர் போனாலும் போகட்டும்னு எனக்கு பாஸ் போட்டுட்டார்!''

நடராஜன் பெரிதாகச் சிரித்தார். ''ரொம்ப நல்ல காரியம் செய்தார், உங்க பேராசிரியர். மருந்துகள் தயாரிப்பது என்றால் என்ன இலேசான காரியமா? நோயாளிகளின் உயிருடன் விளையாடலாமா?''

இப்படிக் கிண்டலும் வேடிக்கையுமாகப் பேசிக் கொண்டே அவர்கள் ஹாப்பி ஹாலிடேயை அடைந்தார்கள். விக மீண்டும் தோள் மாறினான். ''அப்புறம் சந்திக்கலாம்'' என்று கூறி மூன்று திக்குகளில் அவர்கள் பிரிந்து சென்றார்கள், தங்கள் தங்கள் அறையை அடைய.

பத்மநாபன் இருந்த அறை பெரிய ஃபாமிலி ரூம். நாலு கட்டில்கள், டிரஸ்ஸிங் டேபிள் எல்லாம் உண்டு.

அறையின் பின்புறம் தனி பாத்ரூம். முன்புறம் இருந்த வராந்தா இந்த அறையையும் பக்கத்தில் இருந்த மற்றொரு ஃபாமிலி ரூமையும் இணைத்தது. அந்தக் கட்டடத்தில் இரண்டே அறைகள்தாம். இப்படியே பரவலாக இருந்த பல்வேறு சிறு கட்டடங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது நான்கு அறைகள் மட்டுமே இருந்தன.

வராந்தா என்று பெயரே ஒழிய அங்கும் கண்ணாடிச் சுவரும் கண்ணாடி ஜன்னல்களும் கண்ணாடிக் கதவுகளும் உண்டு. மழைச் சாரலும் குளிர்ந்த காற்றும் உள்ளே வராதிருக்க வராந்தாவில் இப்படி மூன்று புறங்களிலும் கண்ணாடி பதித்திருந்தார்கள். அதே சமயம் கண்ணாடியினூடே வெளிப்புறமிருந்த மலைகளுடனும் கானகங்களுடனும் பார்வையால் தொடர்பு கொள்ள முடியுமல்லவா? இயற்கையுடன் இந்தக் கண்ணுறவு இல்லையானால் கொடைக் கானல் வந்துதான் என்ன பிரயோஜனம்?

கண்ணாடிக் கதவில் ஒரு கண்ணாடி மட்டும் உடைந்து போயிருந்தது. இப்போதுகூட உள்ளே வர அந்தக் கதவைத் திறந்தபோது அது பத்மநாபன் கண்களை உறுத்தியது. ஹோட்டல் முதலாளி தனராஜிடம் மறுபடியும் ஒரு தடவை இது பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். வராந்தாவில் இடந்த சில நாற்காலிகளுள் ஒன்றில் 'அப்பாடா' என்று களைப்புடன் உட்கார்ந்தார். ''சாப்பாட்டு நேரத்துக்கு இன்னும் அரை மணி நேரம் இருக்கு. அம்புஜம்! ஒரு பாட்டுப் பாடேன்'' என்றார்.

''பெண் பார்க்க வந்தப்புறம் இன்னைக்குத்தான் எனக்குப் பாடத் தெரியும்னு ஞாபகம் வந்ததாக்கும்?''

''இந்தா, ரொம்பப் பிகு பண்ணிக்காதே! ஏதோ இப்போ சாவகாசமா இருக்கிறதாலே பாடச் சொல்றேன்.''

''வெய்யில் நன்னு காயறதே, அழுக்குத் துணிகளைக் கசக்கிப் பிழிஞ்சு உலர்த்தி விடலாமேன்னு பார்த்தேன்.''

''இந்தா, இப்போ நீ உடனே பாடப் போறயா, இல்லே நான் பாடட்டுமா?''

''அடடா! விஞ்ஞானம் தப்பிச்சுதுன்னு நினைச்சோம், சங்கீதம் மாட்டிக் கொண்டு விட்டதே, உங்களிடம்!''

மீனுவுக்கு வேர்க்கடலை இருடித் தின்னப் போன நரி 'எனக்குப் பாடணும் போல வரது' என்று கூறிய கதை ஞாபகம் வந்தது. அக்கம் பக்கத்து அறைகளில் உள்ளவர்கள் தடியைத் தூக்கிக் கொண்டு வராமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டவளாய் மிரட்சியுடன் பார்த்தாள்!

அந்தப் பிரமையும் மிரட்சியும் நீங்கு முன்னரே பத்மநாபன் பாட ஆரம்பித்து விட்டார் உற்சாகமாக, ''மாமவ பட்டாபிராமா....!'' என்று.

''ஐயோ! போதும், போதும், இந்தப் பாட்டைக் கேட்டால் பட்டாபிஷேகத்துக்கு எழுந்தருளிய ராமர், மறுபடியும் காட்டுக்கே போறேன்னு ஓடிடுவார், சீதையையும் இழுத்துண்டு:'' என்றாள் அம்புஜம்.

''ஏய்! வெய்யில் வீணாப் போறது: எதுக்குடி இன்னும் இங்கேயே, நின்னுண்டிருக்கே, துணியைத் துவைக்காமல்?'' என்று மனைவியை மிரட்டுவது போல் கேட்டார் பத்மநாபன். ஆயினும் அவர் முகம் மலர்ந்திருந்தது.

''நல்ல வேளை! அப்பாவுடைய 'கோப ரூம்' இங்கே இல்லே'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் அனசூயா. அவள் குறிப்பிட்டது அவர்கள் வீட்டில் பத்மநாபனின் தனி அறை. அங்கே தம் மேஜை எதிரே அவர் உட்கார்ந்து விட்டாரானால் காப்பி அல்லது டீ கொண்டு வந்து வைப்பதற்குத் தவிர வேறு எதற்கும் யாரும் உள்ளே நுழையக் கூடாது. இந்தக் கட்டளையை வீட்டில் யாரேனும் ஒருவர் கடைப் பிடிக்காது போனால் எரிமலையாக வெடிப்பார்.

''சேச்சே! ஹாலிடேலே வந்திருக்கும் போது யாராவது குழந்தைகளைக் கோவிச்சுப்பானா?'' என்று அனசூயாவைக் கட்டி அணைத்துக் கொண்டார் பத்மநாபன். ''மேலும் என் பாட்டு ஒண்ணும் உசத்தி இல்லேன்னு எனக்கே நன்னாத் தெரியும் கண்ணு. சும்மா தமாஷுக்குப் பாடினேன்!''

''அப்பா பாடறதைக் கேட்டதும் அனசூயா அழுதது ஞாபகம் வரது! ஏண்டி, ஃபேரி ஃபால்ஸிலே எதுக்குடி அப்படி அலறினே?'' என்று தங்கையைக் கேட்டாள் தமக்கை மீனு.

அனு கூறினாள்: ''அந்த ஹிப்பி மாமா இல்லே? அவர் கண்ணை மூடிண்டு தரையில் படுத்துண்டிருந்தார். 'ஹிப்பி மாமா! ஹிப்பி மாமா!'ன்னு கூப்பிட்டேன். மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார். அப்புறம் என்னமோ மாதிரி என்னை முழிச்சுப் பார்த்துட்டுத் திடீர்னு பாஞ்சு என்னைக் கட்டிப் பிடிச்சுண்டுட்டார். எனக்குப் பயமாப் போச்சு! எப்படி இருக்கின்னு தெரியுமா! மூச்சு விடவே முடியாதுபோல் ஆயிடுத்து.... ம்... அப்புறம்.... 'நீதான் என் அம்மாவாம்; நான்தான் உன் குழந்தையாம்; ஒரு முத்தம் கொடு தாயே!' அப்படின்னு கெஞ்சு

முர்டி ! எனக்கு வெக்கமாப் போச்சு. என்னே விடு, விடுங்கறேன் ; விடவே மாட்டேன்னு இறுக்கிப் பிடிச்சுண்டு கொஞ்ச ஆரம்பிச்சுட்டா. சீ ! அவர் தாடியும் மீசையும் எனக்குப் பிடிக்கவே யில்லே. அதான் அப்படி கத்தினேன்.''

''சனியன்'' என்று வைதான் மீனு. ''ராக் ஆப் ஜிப்ரால்டர்லேயிருந்து அந்தத் தினகரனுக்குப் பதில் இவன் விழுந்திருக்கப்படாதோ ?''

பத்மநாபன் குறுக்கிட்டார். ''மீனு! உனக்கு எத்தனே சொன்னுலும் தெரிய மாட்டேனென்கிறது. நீ பேசற விதம் கொஞ்சம்கூடச் சரியில்லே. அழகான ஒரு குழந்தையைப் பார்த்தால் கொஞ்சணும்னு லோகத்தில் எத்தனேயோ பேருக்குத் தோணறது. அதுக்காக ஒருத்தரை வெறுக்கலாமா? திட்டலாமா ?''

''அப்பா! அழகான ஒரு குழந்தையைப் பார்த்தால் வாரி அணைச்சுக்கணும்னு சில பேருக்குத் தோணறது அதிசயமில்லே. ஆனல் அந்தக் குழந்தை புதிய அந்த மனிதனிடமிருந்து தன்னே விடுவிச்சுக்க முயற்சி செய்யறதும் இயற்கைதானே? அந்த மனுஷன் நல்லவனு யிருந்தால் குழந்தையின் உணர்ச்சியை மதிச்சுச் சட்டுன்னு இறக்கி விட்டுடுவான். அப்படியில்லாமே ஒரு சிறுமியைப் பலவந்தப்படுத்தி முத்தம் கொடுக்கச் சொல்றவன் ராட்சதனுகத்தான் இருக்கணும்!''

பத்மநாபனுல் இதை மறுத்துரைக்க முடியவில்லே. மௌனத்தில் ஆழ்ந்தார். அதோடு இன்னொரு விஷயமும் அவர் உள்ளத்தில் குறுகுறுப்பை ஏற்படுத்தியது. 'நீதான் அம்மாவாம்; நான்தான் குழந்தையாம் ; எனக்கு ஒரு முத்தம் கொடு தாயே'' என்று அமிர்தலிங்கம் தம் மகளிடம் விளையாடினுன் என்ற செய்தியானது விநோதமாகத் தோன்றியது அவருக்கு. சாப்பாட்டு நேரம் நெருங்க நெருங்க அவருக்குப் பசி வயிற்றைக் குடைய ஆரம்பித்து விட்டது. நீண்ட தூரம் நடந்திருந்ததால் உடல் தளர்ந்து போய், எரிபொருளைக் 'கொண்டா கொண்டா' என்றது. பம்மென்று உப்பிய பூரியையும் ஆவி பறக்கும் சப்ஜியையும் நினைத்துக் கொண்ட அவர், அனசூயா கூறிய வற்றை யெல்லாம் வெகு சீக்கிரம் மறந்து போனர். கதவில் ஒரு கண்ணுடி உடைந்திருப்பதை ஹோட்டல் முதலாளி தனராஜின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணியதையும் அவ்வாறே மறந்துவிட்டார்.

மீனுவுக்கு அமிர்தலிங்கத்தை முதன் முதலில் எழும்பூர் ரயில் நிலேயத்தில் சந்தித்தபோதே பிடிக்கவில்லே. அவனிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு கடந்த சில நாட்களில் வெகுவாக வளர்ந்துவிட்டிருந்தது. இப்போது அனசூயா கூறியவற்றல் அது இன்னும் அதிகரித்திருந்தது.

'ரங்கனுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது இந்த அமிர்தலிங்கத்தைப் பற்றியும் அவர் காதில் போட்டு வைக்க வேண்டும்' என்று தனக்குள் அவள் எண்ணிக் கொண்டாள். கூடவே இன்னொரு நினைப்பு : 'அவரைத் தனிமையில் சந்திக்க வாய்ப்புக் கிட்டும்போது போயும் போயும் இந்தத் தறுதலே ஷிப்பியைப் பற்றித்தானு பேச வேண்டும்? வேறு எத்தனேயோ பல இனிய கதைகள் இல்லேயா பேச ?'

மீனுவும் அனசூயாவுக்கு ஏற்பட்ட அனுபவத்தை விரைவில் மறந்து போனுள். (தொடரும்)

முருகனுக்கு மகா கும்பாபிஷேகம்

சென்னை, ஜார்ஜ் டவுன் பகுதியில் முத்தையால்பேட்டை கச்சாலீசுவரர் அக்ரஹாரத்தில் கச்சபேசுவரர் கோயில் கொண்டிருக்கிறார். கி. பி. 1725ம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியில் 'துபாஷாக' பணியாற்றிய தளவாய் செட்டியார் வெள்ளிதோறும் காஞ்சிபுரம் சென்று கச்சபேசுவரரைத் தரிசித்து வருவார். அவர் ஒரு தடவை காஞ்சிபுரம் போனவர் மூன்று நாட்கள் திரும்பி வரவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்களுக்குத் தளவாய் முதலியார் கச்சபேசுவரர் தரிசனத்துக்குப் போய் வருவது தெரிய வந்தது. உடனே சென்னையிலேயே கச்சபேசுவரர் ஆலயம் எழுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்கள் நிலம் வழங்கினர் என்பது இந்த ஆலய வரலாறு. ஐந்து முகங்கள் கொண்ட கணபதியும், ஐந்து ஆசனங்களில் அமர்ந்த சிவலிங்கமும் இவ்வாலயத்தின் விசேஷம். இவ்வாலயத்தில் ஷண்முகப் பெருமானை சிவாகம முறைப்படி 18-5-72 அன்று பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. இந்த மகா கும்பாபிஷேகத்தையொட்டி இன்னிசைக் கச்சேரிகளும், 'முருகன்' கருத்தரங்கும் நடைபெறவிருக்கின்றன. இம்மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டும் பொருளுதவி செய்தும் முருகனின் அருளுக்குப் பாத்திரமாகலாம். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ சண்முகர் கும்பாபிஷேகக் கமிட்டி, ஸ்ரீ கச்சாலீசுவரர் ஆலயம், 3-19, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

ஆசிரியர் அவர்களுக்கு,

இத்துடன் நகைச்சுவைக் கதை ஒன்று எழுதி அனுப்பியிருக்கிறேன். நான் எழுதும் முதல் கதை இதுதான். இதற்குமுன் எழுத வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருந்தாலும், அந்த ஆவலை ஊக்குவித்து என்னை முதன் முதலாக இப்போது எழுதத் தூண்டியது 'கல்கி'தான் என்பதை நான் கூற விரும்புகிறேன். கதையைப் படித்துப் பார்த்து அதற்குரிய மதிப்பை அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

வசுந்தரா தியாகராஜன்

(இதோ அதற்குரிய மதிப்பை மகிழ்ச்சியுடன் அளித்துவிட்டோம். -- ஆசிரியர்)

வேண்டும் ஒரு வேலை!

வசுந்தரா தியாகராஜன்



கவிதா — பேச்சுக் குரலில் ஆங்கிலத்தில் பேசி, பெல் பாட்டம், லுங்கி அணிந்து, வகுப்புகளை வெட்டி 'மாடினி ஷோ' பார்த்து 'முறைப்படி' பயின்று, தட்டுத் தடுமாறித் தேறிய ஒரு நவீன பி. ஏ. பட்டதாரி. (சாதாரணமாகக் கதைகளில் வரும் கதாநாயகியைப் போல இவளை மாநிலத்திலே முதலாவதாகவோ அல்லது குறைந்த பட்சம் முதல் வகுப்பிலோ தேற வைக்காததற்காக வாசகர்கள் என்னை மன்னிக்கவும்) கவிதாவிடம் இந்தக் காலத்துக்கு ஒத்து வராத இரு குணங்கள் இருந்தன. ஒன்று ரோஷம்; மற்றொன்று பிடிவாதம். சொல்லப் போனால், இவற்றைக்கூட இந்தக் கதையின் கதாநாயகி, கதாநாயகனுக்குக் கொள்ளலாம்!

கவிதாவுக்கு ஒரு நாள் திடீரென்று ஒரு விபரீத ஆசை ஏற்பட்டது. ஏன் அவள் வேலைக்குப் போகக் கூடாது? இதை அவள் தன் சகோதரன் மதுவிடம் சொன்னபோது, அவன் அவளைச் சீண்டிப் பார்த்து மகிழும் வாய்ப்பை நழுவ விடாமல் தமிழ் சினிமா வில்லனைப் போல் பெரிதாகச் சிரித்தான்.

"என்ன? என்ன சிரிப்பு?" என்றாள் கவிதா.

"அவனவன் பி.ஏ., எம்.ஏ. எல்லாம் படித்துவிட்டுக் குமாஸ்தா வேலைக்குக்கூட காத்துக் கொண்டிருக்கிறான். இவள் பி. ஏ. படித்துவிட்டு வேலைக்குப் போகிறாளாம்! எவன் உனக்கு வேலையை வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறான்?" — என்று மது அவள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்.

ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது கவிதாவுக்கு.

"நான் மட்டும் கூடிய சீக்கிரம் ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொள்ளா விட்டால் என் பெயர் கவிதா இல்லே" என்று கண்ணிலேயிடச் சற்று அழுத்த மாகவே சபதம் செய்தாள்!

"முதலில் வேறு நல்ல பெயரைத் தேடி வைத்துக்கொள்" என்று சொல்லி மது அகன்ற போதும் கவிதாவின் பிடிவாதம் சிறிதும் குறையவில்லே.

மடமடவென்று செய்தித் தாள்களே ஆராய்ந்து நாலைந்து விளம்பரங்களுக்குப் பதிலும் அனுப்பினாள். சில நாட்களுக்குப் பிறகு எதிர்பாராமல் ஒரே ஒரு கம்பெனியிலிருந்து அவளுக்கு 'இண்டர்வ்யூ'வுக்கு அழைப்பு வந்தது. அதை எடுத்துக் கொண்டு போய் வெற்றிகரமாக மதுவிடம் காட்டிவிட்டுப் பெருமிதத்துடன் நின்றவளுக்கு அவன் கூறிய பதில் மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது.

"ஆமாம்! என்ன இதற்கு? இப்படித்தான் ஊரை ஏமாற்றுவதற்காக நாலு பேரை அழைத்து விட்டுக் கடைசியில் தனக்கு வேண்டியவர் யாருக்காவது வேலையைக் கொடுப்பான். போ, போ! வேறே உபயோகமான வேலையைப் பார்! இட்டிலிக்கு அரைத்து வைத்தால் என் வயிறாவது நாளை ரொம்பும்."

கவிதா அவனையே அரைத்து விடுபவள் போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியேறினாள்.

'இண்டர்வ்யூ' தினம் வந்தது. பிற்பகல் மணி நான்கு. இன்னும் அரை மணிக்குள் போய்ச் சேர வேண்டிய அவசரத்தை உணர்ந்தவளாகச் சாலையின் ஓரத்தில் நின்று கொண்டு ஏதாவது டாக்ஸி தென்படுகிறதா என்று நோக்கியவாறிருந்தாள். கவிதாவினுல் தன் கண்களை நம்பவே முடியவில்லே. சாலையின் எதிர்ப்புறத்தில் ஒரு டாக்ஸி நிற்கிறது. அதில் டிரைவரும் இருக்கிறன். இதுவரை எவரும் அவனே அழைக்கவும் இல்லே! மனம் பதைபதைக்க வழக்கம்போல் பாதசாரிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் சாலையைக் கடந்து விடுவிடுவென்று அந்த டாக்ஸியை நெருங்கினாள்.

சாய்ந்து உட்கார்ந்திருந்த டிரைவர் கவிதாவைக் கண்டவுடன் இன்னும் சற்று நன்ருகச் சாய்ந்து கொண்டு, கொட்டாவி ஒன்றையும் வெளிப்படுத்தினன். அவனுடைய செயல்கள் எல்லாவற்றிலும் கொட்டாவி விடுவதிலேயே அதிக சுறுசுறுப்பு இருப்பதாகக் கவிதாவுக்குத் தோன்றியது.

"என்னப்பா, டாக்ஸி வருமா?"

"எங்கே போவணும்?"

"கமலா நகர் போகணும்."

"வராது."

"ஏன்?"

"அட இன்னு பேஜாரு. கமலா நகர் போனுல் திரும்பிச் சவாரி கெடைக்காதும்மா! பார்த்து மேலே போட்டுக்குடுத்தின்னு உங்களுக்காக வர்றேன்"




குடும்பங்களின் பேராதரவு பெற்றது
லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன்
டஸ்ட் டீ
நல்லதோர் தேயிலையிடம்
நீங்கள் கோரும்
அனைத்தையும் அளிக்கிறது
LIPTON'S
GOLDEN DUST TEA
பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே
புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது
LHGC-12-72 TAM

என்று அவளுக்காகவே டாக்ஸி ஓட்டுவது போலக் கூறினான் அவன். ஆத்திரமாக வந்தது கவிதாவுக்கு. அங்கு நின்றுகொண்டு டாக்ஸி டிரைவர்களின் தொழில் தர்மத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவே நடத்த நினைத்தவள் தனது அவசரத்தை எண்ணிப் பேசாமல் கதவைத் திறந்து ஏறிக் கொண்டாள்.

பல தடவை உயிர் போய் வந்த பிறகு கமலா நகர் வந்தது. நாராயணா, நாராயணா அண்டு நாராயணா என்ற போர்டு தொங்கிய ஒரு பாழடைந்த கட்டிடத்துக்கு முன்னால் இறங்கிக் கொண்ட கவிதா டாக்ஸியை அனுப்பிவிட்டுச் சற்றுத் தயக்கத்துடன் வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். மனித சஞ்சாரமே பல நாட்களாக இல்லாதது போல் இருந்தது அந்த அறை. மூன்று நாராயணர்களிலிருந்து பியூன்வரையில் ஒருவருமே காணப்படவில்லை. பல யுகங்கள் கழிந்த பிறகு உள்ளேயிருந்து கதவைத் திறந்து கொண்டு வந்தாள் ஒரு பெண். கருக்கமாக வர்ணிப்பதென்றால், நாகரிகம் என்ற பெயரால் தன்னை அவலட்சணமாக்கிக் கொண்டவள் என்று கூறலாம். ஸ்டைலாக நடந்து கவிதாவின் பக்கத்தில் வந்து அவளை ஒரு புழு பூச்சியைப் பார்ப்பதுபோல் பார்த்தாள்.

''நீயும் வேலைக்காகத்தான் வந்திருக்கிறாயா?''

''ஆமாம்.''

''ஐயோ பாவம்!''

''ஏன்?''

இந்தச் சமயத்தில் உள்ளிருந்து வந்த ஒரு பியூன் கவிதாவின் பெயரை எழுதிக்கொண்டு சென்றான். அவலட்சணம் தொடர்ந்தது:

''உனக்குக் காளமேகத்தைத் தெரியுமா?''

''புலவரா?''

''சீ, இல்லே! வியாபாரி காளமேகத்தைச் சொன்னேன். ஊரில் பிரசித்தி பெற்றவர். அவரது மைத்துனியின் மாமா பே த் தி யை த் தெரியுமா?''

''ஔவையாரா?''

''சீ, இல்லே. நான்தான்.... இன்டல் பண்றியா? எனக்கென்று இந்த வேலை, இந்த வேலைக்கென்று நான் என்று எப்போதோ முடிவாகிவிட்டது. என்ன எதிர்ப்பு வந்தாலும்...''

தலையைப் பிடித்துக் கொண்டாள் கவிதா. நல்ல வேளை, அவலட்சணத்தை மேலே தொடரவிடாமல் பியூன் கவிதாவை அழைத்துச் சென்று ''உள்ளே போங்க'' என்று ஓர் அறையைக் காட்டினான்.

அறையினுள் ஒரு பெரிய மேஜை. அதற்குப் பின்னால் இருந்த நாற்காலியில், இடத்தைக் கொஞ்சம்கூட விணாக்காமல் உட்கார்ந்திருந்தார் ஒருவர். ஒருவேளை அந்த நாற்காலி அவரை அளவெடுத்துச் செய்யப்பட்டதோ என்றுகூடக் கவிதாவுக்குச் சந்தேகமாக இருந்தது. பெரிய முகத்தில் பெரிய கண்கள். மூக்கின் கீழ்ப் பிரதேசம் முழுவதையும் மறைத்துக் கொண்டிருந்த அடர்ந்த மீசை. கழுத்தே காணப்படவில்லை. மேஜையின் பக்கவாட்டில் மற்றொரு நாற்காலியில் அமர்ந்திருந்தவர் ஒரு வழுக்கைத் தலையர். சிவந்த முகத்தில் குள்ளநரியின் விஷமம் தென்பட்டது. நெற்றியில் காலணா அளவுக்கு ஒரு பெரிய குங்குமப் பொட்டு. பார்த்தவுடன் இருவர் மீதும் வெறுப்புத் தோன்றியது கவிதாவுக்கு. இதையெல்லாம் சில விநாடிகளில் அவள் கிரகித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று காட்டு மிருகமொன்றின் உறுமல் போன்ற ஓர் ஓசை அவள் காதில் விழுந்தது. 'தப்பித் தவறி ஏதாவது மிருகக்காட்சி சாலைக்குள் நுழைந்து விட்டோமா?' என்று எண்ணியபடி சுற்றிப் பார்த்த கவிதாவுக்குப் பிறகுதான் மேஜையின் எதிரில் இருந்தவர் தன்னை உட்காரச் சொல்கிறார் என்று புரிந்தது.

''அ... மிஸ் சபிதா...'' காட்டு மிருகம் பேசியது.

''மன்னிக்க வேண்டும். சபிதா இல்லே, என் பெயர் கவிதா.''

''ஏதோ ஒன்று. பெயரில் என்ன இருக்கிறது? என்ன மிஸ்டர் காளமேகம்?''

''ஹி...ஹி...ஹி... ஆமாம். பெயரில் என்ன இருக்கிறது? திறமைதான் முக்கியம்'' என்றது வழுக்கைத் தலை.

''மிஸ் கவிதா! அப்ளிகேஷனுடன் முன் உங்கள் டிகிரி சர்டிபிகேட்டை இணைக்கவில்லை?''

இந்த விஷயத்தில் கவிதாவுக்குச் சந்தேகமே இருக்கவில்லை. ''மன்னிக்கணும். அதை அனுப்பியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது'' என்றாள்.

''என்ன? அப்படியானால் நான் பொய் சொல்கிறேனா?'' காட்டு மிருகம் வழுக்கைத் தலையைப் பார்த்தது.

''ஆமாம்... அ.... இல்லை. அவர் என்ன பொய் சொல்கிறாரா? 'நாராயணா, நாராயணா அண்டு நாராயணா'வின் மானேஜர் பொய் சொன்னதாக இதுவரையில் யாரும் துணிந்து சொன்னதே கிடையாது.''

''இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. எங்காவது தவறுதலாக...''

''போகட்டும். இதற்கு முன்பு எங்கு வேலை பார்த்தீர்கள்?''

''இதுவரை நான் வேலைக்குப் போகவில்லை.''

காட்டு மிருகம் பெரிய ஹாஸ்யத்தைக் கண்டுவிட்டது போலச் சிரித்தது. கூடவே வழுக்கைத் தலையும் கனைத்தது.

''மிஸ் கவிதா! முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு இங்கு வேலை கிடையாது. நீங்கள் போகலாம்.''

கவிதாவின் பொறுமை விடைபெற்றது.

''அப்படியா? சரி. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். நான்தான் இதைப் பற்றி உங்களுக்கு முன்பே தெரிவித்திருந்தேனே, பின் எதற்காக இன்று என்னை அனாவசியமாக அழைத்தீர்கள்?''

''என்ன?'' காட்டு மிருகத்தின் மீசை துடித்தது. ''தகுதி இல்லாததோடு அதிகப்பிரசங்கித்தனமாக வேறு பேசுகிறாயா? உனக்கு இங்கு மட்டுமில்லை, இந்த ஊரில் எங்குமே வேலை கிடைக்காதபடி என்னால் செய்ய முடியும்'' என்று சொல்லி மேஜையின் மீது ஓங்கிக் குத்தியது காட்டு மிருகம். அந்த வேகத்தில் மேஜை இழுப்பறை திறந்து கொள்ள, காற்றினால் பல காகிதங்கள் பறந்தன. அவற்றைப் பிடித்த போது கவிதாவின் கண் முன் விரிந்துக் கொண்டு நின்றது அவளது டிகிரி சர்டிபிகேட்.

நிமிர்ந்த கவிதா காட்டு மிருகத்தின் கண்களை நேராகச் சந்தித்தாள்.

''மிஸ்டர் மானேஜர்! நீங்கள் இந்த வேலையை யாருக்குக் கொடுத்தாலும் சரி, எனக்கு அக்கறையில்லை. ஆனால் அதற்காக எனக்குத் திறமை இல்லாதது போலப் பேசி என்னை அனுப்ப நினைப்பது உங்கள் சின்னத்தனத்தைக் காட்டுகிறது. இந்த மாதிரியே ஏமாற்று வேலைகள் செய்து கொண்டிருந்தீர்களானால் உங்கள் கம்பெனி நாராயணா, நாராயணா அன்டு நாராயணாவாக இருக்காது. கூடிய சீக்கிரமே கோவிந்தா, கோவிந்தா அன்டு கோவிந்தாவாகப் போய்விடும், ஜாக்கிரதை!''

கவிதா வழுக்கைத் தலையின் பக்கம் திரும்பினாள்.

''மிஸ்டர் வியாபாரி! நீங்கள் எந்த வியாபாரம் வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் குங்குமம் மட்டும் வேண்டாம். ஏனென்றால் தினமும் உங்கள் நெற்றிக்கே ஒரு கிலோ செலவாகிவிடும். நான் வருகிறேன்'' என்றவள் அங்கிருந்த இருவரிடமிருந்தும் கர்...புர் என்ற சத்தத்தைத் தவிர வேறெதுவும் வராததால் வெளியேறினாள்.

வெளியில் கதவில் காதை வைத்து ஒட்டுக் கேட்க முயன்று கொண்டிருந்த பியூன் கேட்டான்: ''என்னம்மா நடந்தது?''

''நாறுமாறும் பேசினாங்க. நல்லாத் திட்டிட்டு வந்திட்டேன்.''

தெய்வ தரிசனத்தைக் கண்டுவிட்ட பக்தனைப் போல முகம் மலர பியூன் கூறினான்: ''என்ன, திட்டினீங்களா? ஐயோ! நான் பார்க்காது போய்ட்டேனே!''

வெளியில் வந்த கவிதாவுக்கு அந்த மனநிலையில் வீட்டுக்குச் செல்லப் பிடிக்கவில்லை. அருகில் இருந்த தியேட்டருக்குள் நுழைந்து க்யூவில் நின்றவள், ''மன்னிக்க வேண்டும், எனக்காக ஒரு டிக்கட் வாங்கித் தர முடியுமா?'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். அங்கு பளிச்சென்ற முகத்துடன், பண்பான தோற்றத்துடன் நின்று கொண்டிருந்த வாலிபனைக் கண்டபோதுதான் தன் தோற்றத்திலிருந்த பல குறைபாடுகள் கவிதாவுக்குத் தெரிந்தது. 'சே! வீட்டுக்குப் போய் மறுபடியும் நன்றாக 'டிரஸ்' பண்ணிக் கொண்டு வராமல் போனேனே' என்று எண்ணியபடி டிக்கெட்டுகளை இரண்டாக வாங்கினாள்.

இருவரும் சென்று உட்கார்ந்து கொண்ட பிறகு அவன் பேசினான்:

''என் பெயர் நிரஞ்சன், பி.ஈ.; சொந்தமாக பிஸினஸ் செய்கிறேன். நீங்கள்?''

''மிஸ் கவிதா, பி.ஏ.; சினிமா பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்!''

''ஹா ஹா...'' என்று பெரிதாகச் சிரித்தான் நிரஞ்சன்.

''மிஸ்டர் நிரஞ்சன்! தயவுசெய்து மறுபடியும் சிரிக்காதீர்கள். எல்லாரும் திரும்பிப் பார்க்கிறார்கள்.''

''நோ நோ. மிஸ் கவிதா! நான் எப்பொழுதுமே இப்படிச் சிரிப்பதில்லை. உங்கள் ஜோக் அவ்வளவு பிரமாதம். மிஸ் கவிதா, நீங்கள் வேலை பார்க்கிறீர்களா?''

முன் பின் தெரியாத இந்த வாலிபனிடம் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளக் கவிதாவுக்கு மனமில்லை.

''எதற்கு வேலைக்குப் போக வேண்டும்? பெண்கள் எல்லோரும் வேலைக்குக் கிளம்பிவிட்டால் வீட்டை யார் பார்த்துக் கொள்வார்கள்? அதனால் கல்யாணம் செய்து கொண்டு குடும்ப வாழ்வில் ஈடுபடுவதுதான் சரி என்று நான் நினைக்கிறேன்.''

''அதற்ில்லை. என் கம்பெனியில் ஒரு வேலை காலி இருக்கிறது. அதை வேண்டுமானால் உங்களுக்குக் கொடுக்கலாமே என்று கேட்டேன்.''

''என்ன?'' என்று சீட்டை விட்டுக் குதித்த கவிதா ஏமாற்றத்துடன் மீண்டும் உட்கார்ந்து கொண்டாள்.

''மக்கு! மண்டு! முட்டாள்!''

''மிஸ் கவிதா?!''

''உங்களை இல்லை மிஸ்டர், நிரஞ்சன்! என்னையேதான் சொல்லிக் கொள்கிறேன்.''

''ஏன்?''




தேசியப் பாதுகாப்பு நிதி கிரிக்கெட் பந்தயம் பம்பாயில் நடந்தவுடன் ராஷ்டிரபதி, பிரதமர், முப்படைத் தலைவர்கள் ஆகியோர் 'ஆட்டோகிராப்' போட்ட ஒரு கிரிக்கெட் மட்டை ஏலத்தில் விடப்பட்டது. முன்னாள் கிரிக்கெட் ஆட்டக்காரர் விஜய் மர்ச்செண்ட் பத்தாயிரத்துக்குக் கேட்டார். அவர் மனைவி 10,001க்கு அதை ஏலத்தில் எடுத்து, பணத்தைக் கொடுத்துவிட்டுக் கிரிக்கெட் மட்டையை வாங்கவருக்கும் பரிசாகக் கொடுத்து விட்டார்! டைம்ஸ் ஆப் இந்தியா - பாலி

இப்போது முன் பின் தெரியாதவனாக இருந்தாலும் பல வருடங்கள் பழகிவிட்டது போல் தோன்றிய இந்த வாலிபனிடம் இனியும் மறைக்கக் கூடாது என்று நினைத்த கவிதா, மடமடவென்று நடந்தது அத்தனையும் சொல்லி விட்டுக் கடைசியில், ''நீங்கள் கொடுக்கவிருந்த வாய்ப்பையும் என் வாயாலேயே கெடுத்துக் கொண்டேன்'' என்று முடித்தாள்.

''அதனாலென்ன மிஸ் கவிதா? நீங்கள் சொன்னது போலக் குடும்ப வாழ்விலிருந்துகொண்டே வேலையும் பார்க்கலாமே!''

வியப்புடன் நிமிர்ந்த கவிதா அவன் கண்களில் தோன்றிய குறும்புத்தனத்தைப் புரிந்து கொண்டாள். கதாநாயகி — கதாநாயக லட்சணமாக இருவர் முகத்திலும் நிறைய அசடு வழிந்தது. ஆனால் அதைவிட, அன்றிரவு மதுவிடம் ''நான் ஒரு வேலை மட்டுமல்ல, ஒரு மாப்பிள்ளையும் தேடிக்கொண்டு விட்டேன்'' என்று கவிதா கூறியபோது, அவள் முகத்தில் வழிந்த அசடுதான் அதிகம் என்பதில் யாருக்குச் சந்தேகம் இருக்க முடியும்?


வயிற்றுக் கோளாறு?
வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?
2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்...
விரைவிலேயே
நிவாரணம் பெற

mcm/ni/4 tam



மனங்கவரும்
ஃபாயில் பேக்—
நயமான விலை

இதோ!

புதிய பார்லே

தின் ஆரோரூட்

போஷாக்கான பிஸ்கட்

முரமுரப்பானது, சக்தி மிக்கது—
சுலபமாக ஜீரணமாகிறது!
சாப்பிட ருசியானது!

புதுப் பொலிவுக் குன்றாமல் அமைந்த கவர்ச்சியான பேக்குகளில்

everest/325d/PP tam

தமிழகத்தில் குஜராத்தி மாநாடு

பாரதியாரின் சில பொறுக்கு மணிக் கவிதைகள் அண்மையில் குஜராத்தியில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்திருக்கிறது. சென்னையில் நடைபெற்ற குஜராத்தி சாகித்ய பரிஷத் மகாநாடு, தமிழக முதல் அமைச்சருக்கு இந்த நூலைத் தந்து தமிழ் மொழியிடமும் தமிழ் இலக்கியத்தினிடமும் தங்களுக்குள்ள பற்றைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

இலக்கியத்தின் இலட்சியம் என்ன? சாதாரண மக்களுக்கு அவர்கள் வாழ்க்கையைச் செப்பனிடப் பயன்பட வேண்டும். இந்தக் குறிக்கோளிலிருந்து விலகக் கூடாது என்று மகாநாட்டுக்குத் தலைமை வகித்த தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா வலியுறுத்தினார்.

மகாநாட்டைத் திறந்து வைத்த தமிழக முதலமைச்சர், காந்தியடிகளோடு தமிழகத்துக்குள்ள உறவை எடுத்துக் கூறி, குஜராத்தி மொழி இலக்கியங்களைத் தமிழகம் எவ்வளவு ஆர்வத்தோடு ஏற்றிருக்கிறது என்பதை நினைவுபடுத்தினார். மற்ற மொழிகளும் இம்முறையைப் பின்பற்றினால், மொழி வெறி மறைந்து சிந்தனை ஒருமைப்பாடு ஏற்படும் என்பதையும் எடுத்துக் கூறினார்.

வரவேற்புரை நிகழ்த்திய திரு டி. வி. கோத்தாரி தமிழ் நாட்டில் குஜராத்திகளின் குடியேற்றத்தையும் அவர்கள் தமிழ் மண்ணோடு கலந்துவிட்டதையும் குறிப்பிட்டு, இங்குள்ள பல்கலைக் கழகத்தில் குஜராத்திக்கும் இடம் வேண்டும் என்றார். அதற்குப் பரிஷத்தின் சார்பில் ரூபாய் இருபத்தையாயிரம் நன்கொடை தருவதாகவும் கூறினார். ஒற்றைக்கு இரட்டை பலனாகக் குஜராத் பல்கலைக் கழகமும் தமிழுக்கு இடம் அளிக்கும் என்று குஜராத் பல்கலைக் கழக துணைவேந்தர் ஸ்ரீ உமா சங்கர் ஜோஷி கூறியுள்ளார்.

சென்னையில் நடந்த குஜராத்தி சாகித்ய பரிஷத்தின் இந்த மகாநாடு இருபத்தாறுவது மகாநாடு ஆகும். இதுபோன்ற மகாநாடுகளை வேறு மொழி ராஜ்யங்களிலும் நடத்துவது என்று தீர்மானித்திருப்பது மொழிகளின் நெருக்கத்துக்கும் இலக்கியப் பாலங்கள் அமைவதற்கும் உதவியாக இருக்கும்.

இந்த பரிஷத்தின் சென்ற ஆண்டுத் தலைவராக இருந்தவர் சுந்தரம் என்னும் புனைபெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் புகழ்பெற்ற குஜராத்திக் கவிஞர் ஸ்ரீ திரிபுவன தாஸ் லோஹர் என்பவர். அவரிடமிருந்து தலைமைப் பீடத்தை ஏற்றவர் ஸ்ரீ ஜீனுபாய் தேசாய் 'ஸ்நேக ரஷ்மி' என்பவர்.


நாலிழை போல அறுகாமல் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதற்காக இந்தப் பதவி மாற்றத்தைப் பட்டயம் வழங்கி நிறைவேற்றினார்கள். இந்த விழாவில் கலந்து கொண்டு பேசிய அத்தனை பேச்சாளர்களும் முதலில் பேசியவருக்கு வாழ்த்தும் நன்றியும் தெரிவித்த பின்னரே தங்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள். இது புதுமையான அனுபவமாக நமக்கு இருந்தது; அழகாகவும் இருந்தது. ஒட்டுமொத்தமாகக் கடைசியில் நன்றி கூறுவதுதானே நமக்குப் பழக்கம் !

காந்தி வழிச் செல்வர் காகா சாகப் காலேல்கர், ஸ்ரீ ஸ்நேக ரஷ்மி ஆகியோர் அருமையான சொற்பொழிவு ஆற்றினார்கள். கருத்தரங்குகள் பல நடைபெற்றன.

தமிழகத் தலைநகரில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பெரும்பான்மையான நிகழ்ச்சிகள் குஜராத்தி மொழியிலேயே நடைபெற்றதனால், மற்ற மொழி இலக்கிய கர்த்தாக்கள் அதிகம் அக்கறை காட்ட முடியவில்லை. இப்பகுதி மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் பேசிக் குஜராத்தி இலக்கியம் தன் வளம் காட்டிப் பிற இலக்கியச் செல்வங்களைப் புரிந்துகொள்ள முயன்றிருக்குமானால் சென்னை போன்ற தமிழ்ப் பகுதியில் மகாநாடு கூட்டியதன் பயனைப் பெற்றிருக்கலாம்.

குஜராத்தி சாகித்ய பரிஷத் பல நூல்கள் வெளியிட்டு வருகிறது. குஜராத்தி மொழி வளர்ச்சிக்குப் பரிசுகள் வழங்கிப் பெருமை கொள்ளுகிறது. இவ்வாண்டுப் பரிசை ஸ்பாவிஷ் எழுத்தாளர் ஒருவருக்கு — குஜராத்தி மொழியில் அவர் இயற்றிய நூலுக்காக வழங்கி — கடல் தாண்டியும் தன் புகழை வளர்த்துக் கொண்டுள்ளது. — ரா. வீ.





1. குஜராத்தி இலக்கிய மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள். 2. தமிழக கவர்னர் திரு கே. கே. ஷாவைத் திரு டி. வி. கோத்தாரி வரவேற்கிறார்.

கெண்டி வீரனுடைய வெற்றி

"போடு ஒன்றரை டிராம்!" என்றான் கெண்டி வீரன்.

கடைக்காரன் வார்த்துக் கொண்டிருக்கையிலேயே, "போடய்யா ஒன்றரை டிராம்! யார் என்ன பண்ண முடியும் என்னை? பார்க்கலாம் இன்னிக்கு ஒரு கை! யாரோ கள்ளு சாராயம் குடிக்கக் கூடாது, கடைகளையெல்லாம் மூடிப்போட வேண்டும் என்று பேச வந்திருக்கிறார்களாமே. கூட்டம் கூடப் போகிறார்களாமே. விடுவேனா அவர்களை நான்? பார்த்தாயா?" என்று மடியிலிருந்து சாண் நீளமுள்ள ஒரு மடக்குக் கத்தியை எடுத்து விரித்துக் காட்டினான்.

"யாராவது என்னைக் கடைக்குப் போவதைத் தடுத்தால் இதே கத்தியால் குத்தி விடுவேன்" என்றான்.

"நம் இராஜா வைத்திருக்கிற சாராயக் கடை இருக்க, அதற்குப் போக வேண்டாமென்று சொல்ல எவனுக்கு உண்டு பாத்தியம்? சர்க்கார் பாழாய்ப் போச்சா? கேட்பார் இல்லையா?" என்றான் மறுபடியும்.

"நீ கூட்டத்துக்குப் போகிறாயா?" என்று சாராயக் கடைக்காரன் கேட்டான்.

வீரன் பதில் சொல்லாமல் சாராயத்தைக் குடித்துவிட்டுப் பிறகு தொண்டையை உருமிச் சரிப்படுத்திக் கொண்டு, "ஆ! போவேன். போகாதென்ன? என்னை விடமாட்டார்களா?" என்றான்.

"விடாமல் என்ன? எல்லோரும் வரலாமென்றுதானே விளம்பரம் போட்டிருக்கிறார்கள். நீ முன்னதாகவே போய்ப் பெஞ்சு மேல் உட்கார்ந்துகொள். யாராவது போ என்றால் போகமாட்டேன் என்று கூறு" என்றான் கடைக்காரன்.

"அப்படியே!" என்று கெண்டி வீரன் மீசையை முறுக்கிக் கொண்டு சென்றான்.

"போய், 'ஏன் குடிக்கக் கூடாது?' என்று கேள். அவர்கள் காப்பி குடிக்கிறதில்லையா என்று கேள்" என்றான் கடைக்காரன்.

"ஓ! அப்படித்தான் கேட்பேன். எனக்குப் பதில் சொல்லித்தான் பேச வேண்டும்" என்றான் கெண்டி வீரன்.

மறுபடியும் கடைக்காரன், "அவர்கள் மோட்டார் வண்டி, ரயில் வண்டி ஏறவில்லையா என்று கேள். இதெல்லாம் பார்ப்பனர்களுடைய மோசம்தானே?" என்றான்.

"எல்லாம் கேட்பேன். இன்னொரு அரை டிராம் போடு. இந்த நாளிலே சாராயத்துக்குக்கூடத் தண்ணீர் வார்த்து மோசம் செய்கிறார்கள். எல்லாம் மோசம். முன் ஒன்றரை டிராம் குடித்தவன் இப்போது இரண்டு டிராம் போட வேண்டியிருக்கிறது. கூட்டம் போட வருகிறாராமே அவர் யார்? எந்த ஊர்? அவருக்கு என்ன வேலை?"

"அவருக்கு என்ன வேலை! பேசுகிறதே தான் வேலை" என்றான் கடைக்காரன்.

"ரொம்பக் கெட்டிக்காரரா?" என்று கேட்டான் கெண்டி வீரன்.

"ஓ! உன்னை ஏமாற்றி விடுவார்" என்றான் கடைக்காரன்.

"என்னை ஏமாற்றுவதா? அதெல்லாம் பொய். பார்க்கலாம் ஒரு கை."

இரண்டு டிராமும் உள்ளே போட்டுவிட்டு, கெண்டி வீரன் போய்க் கூட்டத்தின் முன் வரிசையில், பெரிய மனிதர்களுக்கென்று போடப்பட்டிருந்த பெஞ்சியின் மேல் உட்கார்ந்து கொண்டான்.

யாரோ அவனை எழுந்திரு என்றார்கள். அவன் அசையவுமில்லை. பேசவுமில்லை; அனைவரும் சிரித்தார்கள்.

சபை ஆரம்பித்தது. எல்லோரும் கை தட்டும்





சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



போது வீரனும் கைதட்டினான். அவன் பக்கத்தில் உள்ளவர்கள் இவனிடம் சாராய வாசனையைக் கண்டு ஒதுங்கி உட்கார்ந்தனர். பிரசங்கியார் மெதுவாகப் பேசத் தொடங்கினார்.

'இவர் என்ன சாதாரணமாய்நம்ம பேச்சுத்தான் பேசுகிறார். இவர் அல்ல போல் இருக்கிறது. பார்க்கலாம். குடிக்கிறவர்களைத் திட்டுவதற்கு ஆரம்பிக்கும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று வீரன் தனக்குள் எண்ணிக்கொண்டு, மடியிலிருந்த கத்தியைத் தடவிக்கொண்டே அவர் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அவர் கதை சொல்ல ஆரம்பித்தார். வீரன் மனத்தில் தான் சிறுவனாக இருந்தபோது எப்படி இருந்தானோ, அதையெல்லாம் அவர் தெரிந்து கொண்டு பேசுகிறார் என்று எண்ணினான். பிறகு அவர் சொன்னதெல்லாம் இவனுக்குத் தான் மனைவியுடன் சந்தோஷமாயிருந்த வாழ்வை யெல்லாம் எடுத்துச் சொல்வதுபோல் இருந்தது.

'இவர் என்ன என்னைப் பற்றியே பேசுகிறார் போலிருக்கிறதே!' என்று எண்ணினான் வீரன்.

பின்னர் தன் வாழ்வு கெட்டுப் போனதெல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொல்ல ஆரம்பித்தார் போலிருந்தது. வீரன் மடியிலிருந்த கத்தியை விட்டுவிட்டுக் கண்ணைத் துடைத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

பேசுகிறவர் சொல்லுகிற கதையெல்லாம் வீரனுக்குச் சரியாய்த் தன் கதையாகவே இருந்தது. அவ்வப்போது கூட்டத்தில் எல்லோரும் 'கொல்' என்று சிரிப்பார்கள். வீரன் கண்களிலே நீர் ததும்பிற்று.

தடுக்க முடியாமல் திடீரென்று ''சாமி!'' என்று கத்திக் கொண்டு எழுந்தான்.

பேசுகிறவர் பேச்சை நிறுத்தி இவனைப் பார்த்து, ''என்ன தம்பி?'' என்றார்.

''சாமி, நீ சொல்றதெல்லாம் உண்மை. உன்னைக் குத்திவிடத்தான் நான் இன்றுஇங்கே வந்தேன். ஆனால் இப்போது நீ சொன்னதெல்லாம் நியாயம். நான் எண்ணிய எண்ணம் தப்பு. அந்தப் பொல்லாத சாராயக் கடையையும், கள்ளுக் கடையையும் மூடிவிட்டால்தான் நாம் பிழைப்போம். இது உண்மை. சுவாமி! நீ என் கடவுள்; நீ என் குரு. நீ என்னை மன்னிக்க வேண்டும்; காப்பாற்ற வேண்டும்'' என்று காலில் விழுந்து கும்பிட்டான்.

''அப்பனே! எழுந்திரு. நீ இந்த விஷத்தை இனித் தொடாமலிருக்க ஒப்புக்கொள்'' என்றார்.

'' சாமி, என் மனைவி இறந்து போனாள். நீ முன்னே சொன்னாயே, அப்படியே அவள் வயிற்றில் குழந்தை இருக்க உதைத்து நான் அவளைச் சாகடித்தேன். இது பாருக்கும் தெரியாது. மறுநாள் எடுத்துப் போய்ப் புதைத்து விட்டோம். இப்போது ஆறுவருஷம் ஆயிற்று. நான் ஒரு கொலைகாரப் பாவி'' என்று மறுபடியும் காலில் விழுந்து அழுதான்.

அவனை எடுத்துத் தழுவி, ''அப்பனே! கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். நீ இனிமேல் குடிப்பதே இல்லை என்று சத்தியம் செய்து சுவாமியின் பேரில் பாரம் போட்டுவிடு'' என்றார்.

''குடியால் மனம் தளர்ந்து போனவர்கள் இப்படித்தான். நல்லதிலும் பொல்லாததிலும் போனதே போக்கு. தடுத்துக்கொள்ள முடியாது அவசரப்படுவார்கள். இப்போது நல்ல எண்ணம் அவனுக்கு. மன உறுதி உண்டாகி மறுபடியும் பழைய வழியில் போகாமல் காப்பாற்றுமாறு கூட்டத்தில் உள்ளோர் எல்லோரும் ராமபஜனம் பஜியுங்கள்'' என்று மறுபடியும் அவர் சொல்ல, எல்லோரும் 'ராம் ராம் சீதா ராம்' என்று ஒரே தொனியாய்ப் பாடினார்கள். வீரனும் கூடிப் பாடினான்.

சாராயக் கடைக்காரன் வீரனுக்காக எதிர்பார்த்த வண்ணமா யிருந்தான்.

- 'நவசக்தி' 24-6-1929 (ஆசிரியர் திரு. வி. க.)

நன்றி : குமரி மலர்

சிமெண்டைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் எஸிஸியைக் கேளுங்கள்

ACC
the hallmark of top-quality products

மற்றபடி பொருத்தமற்ற சுண்ணும்புக்கல்லே, பெனிஃபிஸியேஷன் முறைமூலம், மூலதாதுப் பண்புகளை அதிகபட்சம் இருத்திக்கொண்டு, சிமெண்ட் தயாரிப்புக்குப் பொருத்தமான கச்சாப் பொருளாக மாற்றிய முதல் தயாரிப்பாளர்கள் எஸிஸிதான். பல்லாண்டுகளாக, எஸிஸி என்ஜினியர்களும், ஆராய்ச்சியாளர்களும், மற்றபடி வீணுகியிருக்கக் கூடிய உள்நாட்டுப் பொருள்களேயே உபயோகித்து புதுப்புதுத் தயாரிப்புகளை முதன்முதலாக உருவாக்கி வந்துள்ளனர். என்றும் எஸிஸிக்கு தரமென்றுலே தனிமோகம். இந்த மோகத்தின் தூண்டுதலி-ஞல்தான் சிமெண்ட் மற்றும் கான்க்ரீட் தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கென, ஆராய்ச்சி நிலேயம் ஒன்றை நிறுவியுள்ளது. இது அதன் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலான நிறுவனம். சிமெண்ட் மற்றும் கான்க்ரீட்டின் உபயோகங்கள் பற்றிய தொழில் நுட்ப ஆலோசனை இலவசமாக வழங்கப் படுகிறது. எனவே, சிமெண்டைப் பற்றி நீங்கள் ஏதாவது தெரிந்து கொள்ள விரும்பினுல் எஸிஸியைக் கேளுங்கள்.

பழுப்பு போர்ட்லாந்து சிமெண்ட் ● போஸ்ஸோலாஞ சிமெண்ட் ● சூளை ஸ்லாக் சிமெண்ட் ● லோ ஹீட் சிமெண்ட் ● ஆயில்வெல் சிமெண்ட் ● விரைவில் இறுகும் சிமெண்ட் ● ஸில்விக்ரீட் வெள்ளை சிமெண்ட்

- ரிஃப்ரேக்டரிகள் அதாவது ஹை. அலுமின ஃபையர்ப்ரிக்குகள் (சூளைச் செங்கல்கள்) மற்றும் ரிஃப்ரேக்டரி சாமான்கள்.
- சுழல்முறை உலேகள், கல் பொடிக்கும் இயந்திரங்கள், இஓடி க்ரேன்கள், பால் மற்றும் ட்யூப் மில்கள், சிமெண்ட்,ரசாயன மற்றும் இதர தொழில் துறைகளுக்கென கன்வேயர் சாதனங்கள் ஆகியவை உட்பட கனரக இயந்திரங்கள்.
- நிலக்கரி எடுத்தல்.
- மண்ணியல் ஆலோசனைப் பணிகள்.

எஸிஸி தி அஸோஸியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிட்.

SISTA'S CMI-404 TM



வட்ட மேஜை

பிப்ரவரி மாதம்வரையில் குறைந்த பட்சக் கட்டணம் 6 யூனிட்டுக்கு ரூ. 2.85 வசூலிக்கப் பட்டு வந்தது. ஆனால் மார்ச்சிலிருந்து 8 யூனிட்டுக்குக் குறைந்தபட்சக் கட்டணம் 4 ரூபாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. எங்கள் குடும்பத்தைப் போல் சிறு ஏழைக் குடும் பங்கள்தான் இந்தச் 'சிரமைப்பு' திட்டத்தில் பாதிக்கப்படுகின்றன. எங்கள் வீட்டில் மூன்று விளக்குகள்தான் உள்ளன. சுற்றிச் சுற்றிப் போனால் நான்கு யூனிட்டுகளுக்கு மேல் மின் சாரம் உபயோகப்படுத்துவது இல்லை. முத லில் இருந்த குறைந்தபட்சக் கட்டணத்துக்குள் எரிப்பதால் ரூ. 2.85 கட்டி வந்த நாங்கள் தற்பொழுது ரூ. 4 கட்ட வேண்டிய நிலைமை வந்துவிட்டது. 'மேலும் நான்கு யூனிட்டுகள் எரிப்பதுதானே' என்று கேட்கலாம். போதிய அளவு மின்சார விநியோகம் இல்லாமல் பல தொழிலகங்கள் சிரமப்படும்போது வீணாக மின்சாரத்தைச் செலவழிக்க மனம் ஒப்ப வில்லை. பழைய குறைந்தபட்ச கட்ட ணத்தை அமுல் செய்தால்தான் எங்களைப் போன்ற ஏழைகள் சிரிக்க முடியும்!

ஓசூர்
25–4–72 பொற்கொடி.

தலித்தலையில் காந்தி சிலைக்கு அருகில் கள்ளுக்கடை, ஒயின் ஷாப் இருப்பதை 'வெட்கம், வெட்கம்' என்று கூறி வட்ட மேஜைப் பகுதியில் நண்பர் நடராசன் எழுதி யிருக்கிறார். ராமா, ராமா, வெட்கப்படுவ தற்கு இதில் என்ன இருக்கிறது? காந்தி யடிகள் ஏழை பங்காளன். கள் குடிப்ப வர்கள் அந்தப் பங்காளனின் உள்ளத்தைக் கவர்ந்த ஏழைகள். அவர்கள் கூடும் இடத் துக்கு அருகே இல்லாமல் காந்தி சிலையைச் சென்னை கடற்கரை ஓரத்திலா நிறுத்துவது! ஏழை மக்களுக்காகவே எப்போதும் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் நமது தி. மு. க. அரசினர் 'எதற்கெடுத்தாலும் சிலை எழுப்பு கிறார்கள்' என்று நன்றி உணர்வும் நாட்டுப் பற்றும் இல்லாதவர்கள் தாக்கிப் பேசியும், எழுதியும் வருகிறார்கள். இந்தத் தாக்குதலைச் சற்றும் லட்சியம் செய்யாமல் ஒவ்வொரு கள்ளுக்கடை வாசலிலும் காந்தியடிகளின் சிலையை விரைந்து வைக்க முனைந்து செயல்பட வேண்டும். அது மட்டும் போதாது. சென்னை யிலும், மதுரையிலும் மற்றும் எங்கெல்லாம் காந்தி மண்டபங்களும், காந்தி நிலையங்களும் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் கள்ளுக் கடைகளை வைக்க வேண்டும். கூடவே, ஒயின் ஷாப்புகளும் வைத்தால் ஏழைகளும், பணக்காரர்களும் தம்முள் அளவளாவ வாய்ப் புக்கள் ஏற்படும். முக்கியமாக ஏழைகள் மனத்தில் அவர்களது பங்காளனுகக் காந்தி யடிகளின் நினைவு ஓடிக் கொண்டேயிருக்கும்; நிற்காவிட்டால் போகட்டும். ஒயின் ஷாப் களின் உதவியால் நாளடைவில் பணக்கார னும் ஏழையாவான். ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமும் மறையும். இதுதானே நமது சோஷலிஸ லட்சியம்! இதை அடைந்தே தீருவோம். வாழ்க, காந்தியடிகள். வாழ்க கள்ளுக்கடை!!

சென்னை — 34
5–5–72 குட்டிகிருஷ்ணன்

சென்ற 30-4-72 கல்கி இதழ் கடைசிப் பக்கத்தில் உள்ள தகவல் துணுக்கில் 'அல்ட்ரா ஸோனிக்' என்பதற்கு, 'ஒலியை மிஞ்சிய வேகம்' என்று பொருள் கூறியிருப்பது தவறு ஆகும். அதற்குக் 'காதுக்குக் கேட்கக் கூடிய மிக உயர்ந்த ஸ்தாயியைவிட அதிகமான ஸ்தாயி உடைய அதிர்வு' என்பதுதான் சரி யான பொருள்.

ஒலியை மிஞ்சிய வேகத்துக்கு 'சூப்பர் சோனிக்' (Super Sonic) என்ற சொல்லைப் பயன்படுத்துவது வழக்கம். ஜெட் விமானங் களில் சில சூபர்சானிக் வேகத்தில் பறக் கின்றன.

திருவனந்தபுரம்
28–4–72 அ. காசிவிசுவநாதன்

கல்கி 9–4–72 வட்டமேஜை பகுதியில் ஆசிரியர்கள் அவதி என்ற தலைப்பில் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தில் ஆசிரியர்கள் அவதிப்படுவதாக 'நல்லாசிரி யன்' எழுதியிருந்தார். மேற்படி கடிதத்தில் கூறியிருப்பன உண்மைக்குப் புறம்பானவை.

1. கொடைக்கானல் சுற்றுலா மாளிகை கட்ட ஆசிரியர்களிடமிருந்து இவ்வொன்றியத் தின் மூலம் ரூ. 25 வீதம் வசூலித்தது இல்லை. ஒன்றியத்தில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டமும் இல்லை.

2. பரிசுச் சீட்டுகள் ரூ. 300, 400-க்கென ஆசிரியர்களுக்கு விற்கப்பட்டன என்பது முற்றிலும் தவறு. ஆணையரும், மற்ற ஒன்றிய ஊழியர்களும், பரிசுச் சீட்டுகள் கிராமங்களில் விற்பனை செய்தபோது அந்தந்தப் பள்ளி ஆசிரியர்களும், வளர்ச்சி ஊழியர்களும் உதவினர்.

3. அன்னை சிலை அமைக்க இவ்வட்டாரத் தில் உத்தியோகச் சார்பற்ற பொதுநலத் தொண்டர்களடங்கிய ஒரு குழு அமைக்கப் பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது. ஆனால் இதில் ஆசிரியர்களிடமிருந்து பணம் பெற எவ்வித திட்டமும் இல்லை.

4. தற்போதைக்கு அமுலில் இருந்துவரும் அரசு உத்தரவுகளுக்கிணங்க இவ்வொன்றிய ஆசிரியர்களுக்கு Expensive Locality Allowance வழங்கப்பட்டு வருகிறது. Hill Allowance வழங்க இதுவரை அரசு உத்தரவு அளிக்க வில்லை.

5. குளிர்கால ஊதியம் Winter Allowance அரசு உத்தரவுக்கிணங்க ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது.

கொடைக்கானல் வெ. விசயராகவன்
12-4-72 பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியம்

வயசு வந்த பெண்ணை எத்தனை நாட்களுக்கு வீட்டில் வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியும்? மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது மாதிரி தான்!

சுந்தரமூர்த்திக்கு அது தெரியாத விஷயமல்ல. அவர்தாம் என்ன செய்வார்? எங்கெல்லாமோ அலையாய் அலைகிறார். வரன் சிக்கினால்தானே? பெண் பார்க்க வருகிறவர்கள் போடுகிற நிபந்தனைகள் பயங்கரமாக இருந்தன. அவர் ஆசிரியர் உத்தியோகத்தில் சேமித்து வைத்திருந்த பணமெல்லாம் அடுத்தடுத்து இரண்டு பெண்களைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கவே போதவில்லை.

நாலு வருஷங்களுக்குமுன் இரண்டாவது பெண் அம்புஜத்தைப் புக்ககத்துக்கு அனுப்பி விட்டு அவர் 'அப்பாடா' என்று ஈஸிசேரில் வந்து சாய்ந்தபோது அவர் மனைவி பாகீரதி ரகசியமான குரலில், ''என்னங்க, நிம்மதியாகப் படுத்துட்டீங்க? அடுத்தது நம்ம மாலதிக்கும் வரன் வேட்டையில் இறங்கியாகணுமே!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

சுந்தரமூர்த்தி திருதிருவென்று விழித்தார்.

''என்ன, புதிர் போடறே?''

''புதிர் ஒண்ணுமில்லே. உங்கள் மூணாவது பெண் மாலதி வயசுக்கு வந்துட்டா!''

சுந்தரமூர்த்தி மனைவியின் முகத்தை வெறித்து நோக்கினார். அவள் 'ம்க்கும்' என்று முனகிவிட்டுக் கழுத்தை வெட்டினாள்.

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்டது. சேமிப்பு, அது இது எல்லாம் இரண்டு கல்யாணங்களிலேயே கரைந்து போயிற்று. பென்ஷன் பணத்தை வைத்துக் கொண்டு காலம் தள்ள வேண்டிய நிலைமை. இரண்டு மாப்பிள்ளைகளும் உதவி செய்வார்களா? வேண்டாம், வேண்டாம். இனிமேலும் அவரை அவர்கள் தொந்தரவு செய்யாமல் இருந்தால் போதும்.


''ஈஸிசேரில் சாய்ந்து, பக்கத்து வீட்டுத் தினப்பத்திரிகையை இரவல் வாங்கிட்டு வந்து ஓர் எழுத்து விடாமல் படிச்சு முடிச்சுட்டாப் போதுமா? ஒரு நாலு பையன்களை டியூஷன் வெச்சுக்கிட்டா பணம் வராதா?'' என்று தூண்டினாள் மனைவி.

''என்ன, என்ன?'' என்று பதறினார் சுந்தரமூர்த்தி. ''பையன்களுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டுப் பணம் கேட்கிறதா?''

''பின்னே? நீங்க உத்தியோகம் பார்த்த காலத்திலேதான் பணம் காசு வாங்காமெ, சாயந்திரம் சாயந்திரம் ஒரு பட்டாளத்தையே திண்ணையில் உட்கார்த்தி வெச்சுக்கிட்டுப் பாடம் சொல்லிக் கொடுத்தீங்க! இப்போ அதுமாதிரிச் செய்ய முடியுமா? நாம் என்ன யாசகமா கேட்கிறோம்?''

தினமும் பாகீரதி அவரை நச்சரிக்கவே, அவர் சில பையன்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்.

ஈஸிசேரில் சாய்ந்து அப்போது தான் கண் மூட ஆரம்பித்த சுந்தரமூர்த்தியை, ''சார்...! சார்.....!'' என்னும் குரல் எழுப்பிவிட்டது.



வாசல் பக்கமாக எட்டிப் பார்த்தார்.

''யார் அது ?''

வெளுப்பாய், ஒல்லியாய், கருகருவென்ற தலை முடியுடன் நின்று சிரித்துக் கொண்டிருந்த இளைஞனை அவர் சட்டென்று அடையாளம் கண்டு கொண்டார்.

''அடடே! பாலுவா? வா அப்பா, வா!'' என்று அவர் வரவேற்றார். பிறகு, ''அடியே! நம்ம பாலு வந்திருக்கிறான்....!'' என்று மனைவிக்குச் சொன்னார்.

பார்வதி வெளியில் வந்தாள்.

''சௌக்கியமா, மாமி?''

''சௌக்கியந்தான் !''

சமையல் அறை ஜன்னல் வழியே மாலதி எட்டிப் பார்ப்பது பாலுவுக்குத் தெரிந்தது.

''உட்கார் !'' என்றார் சுந்தரமூர்த்தி.

''பரவாயில்லே, சார் !''

''சும்மா உட்கார் !''

''பரவாயில்லே, சார் !''

''அட, என்னப்பா நீ! ஒரு காலத்தில் எங்கிட்டே படிச்சே ! இப்போ நல்ல உத்தியோகம் பார்க்கிறே! அதுதான் எனக்குச் சந்தோஷம். உட்கார். சும்மா உட்கார் !''

பாலு, நாற்காலியின் நுனியில் பட்டும் படாததுமாக உட்கார்ந்தான். எதும் பேசாமல் எப்படி இருக்க முடியும்? ''அந்தக் காலத்திலே நீங்கள் எங்களுக்குப் பள்ளிக்கூடத்திலே மட்டும் இல்லாமல், சாயந்திரம் சாயந்திரம் வீட்டிலேயும் சொல்லிக் கொடுத்து எங்களை உருப்படியாக்கி விட்டதால்தான் சார், நாங்கள் இந்த உத்தியோகம் பார்க்க முடிகிறது. பணம், காசுக்காகவா அப்படி உழைத்தீர்கள் ? எல்லாரும் முன்னேறணும் என்கிற நல்ல எண்ணம்தானே, சார் ? உங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும் ?''

சுந்தரமூர்த்தி தலையை ஆட்டினார். ''ஆனால் இப்போ பொழுது போறது எனக்குச் சிரமமாக இருக்கிறது!'' என்றார். ''அது சரி... இப்போ பெங்களூரிலேதானே இருக்கே.... ஹோட்டல் சாப்பாடுதானா !''

''ஆமாம், சார் ! இந்த வருஷமாவது இந்தப் பக்கம் மாற்றிக் கொண்டு வரணும்!''

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போனான் பாலு. அவனுக்குப் பக்கத்துத் தெருதான். விடுமுறை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறான்.

அவன் போன பிறகு, பார்வதி வந்தாள். ''என்னங்க, இந்தப் பிள்ளைக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்று அவன் வீட்டில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல பையன்!''

பார்வதி அவர் முகத்தையே சற்று நேரம் உற்றுப் பார்த்தாள். ''நீங்கள் போய் அந்தத் துரைசாமியைப் பார்த்தால் என்ன?''

''துரைசாமியைப் பார்க்கிறதா? எதுக்கு?''

''எதுக்கா ?'' அவளுக்குத் தன் கணவன் பேரில் சிறிது கோபம் வந்தது. ''உங்களுக்கு எல்லாம் அப்பட்டமாகச் சொல்லணும். சொல்றேன். பாலுவோட அப்பா துரைசாமி கிட்டே போய், 'என் பொண்ணை உங்கள்



அவனுக்கும் நன்றி உண்டு!

ஆழ்.வே.ராமசாமி



அமெரிக்கப் படையில் மூன்று பெண் ஜெனரல்களும் கப்பல் படையில் ஒரு பெண் அட்மிரலும் இருக்கிறார்கள்.

-டைம்ஸ் ஆப் இந்தியா -பாலி

பிள்ளைக்குப் பண்ணிக்கிறீங்களா ?'ன்னு கேளுங்கோ !''

சுந்தரமூர்த்தி நிமிர்ந்து உட்கார்ந்தார். நல்ல பையன். நல்ல உத்தியோகம். கைநிறையச் சம்பளம். தெரிந்த மனிதர்கள்!

'' ஆமாம். இந்த யோசனை எனக்குத் தோணவே இல்லையே!''

''எப்படித் தோணும்? நீங்கள்தான் அந்தக் காலத்திலே உங்கள்கிட்டே படிச்ச பையன்கள் அத்தனை பேரும் பாஸ் பண்ணின அமர்க்களத்தையே இன்னமும் நினைச்சு நினைச்சுச் சந்தோஷப்பட்டுக்கிட்டிருக்கீங்களே !''

'' பாலு தங்கமான பிள்ளைதான். நான் சொன்னால் கேட்பான். அவன் அப்பா துரைசாமியும் நல்ல மனிதர்தாம். வரதட்சிணை, வரிசை அப்படி இப்படின்னு ஒரேயடியாய்ப் பயமுறுத்தமாட்டார். நம் நிலைமை தெரிஞ்சு அனுசரிக்கப் போவார். ஆனால், நான் நேரடியாக அவரை எப்படிக் கேட்கிறதுங்கிறது தான் புரியலே. சங்கோசமா இருக்கு. ஒரு வேளை, 'உம்மோட அந்தஸ்துக்கு எங்கிட்டே எப்படி ஐயா, வந்தீர்'னு கேட்டு விட்டால் என்ன செய்வேன்?''

''சரி. நீங்கள் நேரே போய்க் கேட்க வேண்டாம். மேட்டுத் தெருவிலே இருக்கிறாரே சங்கரன் மாமா; அவரைப் போய்ப் பார்த்து விஷயத்தைச் சொல்லி அவரையே கேட்கச் சொல்லுங்களேன் !''

அது நல்ல யோசனையாகத் தோன்றியது சுந்தரமூர்த்திக்கு.

''இன்னிக்கு நல்ல நாள்தான். நல்ல நேரந்தான் !'' என்று அவசரப்படுத்தினாள் மனைவி.

சுந்தரமூர்த்தி சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு கிளம்பினார்.

'என்ன இருந்தாலும் பாரேதிக்குச் சில சமயங்களில் நல்ல யோசனைகளாகத்தான் தோன்றுகின்றன !

'நன்றாகத் தெரிந்தவன்தானே....? அவருக்குப் படவில்லையே !

'ஆனால், அவன் அப்பா ரொம்ப எதிர்பார்க்கக் கூடாது. பையன் சொன்னால் கேட்காமலா போய் விடுவார்....?'

அந்தக் காலத்தில் பத்தும் பதினைந்துமாக மார்க் வாங்கிக் கொண்டிருந்த அவனை எவ்வளவு பாடுபட்டு எழுபது என்பதுக்கு மேலே வாங்க வைத்திருக்கிறார். எவ்வளவு பொறுமை தேவைப்பட்டது ! பரீட்சை சமயங்களில் அவர் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு விடிய விடியப் படிப்பான். பாவம், அவன் அப்பா அப்போது ரொம்பக் கஷ்டப்பட்டார். அவன் தலையெடுத்த பிறகுதான் கொஞ்சம் நிம்மதி.

'இன்றைக்கு நாங்கள் உத்தியோகம் பார்க்கிறோமென்றால் அதற்கெல்லாம் காரணம் நீங்கள்தானே, சார் !' என்று எவ்வளவு நன்றியோடு சொல்லுகிறான் !

மேட்டுத் தெருவுக்கு வந்து விட்டார். அதோ, பாலுவின் வீடு. அதைக் கடந்துதான் சங்கரனின் வீட்டுக்குப் போக வேண்டும்.

வாசலைத் தாண்டும் போது, ''என்ன சார், ஜாடையாகப் போகிறீர்களே ! வரக் கூடாதா ?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து வந்தார் துரைசாமி. ''இப்போதான் உங்களைப் பற்றிப் பேசிக்கிட்டிருந்தோம். அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்க. உங்களுக்கு ஆயுசு நூறு! வாங்க, உள்ளே வாங்க !''

சுந்தரமூர்த்தி வீட்டுக்குள் போனார்.

''இப்படி நாற்காலியில் உட்காருங்கள், சார்!.... அடியே, கமலம், இங்கே யார் வந்திருக்கிறதுன்னு பார் ! நம்ம சார் வந்திருக்கிறார். இப்போதானே அவர் பெண்ணைப் பற்றிப் பேசிக்கிட்டிருந்தோம்....!''

அதை ஆமோதிப்பதுபோல் அவர் மனைவி கமலம் புன்னகை புரிந்தாள்.

கொல்லைப் பக்கத்திலிருந்து அவசரம் அவசரமாகப் பாலு வந்தான். ''சார், சார்...! வாங்க, வாங்க!'' என்று பரபரத்தான். அடுத்த விநாடியே காப்பியும் கையுமாக வந்தான்.

சுந்தரமூர்த்திக்குப் பெருமிதமாக இருந்தது. 'எவ்வளவு அடக்கமான குடும்பம். விருந்தாளிகளை உபசரிக்கிற விதத்தை இவர்களிடமல்லவா கற்றுக் கொள்ள வேண்டும்!'

''சார், ஏது இந்தப் பக்கம்.....''

''நம்ம சங்கரனைப் பார்க்கப் போகலாமென்று புறப்பட்டேன்!''

பெண் திருமண விஷயத்தைத் தாமே ஆரம்பிக்கலாமா என்று யோசனை செய்தார் சுந்தரமூர்த்தி.

'' இப்போதான் சார், பேசிக்கிட்டிருந்தோம்......'' என்றார் துரைசாமி.

'' என்ன விஷயம்?''

'' உங்கள் பெண் மாலதியை நம்ம பையனுக்குப் பண்ணி வைக்கலாமென்று கமலம் அபிப்பிராயம் சொன்னாள். எனக்கும் அது நல்ல யோசனையாகத் தெரிந்தது.....''

சுந்தரமூர்த்தி சந்தோஷப்பட்டார். வந்த காரியம் இவ்வளவு சீக்கிரமாக, சுலபமாக முடியும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

துரைசாமி தொடர்ந்தார்: '' எங்கள் இரண்டு பேருக்கும் பிடிச்சுப் போச்சு. பையனைக் கேட்டோம்.......''

'' ம்...... '' சுந்தரமூர்த்தியின் குரலில் ஆர்வம் தென்பட்டது.

'' ஆனால், அவன்தான் முட்டுக்கட்டை போட்டுவிட்டான்......!''

சுந்தரமூர்த்தி அதிர்ச்சியடைந்தார். அப்பா, அம்மாவுக்குப் பிடித்திருந்தும் பையன் மறுத்துச் சொல்லிவிட்டானா? கடைசியில் அவனைப் பற்றி அவர் செய்திருந்த முடிவெல்லாம் தவறாகப் போய்விட்டதா ?

''என்ன....?'' என்று கேட்டார் சுந்தரமூர்த்தி, ஈனசுரத்தில்.

''நான் சொல்றதுக்கெல்லாம் இதுவரை மறுக்காதவன் எங்கிட்டே சண்டைக்கு

பெண்மையின் மென்மையை உணர ஆண்களைப் போல் 'ஷேவ்' செய்யாதீர்!

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர் தடவி பெண்மை வழியிலே உரோமத்தை வழித்தெறியுங்கள். அது மென்மை யானது, இன்மணம் கொண்டது. உரோமங்களின் வேர்கள் வரை ஊடுருவிச் செயல் புரிகிறது. வெட்டுக்கள் இல்லை, உரோமத் துகள்கள் இல்லை. வாரக் கணக்கில் வழவழப்பான சருமம்.





பட்டுப்போன்ற கரங்களுக்கும் கால்களுக்கும்.

ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர்

ட்ரேட்மார்க்கின் ரெஜிஸ்டர்ட் யூஸர்: ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெட்.   95-AF-172-Tam.


பண்டைக்காலமாக பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது!

வாலிப - வயோதிக - அன்பர்களே!

பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்தது என்பது உலகம் அறிந்த உண்மை!

பிரபல பழனி

வைத்திய திலகம் வைத்திய ராஜ்



Dr. S. காளிமுத்து
R.M.P. (IND) V.V.C. A.M.I.H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப்போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவர செய்ய இயலாமை— இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலவீன மடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலவீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி தாய் தந்தையரிடமும் மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மன வேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்படவேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 74 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்த்ரீய முறையான மிக உயர்தரம், உயர்தரம், முதல் தரம், இரண்டாந்தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி.பி.பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி.பி.பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பயன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்: மிக உயர்தரம் ரூ. 90
உயர்தரம்: ரூ. 42. முதல் தரம் ரூ. 33. இரண்டாந்தரம்: ரூ. 24

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்

கிளை: 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை - போன்: 21448

சென்னைக் கிளை ஆபீஸில் 1ந் தேதி முதல் 7 வரை : மீண்டும் 15ந் தேதி முதல் 21 வரை நேரில் விஜயம்

GOVT. REGD. T. M. No. 204341 — REGD. 15443

வைத்திய திலகம் வைத்திய ராஜ் டாக்டர் S. காளிமுத்து

பழனி சித்தர் வைத்தியசாலை (K) பழனி S. I.

போன்: 316 (தியேட்டர் ஸ்ரீ ரங்கராஜா பக்கம்) தந்தி: சித்தர்



பரமன் புகழ் பரப்பும் பாகவத சிரேஷ்டர்கள்

ஸ்ரீ திலீப் குமார் ராய் அவர்கள் நாம சங்கீர்த்தனத்திலும் புகழ் கொண்ட பாகவதோத்தமர். வங்கக் கவி ஸ்ரீ துவிஜேந்திர லால் ராய் அவர்களின் குமாரரான ஸ்ரீ டி.கே. ராய் இசையிலும் பக்தியிலும் சிறப்புப் பெற்றதோடு மெத்தக் கற்றவர், இலக்கியகர்த்தர், கவிஞருமாவார். அவர் ஸ்ரீ அரவிந்தரின் நெருங்கிய சீடர். ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் இவரிடமே ஏராளமான பஜன்களைப் பயின்றார்.

செல்வக் குடும்பத்தில் பிறந்த ஸ்ரீமதி இந்திரா தேவி தெய்வக் கட்டளையைத் தலைமேற் கொண்டு, வீடு வாசலைத் துறந்து ஸ்ரீ டி. கே. ராயிடம் வந்து, அவரது சிஷ்யையானார். கண்ணனின் கருணைக்கு விசேஷமாகப் பாத்திரமான ஸ்ரீமதி இந்திரா அடிக்கடி பரவச சமாதியில் ஆழ்ந்து ஐயனின் திருவிளையாடல்களைக் கண்டு வருகிறார்; மீரா பாயின் வாழ்வு அவரது அகக் கண்ணில் மீண்டும் விரிகிறது. இதுவரை உலகம் அறிந்திராத மீரா கீதங்கள் பலவற்றை அவர் மெய்ம்மறந்த நிலையில் வெளியிட்டு வருகிறார்.

தங்களது சீடர்களுக்கும், அன்பர்களுக்கும் 'தாதா'வாகவும் 'தீதி'யாகவும் விளங்கும் ஸ்ரீ டி. கே. ராயும் இந்திரா தேவியும் புனேயில் ஹரிகிருஷ்ண மந்திரம் என்ற பக்திப் பண்ணையை நிறுவி வளர்த்து வருகிறார்கள். இவ்விரு புண்ணியாத்மாக்களும் ஏப்ரல் 22ந் தேதியிலிருந்து மே 6ந் தேதி வரை சென்னையில் கல்கி பூங்காவில் தங்கியிருந்தனர். இப்பதினைந்து தினங்களும் கல்கி பூங்கா பஜனை நாதத்திலும், பக்தி போதத்திலும் ஊறித் திளைத்திருந்தது. ஸ்ரீ டி. கே. ராயுடன் ஸ்ரீமதி எம். எஸ்.ஸும் ஸ்ரீமதி ராதா விசுவநாதனும் சங்கீர்த்தனம் செய்வதையும், அச்சமயம் ஸ்ரீமதி இந்திரா தேவிக்கு பாவ சமாதி கூடியிருப்பதையும் படத்தில் காணலாம்.

வந்துவிட்டான். 'சார், எனக்காக என்வளவு கஷ்டப்பட்டு, காசு பணத்தைப் பார்க்காமல் சொல்லிக் கொடுத்து என்னையும் ஒரு மனிதனாக்கினார். அவர்கிட்டே போய் உங்க பெண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு எப்படிக் கேட்க முடியும்? அவரை என் குருவாக, தெய்வமாக மதிக்கிற நான் அதை மாத்திக்கிட்டு மாமனாரா எப்படி நினைக்க முடியும்? அவர்கிட்டே படிச்சுக்கிட்டிருந்தப்போ, என்னை அடுப்பங்கரை வரைக்கும் தாராளமாகப் புழங்க விட்டாரே! என் மேல் துளியாவது சந்தேகம் இருந்திருந்தால் என்னை அப்படித் தம் வீட்டுப் பிள்ளை மாதிரி பாவிச்சிருப்பாரா? அவர்கிட்டே போய் இதைச் சொன்னால் அவர் என்ன நினைப்பார்? மனத்தில் ஏதோ கல்மிஷத்துடன்தான் நான் பழகினதாக அவர் நினைச்சுடமாட்டாரா? இது திட்டின கட்டையையே பதம் பார்க்கிற மாதிரில்லே இருக்கு!' என்று சத்தம் போட்டான். அதனால்தான் பேசாமல் அந்த விஷயத்தை விட்டுவிட்டோம்!''

சற்று நேரம் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்த சுந்தரமூர்த்தி, அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினார். அவர் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. பெண்ணுக்கு வரன் கிடைக்கவில்லையே என்ற கவலை இல்லை அவருக்கு. 'ஆகா! நம்மிடம் படித்த பையன் எவ்வளவு கண்ணியத்தோடு இருக்கிறான்! நம் மேல் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறான்!' என்று நினைக்க நினைக்க அவருக்கு ஆனந்தமாக இருந்தது.

தமக்குள் சொல்லிக் கொண்டார் அவர்: ''அடே, பாரேடி! என் மாணவர்களெல்லாம் எப்படின்னு தெரிஞ்சுக்கிட்டியா?''

மதுரை பொன்னகரம் தொழிலாளர் பகுதி குடிசையொன்றில் அறுபது வயதுக் கிழவி ஆவுடையம்மாள் மூலையில் முடங்கிக் கிடக்கிறாள். கண் அவளுக்குத் தெரியாததால் இருந்த இடத்தைவிட்டு நகர முடியவில்லை. அவள் மகன் கூலி வேலை செய்து சம்பாதிப்பவன். ஒரு நாள் அவன் வேலைக்குப் போகவில்லை என்றால் வீட்டில் அடுப்பு எரியாது.

குடிசை வாசலில், ''அம்மா!'' என்ற குரல் கேட்கிறது.

''எனக்குக் கண் தெரியாதுங்க. யாருங்க? என்ன வேணும்?'' என்று இருந்த இடத்திலிருந்து குரல் கொடுத்தாள் ஆவுடையம்மாள்.



அறுவைச் சிகிச்சை நடக்கிறது

''அம்மா! நாங்க உங்களுக்குப் பார்வை கொடுக்கவே வந்திருக்கிறோம். குடிசைக்குக் குடிசை கண் பார்வை இழந்தவங்க விவரங்களைச் சேகரித்து வர்றோம். உங்களுக்கு இலவசமாப் பரிசோதனை செய்யப்பட்டு, டி.வி. எஸ். நகர் உயர்நிலைப் பள்ளியில் அறுவைச் சிகிச்சை கிடைக்கும்!'' என்று மருத்துவக் கல்லூரி மாணவர் ஜெயபிரகாஷ் கூறுகிறார். அவரோடு கல்லூரி மாணவர்களும், டி. வி. எஸ். சிப்பந்திகளும் 'கண் பார்வை இழந்தோர்' பட்டியல் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.


தொழிலாளர் நல சங்கப் பள்ளி, மதுரைக் கல்லூரி, சௌராஷ்டிரா கல்லூரி, ஒ. சி. பி. எம். உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் கண் பார்வை இழந்த 11,166 பேர் பதிவு செய்யப் படுகின்றனர். இதற்கு மாணவ மாணவியரும் ஆசிரியர்களும் உதவுகின்றனர். டாக்டர்கள் பரிசோதனை செய்த பிறகு நோயாளிகளில் 1380 பேர்கள் 'கண் புரை' அறுவைச் சிகிச்சைக்காக டி. வி. எஸ். நகரின் உயர்நிலைப் பள்ளிக்குக் காரில் அழைத்து வரப்படுகின்றனர்.

டி. வி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் நான்கு அறைகள் குளிர்பதனவசதி செய்யப்பட்டு, ஆபரேஷன் தியேட்டர்களாக மாறியுள்ளன.

பள்ளியின் பெரிய அலங்கார மேடையை ஸ்தாபகர் சுந்தரமய்யங்கார் — லக்ஷ்மி தம்பதியினர் திருவுருவப் படங்கள் அலங்கரிக்கின்றன. தொடக்க விழா சொற்பொழிவுகள் நிகழ்கின்றன.

'' 1947-ஆம் வருஷத்திலே ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்களின் தலைமையில் இயங்கிய

ஸ்ரீ டி. எஸ். ராஜமும் ஸ்ரீ கே. ரமேஷும் ஆபரேஷன் தியேட்டரில்





விழாவில் ஸ்ரீ டி. எஸ் ராஜம் உரையாற்றுகிறார். இடதுபுறம் அமர்ந்திருப்பவர் டாக்டர் வெங்கடசாமி

குழுவினர் மதுரையில் உள்ள தமிழ் நாடு பாலிடெக்னிக் கட்டடத்தில் இலவசக் கண் சிகிச்சைக்கு வித்திட்டார்கள். மதுரை மாவட்டத்தில் விருதுநகர், திண்டுக்கல், காந்தி கிராமம், போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் இலவசக் கண் சிகித்சை முகாம்கள் நடைபெற்றன. இப்போது டாக்டர் வெங்கட

சாமி தலைமையில் இயங்கும் கண் சிகிச்சை நிபுணர்கள் 1380 பேர்களுக்கு மேல் அறுவை சிகிச்சை செய்யப் போகிறார்கள்!'' இதுதான் பலரது பேச்சுக்களின் சாராம்சம்.

மதுரை வைத்தியக் கல்லூரி டீன் கபீர் தலைமையில், மதுரை மேயர் முத்து குத்து விளக்கேற்றி ஒளிதரும் பணியைத் தொடங்கி வைக்கிறார். மதுரை கிழக்குப் பகுதியில் எழவிருக்கும் பிரும்மாண்டமான வைத்திய சாலைக்கு டி. வி. எஸ். ஸ்தாபனத்தினர் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியிருப்பது நமது உரையாடல்களுக்கிடையில் தெரிய வருகிறது.

டி.வி.எஸ். உயர்நிலைப் பள்ளிக்குக் கார்களில் 'தேர்தல் காலத்தில் வந்திறங்கும் வாக்காளர்களைப் போல்' அறுவைச் சிகிச்சைக்கு மக்கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள்.

நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. அறுவைச் சிகிச்சை ஆன கண் நோயாளிகளைப் பாயில் படுக்க வைத்தவண்ணம் இருக்கிறார்கள். 'மல்லாந்து படுத்திருக்க வேண்டும்!' என்று மைக் அறிவிப்புக் கேட்கிறது. பஜகோவிந்தம், விஷ்ணு சகஸ்ரநாம ரிகார்டு இசை எழுப்புகிறது. அறுவைச் சிகிச்சை ஆன நோயாளிகள் மனத்தை இறைவன்பால் லயிக்கச் செய்கிறது.

'கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போல' என்று சொல்வதுண்டு. இங்கு, நாட்டிலேயே அறுவைச் சிகிச்சை பெற்ற நோயாளிகள் கண் கட்டோடு பாய்களில் மல்லாந்து படுத்திருக்கிறார்கள்.



சிகிச்சைக்குப் பெண்மணியை மாணவிகள் அழைத்துச் செல்கிறார்கள்

ஆப்பரேஷன் ஆன ஒரு கண் நோயாளியைப் பார்வையிடுகிறோம்.

''ஐயா! உங்க பேரு?''

''என் பேரு பரம தேவர். நான் மதுரை மில் கூட்டுறவு ஸ்டோர்ஸில் வாட்ச்மேன். வாட்ச்மேனுக்குக் கண் முக்கியமாச்சுங்களே! எழுபது ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கும் எனக்கு ஒரே ஆம்பிளைப் பையன் இருக்கானுங்க.''

பொறுப்பை ஏற்றுக் கொண்ட டி.வி.எஸ். ஊழியர்களுக்குப் பக்கபலமாக நின்று இயக்கி வைத்தவர் ஸ்ரீ ஆர். ராமச்சந்திரன். இரவு பன்னிரண்டு மணியானாலும் தம் டாக்டர் மனைவியுடன் வந்து நோயாளிகளின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைத்தவர் ஸ்ரீ கே. ரமேஷ்.

'' இத்தனை பெரிய காரியத்தை ஏற்றுச் செய்ய உங்களுக்கு எப்படித் தைரியம் வந்தது?'' என்று ஸ்ரீ ரமேஷிடம் வினவுகிறோம்.

'' என் தாத்தாவும் பெரியப்பாவும் சித்தப்பாக்களும் அதற்குப் பலமான அஸ்திவாரம் போட்டிருப்பதால்தான்! டி. வி. எஸ்.

விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்களுடன் திரு ராமச்சந்திரனும் திரு ரமேஷும்





கண்ணுக்கு ஒளியும் வயிற்றுக்கு உணவும் கிடைக்கிறது

ஸ்தாபனத்தின் முக்கிய சொத்து. ஆதர்ச மனித சக்தியே. டி.வி. எஸ். ஸின் ஒவ்வொரு தொழிலாளரும் எந்தக் காரியத்தையும் சிரத்தையோடு, பண்போடு நிறைவேற்றி வைக்கிறார். அதனால் நாங்கள் எடுத்த எந்தக் காரியமும் சோடை போவதில்லை!'' என்கிறார் ஸ்ரீ ரமேஷ் தன்னம்பிக்கையுடன்.

இந்தக் கண் சிகிச்சை முகாம் வெற்றிபெற டாக்டர் வெங்கடசாமியும் அவரது சகாக்களும் அரும்பாடுபட்டிருக்கிறார்கள்.

கயற்கண்ணி நகரில் டி. வி. எஸ். தன் கண்ணான பஸ் போக்குவரத்தை இழந்தும், இந்தக் கண்ணான திருப்பணியைச் செய்ததைப் பாராட்டாதவரில்லை. —பி. எஸ். எம்.



மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்

ஆம். சில்லறையில் பண்டங்களை வாங்கும் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். வாங்கப்படும் பொருள்களின் எடையோ, அளவோ ஒரு சதவிகிதம் குறைந்தால் கூட வாங்கும் மக்கள் அடையும் நஷ்டம் ஆண்டுதோறும் ரூ. 160 கோடிக்குமேல் இருக்கும். இந்த நஷ்டத்தை நீங்கள் தவிர்க்கலாம்

அரசு முத்திரை உள்ள அளவுகளில் சரியாக நிறுத்து, அளந்து பண்டங்களை வாங்குங்கள்.

நிறுப்பதிலோ, அளப்பதிலோ முறைகேடுகள் இருந்தால், உங்கள் பகுதியிலுள்ள நிறுத்தல், அளவை இன்ஸ்பெக்டருக்குத் தெரிவியுங்கள்.

மக்கள் நலனுக்காக மெட்ரிக் அளவுகள்

davp 71/204

6. இனிப்பான சேவை



வயல்களில் அறுவடை நடந்து கொண்டிருப்பதைப் பார்த்த பட்டணத்து ஆசாமி ஒருவர் அக்கிராமவாசியான தமது நண்பரிடம் சொன்னாராம்: ''அரிசிக்காக இவர்கள் இவ்வளவு சிரமப்படுவானேன்! நாங்கள் சென்னைப் பட்டணத்தில் வாங்குவது போல் கடையில் அரிசி வாங்கிக் கொண்டால் என்ன?''

நான்கூட ஏறத்தாழ அந்த மனிதனைப் போல்தான்! பிறந்தது முதல் கிராமப் பக்கமே போயறியாத நான்

இளைஞர் சமுதாயம்

முதன் முதலில் பன்னிரண்டு வயதுப் பையனாயிருந்தபோது காவேரிக் கரையிலுள்ள எங்கள் கிராமத்துக்குப் போனேன். பட்டணத்தில் குழாய் ஜலம், வீணாகாமல் இருக்க உடனுக்குடன் அதை மூடிப் பழக்கமானதனால், காவிரி ஜலம் அத்தனையும் ஓடி வீணாய்ப் போகிறதே என்று என் மனம் துடித்தது!

கல்கி காரியாலயத்துக்கு அனுப்பப்படும் கதைகளைப் படித்துப் படித்துக் கிராமம் என்றால் உடனே எனக்குப் பட்டணத்துக் கல்லூரியில் படிக்கும் வாலிபன் விடுமுறையில் கிராமத்துக்குப் போவதும் பாரதியார் கவிதை நூலுடன் அவன் ஆற்றங்கரைக்குச் செல்வதும், அப்பொழுது கண்கவர் வனப்பும், காவியக் கனிவும், ஓவிய எழிலும், கொண்ட பெண்ணொருத்தி இடுப்பில் குடத்துடன் ஆற்றங்கரைக்கு வருவதும், அவர்களிடையே காதல் மலர்வதும் போன்ற காட்சிதான் நினைவு வரும்! ''கவிதையில் ஆழ்ந்து கிடந்த சுந்தரம், ஒரு மின்னல் வெட்டும் நேரம் அவளைப் பார்த்தான். கவிதை மறந்தது. சூழ்நிலை மறந்தது. ஏன்? அவன் தன்னையே மறந்து விட்டான்! அவன் செவிகளில் விண்ணுலகத்து வித்தியாதரர்களின் இசையும் கின்னர கிம்புருடர்களின் வாத்திய இசையும் விழுந்து அவனை மயக்கின. இது வரை



யில் அவனுக்குத் துளிக்கூடப் பிடிக்காமல் இருந்த கிராமம், திடீரென அமரர் உலகப் பூங்காவாகிவிட்டது!'' இதே போன்ற வரிகளை எத்தனை எத்தனை நபர்கள் எழுதிய எத்தனை எத்தனை கதைகளில் படித்து வழுக்கையாகிவிட்ட தலையைத் தடவிக் கொண்டிருக்கிறேன்!

ஆகவே, இளைஞர் சமுதாயம் என்ற பகுதியை எழுதச் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திருநின்றவூரையொட்டிக் கோசவன்பாளையம் என்ற சின்ன கிராமத்துக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்ததும் எனக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. பட்டண வாழ்க்கையின் ஜன நெரிசல், பஸ், லாரி, ஸ்கூட்டர், ஆட்டோ ரிக்ஷா இத்தி



யாதியின் ஆரவார ஓசை இவற்றிலிருந்து விடுதலை பெற்று ஆற்றங்கரைக் கதாநாயகன், கதாநாயகியைச் சந்திக்கத் தயாரானேன்.

ஆனால் எனக்குக் கோசவன்பாளையம் கிராமம் ஏமாற்றத்தைத்தான் அளித்தது. குசவன் ஆறு என்ற ஓர் ஆற்றங்கரையில் உள்ள கிராமம் இது. காட்டாறுதலால் ஆற்றில் வெண் மணல்தான் பரந்து கிடந்தது. ஜலம் இல்லை. இந்தக் கிராமத்தை ஒட்டியுள்ள கோட்டாம்பாளையம் என்ற கிராமமும், கோசவன்பாளையமும் ஒரே ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்டவை. இரண்டு கிராமங்களிலும் மொத்தமாகச் சுமார் நூற்றைம்பது வீடுகள் இருக்கின்றன. சமீபத்தில் குடிநீர்க் குழாயும் போடப்பட்டிருக்கிறது.

சங்க அங்கத்தினர்கள் மலர்ந்த முகத்துடன் எனக்கு மனமார்ந்த வரவேற்பை அளித்தனர். அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைவாயிருந்தாலும், அவர்களது உற்சாகத்துக்கும், மகிழ்ச்சிக்கும் குறைவில்லை.

பத்திரிகையின் மூலம் அவர்கள் தொண்டைப் பாராட்ட ஒருவர் வந்திருக்கிறார் என்றதும் அங்கத்தினர்களின் ஆனந்தம் பொங்கிப் பெருகியது.

''எங்கள் சங்கம் மிகவும் சின்னது. இதற்கு நீங்கள் வருவீர்களோ என்று சிறிது ஐயங்கொண்டோம்...'' என்றார் செயலாளர்.

''....அப்படியெல்லாம் இல்லை. நீங்கள் செய்யும் சேவைதான் முக்கியமே தவிர அங்கத்தினர்களின் எண்ணிக்கையல்ல. மேலும், ஒரு

சின்ன ஊரில் ஒரு சின்ன சங்கம்தானே இருக்க முடியும்?'' என்று கூறி அவரை உற்சாகப்படுத்தினேன்.

இளைஞர் சங்கம் இருக்கும் கட்டடத்துக்குள் சென்றுஅமர்ந்ததும் ஜன்னல்வழியாக அருமையான காற்று அடித்தது. அந்தக் காற்றின் சுகம் என்னைக் கிறங்க வைத்தது. அது பட்டணத்தில் வீசும் நாற்றம் பிடித்த கலப்படக் காற்று அல்ல ! சுத்தமான சுதந்திரக் காற்று !

காற்றை அனுபவித்துக் கொண்டே இருந்து விட்டால் எப்படி? வந்த காரியத்தைக் கவனிக்க வேண்டாமா ?

'' உங்கள் இளைஞர் சங்கம் எத்தனை காலமாகச் செயல்பட்டு வருகிறது?'' என்று கேட்டேன்.

'' 'நண்பர்கள் மன்றம்' என்ற பெயரில் இரண்டு ஆண்டுகளாக இயங்கி வந்தது. இப்பொழுது Youth Club என்று பெயரை மாற்றியிருக்கிறோம்!'' என்றார் செயலாளர் திரு மு. நரசிம்மன்.

''உங்கள் சங்கம் மேற்கொண்டுள்ள பணிகளை விவரமாகச் சொல்லுங்கள்'' என்றேன்.

''கிராமத்தின் பொதுச் சுகாதார விஷயங்களில் அதிகமாகக் கவனம் செலுத்துகிறோம். எங்கள் கிராமத்துக்குக் குடிநீர்க் குழாய் வந்த பிறகு தெருவோரத்தில் குழாயருகில் தண்ணீர் தேங்கிச் சேறும் சகதியுமாய்க் கொசு உற்பத்திக்கு ஏதுவாகிறது. அதற்காக நாங்கள், இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து குழாயருகில் பள்ளமாகச் சாக்கடை வெட்டி விட்டுத் தண்ணீர் தேங்காமல் ஓடும்படியாகச் செய்திருக்கிறோம்.''

''உங்கள் சங்கத்தின் இன்றியமையாத பணியாகக் கருதி ஏதாவது செய்து வருகிறீர்களா?''

''ஆகா! ஹரிஜன முன்னேற்றத்தைத்தான் நாங்கள் இன்றியமையாத பணியாகக் கருதி வருகிறோம்.''

''அதற்கு என்ன செய்கிறீர்கள்?''

''முக்கியமாக ஹரிஜனங்களிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதற்குத்தான் முயன்று வருகிறோம். அவர்களை எங்கள் சங்கத்துக்கு அழைத்து அவர்களுடன் அளவளாவிப் பழகி அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையைப் போக்கி வருகிறோம். அதற்காகவே இங்கே ஒரு வாசகசாலை ஆரம்பித்திருக்கிறோம். முதன் முதலில், ஹரிஜனங்கள் எங்களுடன் சமமாக உட்கார்ந்து பத்திரிகை படிக்கவே கூசினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய கூச்சத்தைப் போக்கினோம். முதியோர் கல்விக்கு ஆக்கம் கொடுத்துத் தினம் வகுப்பு நடத்துகிறோம்.''

''உங்கள் சங்கத்தில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சி ஒன்றைச் சொல்ல முடியுமா?''

''சொல்கிறேன். 17—7—71ல் தமிழ்நாடு கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இக்கிராமத்துக்குக் குடிநீர்க் குழாய்த் திறப்பு விழாவுக்காக வந்திருந்தார். அந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவரை வரவேற்று எங்கள் இளைஞர் சங்கத்தின் சார்பில் ஒரு வரவேற்பு இதழ் வாசித்து அளித்தோம். இடரென்று நாங்கள் அவர் வருகையைப் பயன்படுத்திக் கொண்டதற்கு அமைச்சர் சிறிதும் முகம் சுளிக்காமல், எங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைத்ததை நாங்கள் மறக்கவே மாட்டோம்.''

''உங்கள் பணிக்குக் கிராமத்தில் ஆதரவு இருக்கிறதா?''

''பேஷாய் இருக்கிறது. மக்கள் பரிபூரணமாக ஒத்துழைப்புத் தருகிறார்கள். மேலும், அரசு சார்புள்ள இளைஞர் அணி (Youth Corps) யிலிருந்து மூன்று இளைஞர்கள் கிராம முன்னேற்றப் பணிக்காக இங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் எங்களுடன் சேர்ந்து கிராம சேவை செய்கிறார்கள். அது எங்களுக்கு ஒரு புதுத் தெம்பைத் தந்திருக்கிறது.''

''கிராமத்தில் விவசாயம் சம்பந்தமாக உங்கள் சங்கம் விவசாயிகளுக்கு உதவி செய்கிறதா?''

''செய்கிறது. பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு நல்ல உரம், விதைகள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்து தருகிறோம்.''

''உங்கள் பணியில் சாதனையாகக் கூறிக் கொள்ள ஏதாவது இருக்கிறதா?''

''பூச்சி மருந்து அடித்துப் பயிர்களைப் பூச்சித் தொல்லையிலிருந்து காப்பாற்றி நல்ல விளைச்சலுக்கு உறுதுணையாக இருந்து வருகிறோம். எங்களுடைய சேவையைப் பாராட்டி எங்களுடைய சங்கத்தைச் சிறந்த இளைஞர் சங்கமாகத் தேர்ந்தெடுத்துப் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தமிழ் நாடு அரசு இரண்டு பூச்சி மருந்து அடிக்கும் கருவி (Sprayers)களைப் பரிசாக அளித்துப் பாராட்டியது. முதலில் கிராமத்து விவசாயிகள் பூச்சி மருந்து தெளிப்பதைக் கடுமையாக எதிர்த்தார்கள். பிறகு அதன் அவசியத்தை எடுத்துச் சொல்லி அவர்களின் இசைவு பெற்றோம். அத்துடன் அந்தக் கருவியை இயக்க அவர்களுக்குப் பயிற்சியும் அளித்தோம்.''

இந்தச் சங்கத்துக்குத் தலைவர்கள் மூவர்: திரு கெம்பு, பி.ஏ., திரு தேவராஜ்.பி.எஸ்ஸி. திரு ஜேக்கப், பி.எஸ்ஸி. திரு மு. நரசிம்மன்—செயலாளர், உதவிச் செயலாளர் — திரு டி. பத்மநாபன். திரு பி.எம். பத்மநாபன்—பொருளாளர். மொத்தம் இருபத்தேழு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

தொண்டு செய்யும் நல்ல உள்ளம் இருக்கிறது; அந்த உள்ளத்தில் உற்சாகம் இருக்கிறது. சங்கத்தின் பணிகளுக்குக் கரம் கொடுக்க நல்ல இளைஞர்கள் இருக்கிறார்கள். இளைஞர் சங்கம் நல்ல முறையில் செயல்பட வேறு என்ன வேண்டும்?

''வேறு ஏதாவது சுவையான நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட முடியுமா ?'' என்று என் வழக்கமான கடைசிக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

''சுவையானது மட்டுமல்ல; நல்ல இனிமையான, இன்றியமையாத ஒரு பொருளுக்காக எங்கள் சங்கம் போராடி வெற்றி பெற்றிருக்கிறது. சர்க்கரையைத்தான் சொல்லுகிறேன். கிராம மக்கள் எல்லோருக்கும் கிலோ ரூ. 2-05 விலையில் எங்கள் சங்கத்தின் முயற்சியால் சர்க்கரை கிடைக்கிறது.''

செயலாளரின் இந்த இனிப்பு மிகுந்த செய்தியுடன் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன்.

—லேசமாஸ்


சிந்தால் வாக்குறுதி...
மேனியெழிலுக்கு முழுப் பராமரிப்பு
CINTHOL
புதுமை குன்றாத நறுமணம்
துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது
CINTHOL
CINTHOL
ஜி-11 அடங்கிய ஒரே சோப் சிந்தால். இந்த அற்புத
கிருமி நாசினி உடல் துர்நாற்றத்திற்கும்
சருமக்களங்கத்திற்கும் காரணமாக விளங்கும்
கிருமிகளை அழித்து விடுகிறது. இவ்வாறு சிந்தால்
உங்கள் மேனியெழிலை அப்பழுக்கின்றி
வைத்திருப்பதுடன், உங்களை நாள் முழுவதும்
புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.



அம்மா

ரா. கணபதி

32. பிள்ளைகளோடு பிறந்த வீட்டிலே

......ஒரு சொற் கொண்டெனைத் தடுத்தாண்டபின் வாழ்வித்த ஞான குருவே மந்த்ர குருவே........ —தாயுமானவர்

அம்மாவின் அன்பு மழையில் கிரீஷின் புத்திர சோகம் மறைந்தது. கிரீஷுக்கு அவள் எத்தனை பரிவுடன் உபசாரணை செய்தாள்? அவர் காலையில் எழுந்தவுடன் ஒரு கெட்டில் தேநீர் அருந்துவார். ஜயராம்பாடி வாசிகளுக்கும், அம்மாவின் மற்றக் குழந்தைகளுக்கும் காலையில் பானம் ஏதும் அருந்திப் பழக்கமில்லை. அந்த நாட்களில் ரொம்பவும் வசதி படைத்தவர்களே காப்பி, டீ அருந்துவர். அம்மா கிரீஷுக்குத் தேயிலைப் பொட்டணம் வாங்கிவிட்டாள். ஆனால் அந்தக் கிராமத்தில் பசுச் செல்வமே கிடையாது. இப்போது கிரீஷுக்காகப் பல வீடுகள் ஏறி இறங்கி, அவுன்ஸ் அவுன்ஸாகப் பால் சேகரித்தாள் அம்மா.

தினந்தோறும் தனது படுக்கை விரிப்பு வெள்ளை வெளேரென்று இருப்பதைப் பார்த்துக் கிரீஷ் ஆச்சரியப்பட்டார். ஒரு நாள் அம்மா ஏரிக் கரையில் அதற்குச் சவுக்காரம் போட்டுக் குமுக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் குமுறி அழுது விட்டார். மகா பாவியான தான் படுத்துறங்கும் துணியை நிர்மல மாதா தன் கையால் பிழிந்து துவைப்பதா?

கிரீஷ் உலகில் அடைந்த கசப்பான அநுபவத்தால் மக்களைப் பற்றி வெறுத்துப் பேசினார். எல்லாவற்றையும் விட்டு ஓடிவிடுவதாகச் சொன்னார். நாடகாசிரியரான அவரது பேச்சுத் திறன் அபாரமானது. மாற்றுக் கருத்துத் தெரிவித்த மற்றவர்களுக்கெல்லாம் பளிச் பளிச்சென்று விளக்கம் தந்தார். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அம்மா நாலே வாக்கியம் சொல்லி அனுப்பினாள்: ''உலகம்னு ஒண்ணை வித்தியாசமா நினைக்கற மட்டும்தான், அதுகிட்டே பயந்துண்டு ஓடணும். உலகத்தை ஏன் வித்தியாசமா நினைக்கணும்? பகவான் கிட்டே உண்மையான பக்தியை வளர்த்துண்டா, எதுக்கிட்டேயும் பயப்பட்டுண்டு ஓட வேண்டியதில்லே.''

சண்டப் பிரசண்டமாகப் பேசிய கிரீஷ் அதன் பின் வாய் திறக்கவில்லை. 'ஸ்வாநுபவம்' என்பதில் பிறந்த வார்த்தையின் கனம் அப்படிப்பட்டது.

கிரீஷுக்கு அப்போது துறவறம் வேண்டாம் என்று அம்மா கூறியது அவர் ஒருவரின் பக்குவத்தை ஒட்டிச் சொன்னது. இதனால் அம்மா பரிவ்ராஜக சந்நியாசத்தை ஒப்பவில்லை என்று அர்த்தமில்லை. மகான்கள் அந்தந்தச் சீடரின் மன நிலைக்கு ஏற்ப மார்க்கம் அமைத்துத் தருவர்.

பிரபல நாடகக் கலைஞர் வந்திருக்கிறார் என்றறிந்து மக்கள் அந்த வீட்டுக்கு ஓயாமல் வந்த வண்ணம் இருந்தனர். அவர்களுக்காக கிரீஷ் பாடிக் காட்டுவார். இந்தப் பாடல்களில் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில் அம்மா பாடம் பண்ணி விட்டாள். இதை அவள் தன் தீங்குரலில் அடிக்கடி பாடுவதுண்டு.

தவழ்ந்தோடுறான் எங்கள் தாமோதரன்
(தவழ்ந்து)
உவந்து வெண்ணெய் திருடி உண்டு
பயந்து பயந்து பதற்றமுடன் (தவழ்ந்து)
கோபன்ராணி நந்தன் தேவி
கோபமறிந்தே கோபாலன்
அரும்பும் அச்சத்தோடு பின்னே
திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம்
(தவழ்ந்து)
'நில்லு நில்லு' என்று பொய்யாம்
நீலவண்ணனை அதட்டி
பொல்லெனச் சிரித்து அந்த
மெல்லியல் பின் தொடர்ந்து வரத்
(தவழ்ந்து)

கிரீஷ் அம்மாவை அவதாரப் பிறவி என்று புரிந்துகொண்டார். கண்ணனோடும், ராமனோடும் சேர்ந்து வாழ்ந்தவர்களில் எத்தனை பேருக்கு அவர்களது அவதார மகிமை தெரிந்தது? சாரதா தேவியின் பெருமையை அவ்வீட்டில் அவளுடனேயே இருந்த அவளுடைய தம்பிமார் எவரும் அறிந்திருக்கவில்லை. அவர்களுக்கு பரஸ்பரச் சண்டையிலேயே குறி, பணத்திலேயே குறி. அக்காள் தனதனவான்களான சிஷ்யர்களிடம் ஒரு வார்த்தை சொல்லித் தங்களது குச்சு வீட்டை மச்சு வீடாக்க மாட்டாளா என்கிற ரீதியில் அவளைக் கொண்டு


உலகியல் லாபம் பெறுவதில்தான் அவர்களுக்குக் கருத்து. இந்த அக்காளா அப்படிப்பட்டவள்? முன்பு லக்ஷ்மி நாராயண் காணிக்கை செலுத்திய பதினாயிரம் ரூபாயை ஓட்டாஞ்சல்லியாக ஒதுக்கியவள் அல்லவா? ஆனாலும் இப்போது அடியார்கள் வழங்கிய கையுறைகளை அவள் அடியோடு நிராகரிக்கவில்லை. தன்னைத் தேடி ஒரு பாசப் பட்டாளம் வந்திருக்கும்போது அவர்களுக்காகத் தம்பிமாரைச் செலவிடச் சொல்லலாமா? அவள் மனத்துக்குள் ஒரு தர்மமான கணக்கு இருந்தது. அதற்கேற்பச் சகோதரர்களுக்கும் சிரமம் தராமல், அதேபோதில் பக்தர்களிடமும் துராசையுடன் கைநீட்டாமல் நடத்துக் கொண்டாள். தம்பிகளுக்கு இதில் மிகவும் அதிருப்தி. 'காளி' என்று ஊராரும், 'கேளோ' என்று அம்மா செல்லமாகவும் அழைக்கும் தம்பி காளிகுமாருக்கு வாய் பொல்லாதது. ஏதாவது உறுத்திக் கொட்டிக் கொண்டே யிருப்பார்.

சௌகரியமான சூழ்நிலையில் சாந்தமாயிருப்பதில் என்ன பெருமை? முள்ளிலே ரோஜாவாக, சேற்றிலே செந்தாமரையாக மலர்வதுதான் பெருமை. ஓயாத பிடுங்கலுக்கிடையில் அமைதியுடன் வாழ்ந்து காட்டவே வந்தவள் அன்றோ அம்மா? இப்போது பிறந்தகத்தில் இந்த இம்சை உண்டானபோதும் அமைதியாகவே இருந்தாள். இந்த நாட்களில் எத்தனை பிழிந்தாலும் கசங்காத துணிகள் இருக்கின்றனவே, அதுபோல் எத்தனை பிழிந்தெடுத்தாலும் அழுங்காமல் நலுங்காமல் இருந்தாள். பிறர் தன்னை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதில் இவள் பார்வை செலுத்துவதேயில்லை. அவளை அவர்கள் எப்படி நடத்தினாலும் சரி, இவள் அவர்களைப் பிள்ளைகளாகவே நடத்தி, அவர்களுக்காக உழைத்து உவகை கொண்டாள்.

சாரதா தேவியை ஏதோ பணம் காய்க்கிற மரம் மாதிரி காளி எண்ணுகிறார் என்று கிரீஷ் புரிந்து கொண்டார். தன் தெய்வ மாதாவின் மதிப்புத் தெரியாத அந்தப் பிரகிருதியிடம் சாரதையின் மகிமையை எடுத்தியம்பலானார்.

காளி மரியாதைப் பண்பே இல்லாமல் பேசினார்: ''நீங்கதான் அக்காளை ஏதோ ஜகன்மாதா, லோக நாயகி, ஹா, ஹூ என்கிறேள்! நாங்க ஒரு தாய் வயத்துலே பொறந்து ஒண்ணா வளர்ந்தவாதான். எனக்கொண்ணும் இந்தப் பிரபாவமெதுவும் தெரியல்லே.''

சாரதையைப் புக்ககத்து மனிதர்களான ஹ்ருதய், ராமலால் முதலியோர்



அவமதித்ததை விட, உடன்பிறப்பே அவமதித்ததை என்னென்பது?

கிரீஷால் பொறுக்க முடியவில்லை: ''ஓஹோ, உனக்குத் தெரியலேன்னு அம்மாவுக்குப் பிரபாவமில்லேன்னு அர்த்தமோ! என்னய்யா நினைச்சுண்டிருக்கே! நீ அத்யயனமும், அக்னிஹோத்ரமும் பண்ணிண்டு, மற்றவாளுக்கு வேதம் சொல்லிக் கொடுத்துண்டு, போறும் என்கிற பொன்னுன மனசோடு நிஜப் பிராமணனு யிருந்தா அம்மா பெருமை உனக்குத் தெரியும். இப்போ உனக்குக் காசைத் தவிர வேறே நினைப்பு இருக்கா? உபாத்தியாயத்தை விட்டுட்டு உழவு செய்யற நீ ஸ்வதர்மத்தையே கொன்னவன். உனக்கு அம்பாள் தன் பெருமையைக் காட்டுவளா? யாராவது ஒரு நீசன் உனக்கு ஒரு பொலி காளை தரேன்னு சொல்லிட்டா அவன் கிட்ட ஆறு மாசம் நடையா நடந்து பல்லேக் காட்டறவன் நீ. வாஸ்தவத்திலே கிடைக்காத ஒரு பொலி காளையே உன்னை இப்படி மயக்கும் என்ருல், மகா மாயையான எங்கம்மாவாலே உன்னை மயக்கி, 'இவ என் சாதாரண அக்கா தான்'னு நினைக்க வைக்க முடியாதா? உன் குற்றத்தினுலேயேதான் உனக்குத் தரிசனம் தராமலிருக்கா. இதோ பார் காளீ, உனக்கு இந்த லோகத்திலேயும் பரலோகத்திலேயும் நல்லது வேணும்னு இப்பவே போய் எங்கம்மா காலிலே விழு, உம், போ'' என்று பெரிதாகக் கூப்பாடு போட்டு விட்டார் கிரீஷ். 'என் யோக மாயையில் என்னைப் போர்த்திக் கொண்டு அறிவீனர்களுக்கு அகப்படாமலே இருக்கிறேன்' என்று கண்ணன் சொன்னதன் அடிப்படையில் பேசினுர் கிரீஷ்.

ஸ்ரீகாளி அதிர்ந்து விட்டார். அக்காளிடம் ஓடினுர். ''அக்கா! நீதான் சர்வேசுவரியாமே! என் தப்பை மன்னிச்சு எனக்கு அடைக்கலம் கொடும்மா'' என்று நமஸ்கரித்தார்.

அம்மா சாவதானமாகச் சொன்னுள்: ''என் பிரிய கேளே! இது என்னடா பதட்டம் வேண்டிக் கிடக்கு? நான் உன் கூடப் பொறந்த ஜீவன். இன்னிக்கு என்ன நான் மாறிவிட்டேனு? என்னிக்கும் உன் அக்காதான் நான். என்கிட்ட வந்து, 'அடைக்கலம் கிடைக்கலம்'னு பேசலாமா?''

இப்படி அவள் சொன்னதை நுட்பங்களே அறியாத காளி புரிந்து கொள்ள முடியுமா? இரும்பவும் கிரீஷிடம் வந்து, ''பார்த்தேளா? நீங்கதான் ஏதோ மிகைப்படுத்திண்டு இருக்கேள். அவ, தான் சர்வ சாதாரண மனுஷிதான்னு சொல்ரு'' என்ருர்.

இது உருப்படாத கட்டை என்று கிரீஷும் விஷயத்தை விட்டார்.

காளி மட்டுமில்லை. ராமகிருஷ்ணரின் அத்யந்த சீடரில் பலரும் கூட இன்னும் அவளை அவதாரமாகக் கருதவில்லைதான். 'ராமகிருஷ்ண மடம்' என்ற புண்ணிய ஸ்தாபனத்தை அப்போது நிறுவியிருந்த சந்நியாசிக் குழந்தைகளில் அனைவரும்கூட இப்போது அவளை திவ்விய வியக்தியாகக் கருதியதாகச் சொல்ல முடியாது. நிரஞ்ஜனுநந்தர்தான் முதலிலிருந்தே அவளது தெய்விகத்தைத் தாம் உணர்ந்ததுமட்டுமின்றி மற்றவர்களுக்கும் ஆணி அறைந்தாற்போல் பிரசாரம் செய்தவர். ராமகிருஷ்ணரின் 'சொந்தப் பிள்ளை' என்று கருதப்பட்ட பிரம்மானந்தரும் (ராகால்) பிற்கால விவேகாநந்தரான நரேனும் இப்படி வெளிப்படப் பேசியதில்லை. காரணம், அவர்கள் அம்மாவை எண்ணிய மாத்திரத்தில் அப்படியே கரைந்து போய்விடுவார்கள். உள்ளுக்குள்ளே ஓர் ஆனந்தாதிதத்தை அமுது கொண்டு, வெளியே அழுது கொள்வதைத் தவிர அவர்களால் அம்மாவைப் பற்றிப் பேச முடியாது. நரேனுவது அப்போது சமாளித்துக் கொண்டு அவளிடம் வந்து, சுவாதீனமாகப் பேசுவார். ஞான சிம்மமான பிரம்மானந்தர் அவள் எதிரே வரவே நடுங்குவார். பிற்காலத்தில் ஒரு முறை பிரம்மானந்தர் சொன்னுர்: ''மகா யோகிகளும் அறிய முடியாத அம்மாவை யாரே புரிந்து கொள்ள முடியும்? ராமகிருஷ்ணரின் பூஜையை சகஜமாக ஏற்றவள் அம்மா. அவதார புருஷர் செய்யும் ஆராதனையை சாமானிய மனிதர் எவராவது 'ஜீரணிப்பது' சாத்தியமா? அம்மாவின் உள்ளே மகா சமுத்திரமாக அலைமோதும் அநுபூதி: வெளியிலே ஒரே அமைதி மயம். அவதார புருஷர்களாலும்கூட திவ்விய பரவசங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதுண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ணரே வெளிப்படையாகப் பரவச நிலைகளை எவ்வளவோ முறை காட்டியதுண்டு. அம்மாவைப் புரிந்து கொள்வதுதான் மகா கடினம். தன்னுடைய தாயன்பைக் காட்டி நம்மையெல்லாம் அவள் ஏமாற்றியிருக்கிருள். அம்மாவின் அநுக்கிரகம் பெற்ருல் எளிதாகவே மோக்ஷசாம்ராஜ்யம் பெற்றுவிடலாம்.''

விவேகாநந்தர் ஆவேசம் பீற அம்மாவைப் பற்றித் தமது சகாக்களுக்கு இப்படி எழுதினுர்: ''ராமகிருஷ்ணரின் நினைவு உலகுக்கு மறந்தாலும் மறக்கட்டும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனுல் மக்கள் அம்மாவை மறந்துவிட்டால் அது உற்பாதமேயாகும்.... நீங்கள் யாரும் அம்மாவைப்

சாதாரண காப்பிகளுக்கு எதிரான புரட்சியில் சேருங்கள்!

ACIL-R-625 (3) TAM

இலவசம்!



விசேஷ சலுகை-ஒவ்வொரு கண்ணாடி ஜாடியிலுள்ளும் வெள்ளி முலாம் பூசப்பட்ட ஒரு காப்பி ஸ்பூன்

வற்புறுத்தி வாங்குங்கள் ஒரு ஸ்பெஷல் காப்பி


விசேஷ சுவை
விசேஷச் சிக்கனம்
விசேஷ பாக்கிங்

விலை ரூ. 2.87 வரிகள் தனி.

புதியது!
'அதி-ஸ்ட்ராங்கான'

ரிக்கரி®

இன்ஸ்டண்ட்



இது விசேஷமானது!
நெஸ்கஃபே தயாரிப்பாளர்கள் அளிப்பது

புரிந்து கொள்ளவில்லை. என்மீது ராமகிருஷ்ணர் காட்டும் அருளைவிட அம்மா கொட்டுகிற கிருபை லக்ஷம் மடங்கு பெரிது என்பேன். அம்மாவை எண்ணுகையில், 'இவளோடு பார்த்தால் இந்த ராமகிருஷ்ணர் கூட எம்மாத்திரம்?' என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். நான் குறுகிய அபிமான வெறி பிடித்தவன் என்று வைத்துக் கொண்டாலும் சரி, இதுவே என் அபிப்பிராயம். ராமகிருஷ்ணர் தெய்வமா, மனிதரா என்பதைப் பற்றி நீங்கள் உங்கள் விருப்பப்படி பேசலாம். ஆனால் சோதர, நம் அம்மாவிடம் ஒருவன் பக்தி பூணவில்லை என்றால் அவனை 'வெட்கம், வெட்கம்' என்று தூற்ற வேண்டும்.''

அம்மாவின் பெருமை இது! ஆனாலும் ''ஒரு பெண்ணின் மதமே நாணம் தான்'' என்று ராமகிருஷ்ணர் சொல்லியிருந்ததால் பெருமையை அவள் வெளிக் காட்டவில்லை. அவள் பரவச அநுபவங்களை மிக மிக, அற்பமாகவே வெளிப்படுத்தியதால், அவளுக்குப் பேரநுபவங்கள் கிட்டவில்லை எனலாமா? ரவா சொஜ்ஜியும், சேமியா கேசரியும் செய்தால் அதில் முந்திரிப் பருப்புப் போடுவதுண்டு. முந்திரிப் பருப்பையே ஹல்வா செய்தால் அதில் முந்திரிப் பருப்புப் போடுவார்களா? பாதம் ஹல்வாவுக்கு முந்திரியின் தாளிதம் வேண்டியதில்லை. மற்றவர்களின் சாதனைகளில் முந்திரியாக அதீத அநுபவங்கள் வந்தன. சுபாவமாகவே துரீயமாக, பாதம் ஹல்வாவாக, இருந்த சாரதைக்கு இது எதற்கு? அதன் ருசியை அதிகப்படுத்த இடம் ஏது? அதிகப்படுத்த முடியாது, திகட்டிப் போய்விடும் என்பதால் அதற்கு நேர் எதிரான ஏதோ ஒரு காரத்தையும் கூட உண்பது போல் அம்மா சமாதிக்கு நேர் எதிர்த் திசையிலேயே தன்னை அதி சாமானியமாகக் காட்டிக் கொண்டாள்.

ஆனால் இச்சரிதையில் அவளது சமாதி அநுபவங்களை அடிக்கடி பார்ப்பது போலத் தோன்றும். தேவி அறுபத்தியாறாண்டுகள் உலகில் உலவினாள். இந்த நீண்ட காலத்தில் ஆயிரக்கணக்கான முறை அதீத அநுபவங்கள் வெளிப்பட இடமுண்டு. இன்றைக்குங்கூடப் பிரதி தினமும், ஏன் ஒரு தினத்திலே பல முறைகூட, 'பாவசமாதி' பரவச அநுபூதி ஆகியவற்றைப் பெறும் சாதகர்கள் உள்ளனர். இந்தக் கணக்கில், 'சாதகி' என்பதைவிட உயர்ந்த சாத்தியப் பொருளேயான அம்மா லட்சோப லட்சம் முறை மகா பாவங்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அறுபத்தியாறு ஆண்டுகளில், (மந்திரோபதேச சமயங்களில் தன் தெய்விகத்தைத் தப்பாமல் வெளியிட்டது தவிர) அவள் பேரநுபவங்களைக் காட்டியது ஐம்பது முறைக்கும் குறைவாகவே இருக்கும் எனலாம். வானத்துத் தாரகைகளுக்கிடையே கோடாநு கோடி காதங்கள் இடைவெளி இருந்தாலும் நம் கண் பார்வைக்கு அவை நெருக்கமாகத் தெரிவது போல், அம்மாவின் வாழ்க்கையை இறுக்கித் தரும் இச்சரிதையில் அவளது பரவசங்கள் அடிக்கடி நிகழ்வதுபோல் தோன்றும்.

அதெப்படியாயினும் அவள் செய்த காரியம் பெரியது. என்றென்றும் அவள் செய்யவேண்டிய காரியமும் பெரியது. விவேகாநந்தர் கூறியது போல், ராமகிருஷ்ணரை மறந்தாலும் மற்ற மகா புருஷர்களைப் பார்த்து சாதகர்கள் உய்வு பெறுவர். ஆனால் சாமானிய மக்கள், குறிப்பாக மாதர் குலம், நம் மாதாவை மறந்தால் விபரீதமே ஆகும்!

இச்சரிதையில் இனி அவள் நிகழ்த்தப் போகும் அவதாரப் பணி ஒருபுறமிருக்க, இப்போதே அவளால் ஒரு பெரும் பணி மௌனமாக நிறைவு பெற்றிருந்தது. ராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் இளம் சந்நியாசிகள் நெல்லிக் காய் மூட்டைபோல் பிரிந்து போகாமல் சேர்ந்து நின்றதற்குக் காரணம் அம்மாதான். இவளுடைய அன்புதான் அவர்களை ஒன்றுபடுத்தி வைத்து, ராமகிருஷ்ண மடத்தைத் தோற்றுவித்தது.

மடத்தை இவர் தோற்றுவித்தாலும் அந்த மடத்துச் சந்நியாசிகள் இவளிடம் ஒருவிதத்தில் தோற்றுத்தான் போனார்கள்! அவர்கள் மிகுந்த யோசனையுடன் தங்களுக்குச் சூட்டிக் கொண்ட அழகிய சந்நியாச நாமங்களைச் சொல்லவே அம்மாவால் முடியாது! ''சந்நியாசம்னா அப்பா—அம்மாவை விட்டுட்டுப் போறதுதானே? உங்களைச் சந்நியாச நாமத்தாலே கூப்பிடறதுன்னா எனக்கு மனசு புண்ணாறது'' என்பாள் அவள். ஒருமுறை விவேகாநந்தர், 'எங்கள் துறவுப் பெயரையே உங்களால் சொல்ல முடியவில்லையே! எங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?' என்று கேட்டார். 'பிள்ளைகளாக'

> சூரிய வெளிச்சம் எங்கும் சமமாகத்தான் விழுகிறது. ஆயினும் தண்ணீர், கண்ணாடி, மெருகிட்ட உலோகம் ஆகியவற்றில் அவ்வொளி நன்கு பிரதிபலிக்கிறது. தெய்விக ஒளியும் அப்படியே. அது எல்லாரிடத்தும் சமமாகவே பாய்கிறது. ஆயினும் தூய மனம் படைத்த சாதுக்களே அவ்வொளியை நன்கு பிரதிபலிக்கிறார்கள். — பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

> இரவில் வானத்தில் எண்ணற்ற நட்சத்திரங்களைப் பார்க்கிறோம். சூரியன் உதித்தவுடன் அவை அனைத்தும் பார்வையிலிருந்து மறைகின்றன. ஆனபடியால் நட்சத்திரங்களே கிடையாது என்று சொல்வாயா! இரவு வந்தால் அவை கண்ணுக்கு மறுபடியும் தெரியும். உனது அஞ்ஞானத்தின் பெரிய வெளிச்சத்தில் ஈசுவரனைக் காண முடியாததால், கடவுளே கிடையாது என்று சாதிக்காதே. உனக்கே ஞானதசை வரும்போது அவனைக் காண்பாய்.
>
> — பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

என்று அவள் கூறுவாள் என்று அவர் எதிர்பார்த்தார். அம்மாவோ ''உங்களை யெல்லாம் நாராயணனாகப் பார்க்கிறேன்'' என்றாள். ''அப்படின்னாப் பிள்ளைகளாகப் பார்க்கலியா?'' என்று அவர் கேட்டார். ''நாராயணனாகவும் பிள்ளைகளாகவும் சேர்த்துப் பார்க்கிறேன்'' என்றாள் அம்மா. இவளிடம் தெய்விகமும் மனிதத்தன்மையும் ஒன்றிக் கிடந்ததுபோலவே இவளது உறவு முறைகளும் இருந்தன!

இவள் எப்படிப் பார்த்தாலும் இவளை மிகப் பெரும்பாலான சீடர்கள், திவ்விய மாதாவாக இல்லா விட்டாலும் அம்மாவாகவே பார்த்தனர் — அதாவது பெற்ற தாயாகப் பார்த்தனர். மகாதேவானந்தர், பஞ்சானன கோஷ் முதலியவர்கள் அவளைப் பார்த்தபோது தங்களைப் பெற்றெடுத்த ஜனகமாதாவின் உருவத்தையே கண்டிருக்கின்றனர். இன்னொரு சிறுவன் இவ்விதமே அம்மாவைத் தன் பெற்ற தாயின் வடிவாகப் பார்த்து, மிகுந்த சுவாதீனத்துடன் அவளுடனேயே உண்ண அமர்ந்தான். உண்ண அமர்ந்ததும் உரிமை இன்னும் அதிகமாயிற்று. ''நீயேதான் ஊட்ட வேண்டும்'' என்றான். அம்மாவும் அவ்விதமே செய்தாள்!

பெற்ற பிள்ளையின் மனத்தையும் வயிற்றையும் ஒரு தாய் எப்படி அறிந்திருப்பாளோ, அப்படியே இவளும் அவர்களைப் பூரணமாக உள்ளும் புறமும் அறிந்திருந்தாள். முன் பழக்கமில்லாத பிள்ளைகள் வந்தாலும், அவர்களுக்கு எந்த உணவு வகை மிகவும் பிடிக்குமோ அதையே தயாரிப்பாள். பரிமாறும்போது மிகச் சரியாக அவரவருக்குப் பிடித்த பதார்த்தங்களையே நிறையப் போடுவாள்! அவர்களுக்கு அதிசயமாக இருக்கும்!

இப்படிப்பட்ட அம்மாவிடம் ஒரு படு அசடான பிள்ளை, ''நான் உங்களை அம்மான்னு கூப்பிடறேன். இருந்தாலும் அது சரிதானான்னு தெரிஞ்சுக்கணும்'' என்றது.

அம்மா சற்றும் சிணுங்காமல் ''ஏண்டாப்பா! நான் உன்னோட மெய்யான அம்மா இல்லேன்னா, நான் வேறு யாரு? உன் உண்மை அம்மாதான் வேறு யாரு?'' என்றாள்.

''நீங்க அப்படிச் சொன்னாலும் எனக்குப் புரியவில்லே'' என்று கூறிய அசட்டுப் பிள்ளை, அசத்துப் பிள்ளையாகவே மாறி, ''பெற்ற தாயைப் பார்க்கறச்சே உண்டாகிற உணர்ச்சி உங்ககிட்டே எனக்கு உண்டாகலே'' என்றது.

''ஆகா, என்ன பரிதாபம்'' என்று அம்மா பெருமூச்செறிந்தாள். ''மகனே, ஏக வஸ்து ஒண்ணு இருக்கு. அதுதான் எல்லாத்துக்கும் அம்மா, அப்பா''என்று கூறி முடித்தாள்.

பிரம்மசாரி ராஸவிஹாரி கேட்டான்: ''அப்படின்னா நீங்க **எல்லாருக்கும்** அம்மாவா?''

''ஆமாம்'' என்றாள் அம்மா கெட்டியாக.

''எல்லாத்துக்கும்கூட அம்மாவா?''

''ஆமாம் ஆமாம் ஆமவே ஆமாம்.''

ஜகத்தாத்ரி பூஜை முடிந்த பின் பசங்கள் அம்மாவிடம் கண்ணும் கண்ணீருமாக விடை கொண்டனர்.

மாட்டு வண்டிகள் வெகு தூரம் சென்ற பின் காளி கிருஷ்ணன் உடன் இருந்தவரிடம் கேட்டான்: ''அதோ பாடுஜ்யேபுகுர் ஏரிக் கரையிலே நின்னுண்டு இங்கேயே பார்க்கிறது...?''

ஆம், அம்மாதான்!

காளி கிருஷ்ணன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்: 'அம்மாவுடைய அன்பு புயல் என்றால் புயல்தான். ஒருத்தரை அடியோடு பிடுங்கித் தன்னிடம் சாய்த்துக் கொள்கிறாளே! என்னைப் பெற்ற தாயிடம் எத்தனையோ ஆசை வைத்திருந்தேன் என்பது உண்மைதான். ஆனால் இங்கு பார்த்தால், சென்று போன ஜன்மங்கள், வரப்போகும் பிறவிகள் எல்லாவற்றுக்கும் அம்மாவாக இருந்த, இருக்கப் போகிற சாசுவத மாதா தெரிகிறாளே?'

அவர்களுடனேயே அம்மாவும் வந்திருக்கலாம். சிஷ்யர்கள் அவளுக்கு ஆசிரமம் கட்டிக் கொடுத்து, அவளை உட்கார்த்தி வைத்து ஏவல் செய்யத் தயாராக இருந்தனர். ஆனால் இதையெல்லாம் ஏற்க அவள்தான் தயாராகவில்லை. இரண்டரை ஆண்டுகள் ஜயராம்பாடியிலேயே அநுதாபம் இல்லாத பிறந்த வீட்டாருக்காக உழைத்துக் கொண்டு கிடந்தாள். கடைசி வரை இப்படியே பிறந்த வீடும், 'பிள்ளைகளின்'வீடுமாக மாறி மாறி இருந்தாள்.

அம்மாவுக்கு ஏறக்குறைய வயசு நாற்பதானபோது, கிராமத்தை விட்டு கல்கத்தாவுக்கு வந்து, அவ்வப்போது தங்கலானாள். நாலு தலைமுறைகளுக்கு

முந்தி பாரத மக்களின் சராசரி ஆயுள் இன்றைவிட மிகக் குறைவு. அஞ்சாறு வயசிலேயே கல்யாணமாகிவிடும். நாற்பது வயசிலேயே கிழக் கோஷ்டியில் சேர்ந்து விடுவார்கள். அம்மாவும் இப்படிக் கிழக் கோஷ்டிக்கு வந்த பின்தான் வெளியடியார்கள் அவளை ஓரளவு பார்க்க அநுமதிக்கப்பட்டனர்.

பக்தர் விருப்பத்துக்கிணங்கி பேலூரிலிருந்த நீலாம்பர் பாபுவின் தோட்ட வீட்டுக்கு வந்து தங்கினாள் அம்மா.

இங்கு ஒருநாள் காளிகிருஷ்ணன் அம்மாவின் அன்பு வெள்ளத்தின் ஆழத்தைக் காணும் பேறு பெற்றான். அவனைக் கண்டவுடன் அம்மா, ''மகனே! எப்படிக் 'கஷாக் முஷா'க்குன்னு இருந்தவன் இப்படி இளைச்சுப் போயிட்டியே! நீ மடத்திலேயே இருக்க ஆரம்பிச்சட்டே! கூட இருக்கிற குருபாயிக்கள் என்ன இருந்தாலும் புருஷப் பசங்க. அவா எப்படி உன்னைக் கவனிச்சுப் போஷாக்குப் பண்ணுவா? இங்கே எனக்கு யாரையும் வைச்சுக்க முடியாமலிருக்கு மகனே! இப்படி இளைச்சுட்டியே! மடத்தை விட்டுட்டு ஆத்துக்குப் போ! அகத்து மனுஷாதான் உன்னை நன்னாப் பார்த்துப்பா! உடம்பு தேறின விட்டு மடத்துக்கு வா'' என்றாள்.

வீட்டைத் தொலைத்து முழுகி, துறவு பூண அவாவிய காளி கிருஷ்ணனுக்கு அழுகை வந்தது. ''வீட்டிலே போய் என்ன பண்ணறது?'' என்று விம்மினான்.

''ஏன், மடத்துலே பண்ணற தியானம், ஜபம், பூஜை, பாராயணம் எல்லாத்தையும் ஆத்திலே பண்ணேன்.''

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தான் காளி கிருஷ்ணன். அம்மா ஜபம் செய்யச் சொன்னாளே! தனக்கு ஒரு மந்திரமும் தீக்ஷையாக இல்லையே! விஷயமறிந்த யோகானந்தர், ''அம்மாகிட்டே விக்ஞாபனம் பண்ணிக்கோ. அம்மாவே ஜபம் எடுத்து வைப்பா'' என்றார்.

ஆணைப்பட்ட அம்மாவிடம் மந்திரோபதேசத்துக்குப் பிரார்த்திப்பதா என்று தயங்கினான் காளிகிருஷ்ணன். பிறகுதான் யோகானந்தர் சொல்லத் தெரிந்தது. அநேகமாக மடத்திலிருந்த எல்லோருமே அம்மாவிடம் உபதேசம் பெற்றிருக்கிறார்கள் என்பதும், இந்த உண்மை பரம ரகசியமாகக் காக்கப்பட்டது என்பதும்.

அம்மாவிடம் மந்திரம் கோரினான் காளிகிருஷ்ணன்.

பெய்யெனப் பெய்யும் மழையாக அந்த அருள்மூர்த்தி உடனே தீக்ஷை அளித்தாள். ஆனால் காளிகிருஷ்ணனுக்கு மனத்தில் சிறிய உறுத்தல் உண்டாயிற்று. அம்மா எடுத்து வைத்த மந்திரம் அவனது இஷ்ட தெய்வம் குறித்ததல்ல. ''பிள்ளையே! இப்போ நான் உனக்குத் தந்த மந்திரம்தான் உனக்கு அதைவிட நல்லது'' என்று தீர்மானமாகக் கூறினாள் அம்மா. காளிகிருஷ்ணனுக்குள் ஓர் அதிசயம் நடந்தது. அவனது சாதனை மார்க்கம் அந்தக் கணமே சூரியோதயம்போல் புத்தொளி பெற்றது. பழைய அபிப்பிராயங்கள், அபிமானங்கள், சித்தாந்தங்கள் யாவும் சூரியோதயத்திலே நட்சத்திரங்கள் போல் மறைந்தன. அம்மா தந்த 'இஷ்டா' அவனை நிரப்பி ஆட்கொண்டு விட்டது!

காளி கிருஷ்ணனின் முகவாயைப் பிடித்து அம்மா விடை கூறினாள். அவன் தாய்ப் பசுவைப் பிரிந்த கன்றுபோல் பாசத்தின் ஈரத்தில் கனத்த மனத்துடன் பரிசில் கரைக்கு வந்தான். பூஞ்சிதறலாகத் தூறல் விழுந்தது. காளிகிருஷ்ணன் பரிசில் பிடித்துக் கங்கையில் மிதந்து வருகையில், நீலாம்பர் பாபுவின் வீட்டுக்கு எதிரே வந்த போது தன்னை அறியாமல் தலையைத் தூக்கிப் பார்த்தான். அந்த வீட்டு வெளி மாடியில் அம்மா தூறலில் நின்றுகொண்டு பரிசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். காளி கிருஷ்ணனின் இதயம் விம்மியது. தாபமெல்லாம் ஓடித் தண்ணென்று ஆயிற்று.

''அம்மா எத்தனை நாழியாக மழையிலே நிக்கிறேள்! உங்களோட வாத ரோகத்துக்கு இது மகா கெடுதலாச்சே! உள்ளே வரமாட்டேளா?'' என்று கத்தினான் கோலாப்-மா.

''என்னை விட்டுப் போகக் குழந்தைக்கு மனசே இல்லை. அதனோட உணர்ச்சி எனக்குத்தான் தெரியும். அதுதான் பார்த்துண்டே நிக்கறேன்'' என்றாள் அம்மா, தன் கண்களும் தூறல் பொழிய.

கங்கைக் கரையில் கங்குகரையற்ற கனிவுக் கடலாக நின்றாள்! (தொடரும்)

நீங்கள் ஓர் இல்லத்தரசியோ-
நாகரிக கல்லூரி வனிதையோ
உங்கள் எழில்மிக்க
சருமத்தை, மிருதுவாகவும்,
புத்துணர்ச்சியுடனும்,
பாதுகாப்பது சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லெட்
சோப் ஒன்றேதான்.



aries



சந்திரிகா

ஆயுர்வேதிக் டாய்லெட் சோப்

சந்திரிகா பிராடக்ட்ஸ் கோயம்பத்தூர்-2, சென்னை-10.

இன்றைய பிரச்னை 6

வரதட்சிணைக் கொடுமை!

[வரதட்சிணைப் பிரச்னையின் கொடுமை நாளுக்கு நாள் விசுவரூபம் எடுத்து வளர்ந்து வருகிறது. எண்ணற்ற குடும்பங்களின் அவதிக்குக் காரணமான இந்தக் கொடுமையைக் குறித்துப் பேசச் சமூகப் பணியாற்றி முதிர்ந்த அனுபவம் பெற்றுள்ள ஸ்ரீமதி வசுமதி ராமசுவாமியை அணுகுகிறோம்.]

சமூகம் பயிரை அழித்து வரும் வரதட்சிணைக் களையினை ஒழிக்க வழியே இல்லையா?

விடை காண முடியாத பிரச்னை இது. மிகவும் ஆழமாக வேரூன்றி விட்டது இப்பழக்கம். புற்றுநோய்க்கு மருந்து இல்லா விட்டாலும் அதைத் தடுக்கப் பல யோசனைகள் கூறப்படுகின்றன. புகை பிடித்தால் புற்றுநோய் வரும் என்றால் மக்கள் பயப்படுகிறார்கள். பலர் அப்பழக்கத்தைக் கைவிடுகிறார்கள். ஆனால் வரதட்சிணை பல குடும்பங்களின் நாசத்துக்கே காரணமாக உள்ளது என்றால் அதை யாரும் காதில் போட்டுக் கொள்வதில்லை.

சட்டம் இருக்கிறதே?

இருக்கிறது. அதை அமுல் செய்வது நடைமுறையில் சாத்தியமில்லாமல் இருக்கிறது. பார்க்கப் போனால் அந்தச் சட்டம் வந்தபிறகு வரதட்சிணை 'ரேட்' இன்னும் அதிகமாகிவிட்டது! பணம் ரொக்கமாக வாங்காத ஒரு சிலரும் கூடப் பொருள்களாக வசூலித்து விடுகிறார்கள். இரும்புப் பீரோ, கட்டில், டன்லப் பில்லோ மெத்தை, இன்னும் கார், வீடு என்றெல்லாம் கூடக் கேட்டு வாங்குகிறார்கள். 'ஐ. ஏ. எஸ்.' அல்லது 'டாக்டர்' மாப்பிள்ளை என்றால் நாற்பதாயிரம் ஐம்பதாயிரம் என்று வாய் கூசாமல் கேட்கிறார்கள்.

வசதி உள்ளவர்கள் கொடுக்கிறார்கள்...

வசதி உள்ளவர்கள் கொடுப்பதுதான் வசதி இல்லாதவர்களையும் பாதிக்கிறது. முன்காலத்தில் பிள்ளையின் பெற்றோர்கள்தாம் சீர் வரிசையில் கண்டிப்பாக இருப்பார்கள். அதிலும் தாய்மார்கள் என்றே குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இக்காலத்தில் திருமணம் செய்துகொள்ள இருக்கும் பிள்ளைகளே சீர்வரிசைகள் பெறுவதில் தீவிரமாக இருக்கிறார்கள். படித்த லட்சணம் இது! பெரிய 'லிஸ்ட்' போட்டுக் கொடுக்கிறார்கள். சிலர் சுருக்கமாக 'ஸ்கூட்டர்', 'அம்பாஸடர் கார்' என்று கேட்கிறார்கள். அமெரிக்கா போக விமான டிக்கட் வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிறான் ஓர் இளைஞன். நீளமான பட்டியல் போட்டுக் கொடுக்கிறார்களே — அந் தொகையை விட இது கூடுதலாகவே இருக்கிறது. மூன்று, நான்கு பெண்களைப் பெற்றவர்கள் அவதிப்படுகிறார்கள். இக் கொடுமையை வருணித்து விளக்கினால் ஒரு சிலராவது மனம் இருந்த மாட்டார்களா என்று ஆதங்கத்துடன் எண்ணும்படியிருக்கிறது.

பிரசாரம் செய்வது பலனளிக்காதா?

திரைப் படங்கள் மூலம் பிரசாரம் செய்யலாம். அதுதான் இப்போது சக்தி வாய்ந்த சாதனம். பல வருடங்களுக்கு முன்பு 'குமாஸ்தாவின் பெண்' என்று ஒரு படம் வெளிவந்ததே — அதில் இந்தக் கொடுமை மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் சித்திரிக்கப்பட்டிருந்தது. அது போன்ற படங்கள் ஓரளவு பலனளிக்கும். வரதட்சிணையின் கொடுமைகளை விளக்கும் திரைப் படங்கள் வர வேற்கப்பட வேண்டியவை.



சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்த முடியாதா?

பலன் எதிர்பார்க்கிற அளவு இருக்காது. வரதட்சிணைத் தொகைக்கு யாராவது ரசீது கொடுப்பார்களா? வரதட்சிணைத் தொகை வெளிவராத ரகசியமாகவே இருக்கும். கொடுத்தவர்களும் வெளியில் சொல்ல மாட்டார்கள், தங்கள் பெண் நன்றாக வாழ வேண்டும் என்ற கவலையில்.

பெற்றோர்கள் சக்திக்கு ஏற்பச் சீர்வரிசை செய்யத் தாமாகவே முன் வருவார்கள், கசக்கிப் பிழிந்து வாங்குவது கண்டிக்கத்தக்கது. இக் கொடுமையிலும் கொடுமை என்ன தெரியுமா? கல்யாணம் பேசி நிச்சயம் செய்த பிறகு குறிப்பிட்ட தொகைக்கு மேல் அதிகம் கேட்கிறார்கள் சிலர். கூடுதலாகச் சில நகைகள் போடச் சொல்லுவார்கள். இந்த எதிர்பாராத தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் பெண்ணைப் பெற்றவர்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்பது பரிதாபமான நிலை. எங்கே கல்யாணமே நின்று விடுமோ, அபகீர்த்தி ஏற்பட்டு விடுமோ என்ற பயம் காரணமாகக் கடனோ உடனே வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. நெருக்கடியில் கடன் வாங்கும்போது அதிக வட்டி கொடுக்க வேண்டியிருக்கும். முன்பெல்லாம் மாதிரி இப்போது கல்யாணத்தை ஒட்டிக் கடன் வாங்குவதும் சுலபமாயில்லை.

ஏன்? அதிக வட்டி கிடைத்துக்கு ஆசைப்பட்டுக் கடன் கொடுக்க மாட்டார்களா?

வட்டி கிடைக்கிறது இருக்கட்டும். முதல் திரும்பி வர வேண்டுமல்லவா? கடன் கொடுப்பவர் அதைத்தானே முக்கியமாகக் கருதுவார்? முன் காலத்தில் ஒருவர் பெண்ணுக்குக்

வழுக்கும் வர்ணம்!



கொள்ளைத் தடுப்பு பெயிண்ட் தயாராகிறது பிரிட்டனிலே.

திருடர்கள் சுவரையொட்டியிருக்கும் குழாய்களைப் பிடித்து ஏறி மேல் மாடி வராந்தா அல்லது ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து விடுகிறார்கள். இதைத் தடுக்க வழுக்கும் பெயிண்ட் உற்பத்தி செய்கிறது 'காம்ரெக்ஸ்' நிறுவனம். இதைக் கம்பங்கள் அல்லது குழாய்களுக்குப் பூசிவிட்டால் அசகாய சூரனும் ஏற முடியாது; வழுக்கி விட்டுவிடும்! இத்தன்மை எத்தனை நாட்கள் ஆனாலும் மாறுவதில்லை. — பிரிட்டிஷ் இண்டஸ்ட்ரியல் நியூஸ்

கல்யாணம் நிச்சயம் செய்கிறார் என்றால், உறவினர்கள் உதவி செய்ய முன் வருவார்கள். இப்பொழுது அதுவும் போய்விட்டது.

ஒரு குடும்பத்தில் பெண்கள் குறைவாக இருந்து பிள்ளைகள் நிறைய இருந்தால் அந்தக் குடும்பத்தினர் அதிகமாக வரதட்சிணை கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அதுதான் இல்லை! 'என் மூத்த மாட்டுப் பெண் இத்தனை வரிசையுடன் வந்தாள். இரண்டாவது மாட்டுப் பெண் கொண்டு வந்த சீர்செனத்தி இவ்வளவு!' என்று பெருமையுடன் கூறிவிட்டு, அதற்குக் குறையாமல் மூன்றாவது பிள்ளைக்குச் சீர் வரிசை கேட்கிறார்கள். இது குறிப்பிட்ட ஒரு சாதியைத்தான் பாதிக்கிறது என்பதில்லை. இப்பொழுது எல்லா மக்களிடமும் பரவிவிட்டது. தீய பழக்கங்கள் சுலபமாகப் பரவி விடும் அல்லவா? ஏன் — கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்களிடையே கூட இந்தத் தீமை இன்று பரவி வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

வரதட்சிணைப் பேய் தமிழ் நாட்டில்தான் அதிகமாகத் தாண்டவமாடுகிறது போலிருக்கிறது! சரிதானா?

ஆந்திராவிலும் மிக அதிகமாயுள்ளது. மைசூர் மாநிலத்தில் கொஞ்சம் குறைவு. தமிழர்கள், ஆந்திரர்கள் பிற மாநிலங்களில் வாழ்ந்து வருகிறார்களே — அவர்களிடையேயும் இப் பழக்கம் மறையவில்லை. வரதட்சிணை வாங்காத மக்களைப் பார்த்தும் நாம் சீர் திருந்துகிற வழியாகக் காணோம். இதன் விளைவு — தினத் தாள்களில் '29 வயது, 30 வயதுப் பெண்ணுக்கு மணமகன் தேவை' என்ற விளம்பரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 30 வயது ஆன பிறகும் 'பெண்' (Girl) ஆகவே காலங்கடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்களே, பாவம்!

வரதட்சிணை வாங்கித் திருமணம் செய்பவர்கள் தம்முடைய பெயரைத் திருமணப் பத்திரிகையில் போட வேண்டாம் என்று காஞ்சிப் பெரியவர்கள் கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படியும் பலர், 'காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் அநுக்கிரகத்தை முன்னிட்டு...' என்று அழைப்பிதழ் அச்சடிக்கிறார்கள், - வரதட்சிணையும் குறையாமல் வாங்கிவிட்டு! இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

மனச்சாட்சி யில்லாதவர்கள் செய்யும் காரியம் இது. ஜகத்குருவையே ஏமாற்றிவிடுவதாக நினைக்கிறவர்களை, அம்மகானின் கட்டளையையே ஏற்றுக் கொள்ளாதவர்களை வேறு யார் திருத்தி விட முடியும்? இவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். தெரிந்தே தவறு செய்கிறவர்களை யார் என்ன செய்ய முடியும்?

நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த படித்தவர்கள்-கலைகளில் ஈடுபாடுள்ளவர்கள், நற்பணிகளுக்கெல்லாம் ஆதரவு தருபவர்கள் இந்த விஷயத்தை நாடுவது வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறதல்லவா?

வேதனைதான். எனினும் வசதி மிக்கவர்களிடையேயும் பரவலாக இப் பழக்கம் உள்ளது. உதாரணமாக, செட்டிநாட்டுத் திருமணங்களில் 100 பித்தளை வாளிகள், 100 பாய்கள் என்றெல்லாம் சீர் வரிசை கொடுக்கிறார்கள். புதிதாக வாழ்க்கையைத் தொடங்கும் ஒரு தம்பதிக்கு அல்லது அக் குடும்பத்துக்கேதான் 100 வாளிகள் எதற்கு? இதில் இன்னொரு விசேஷம். இந்தச் சீர்வரிசையை வாங்கிக் கொள்ளும் பொருட்டு மணமகனின் தாய்க்குப் பெண் வீட்டார் பத்து வராகன் கொடுக்க வேண்டுமாம்!

மக்கள் மனம் மாறி இந்தத் தீமை அடியோடு ஒழியும்வரை வரதட்சிணை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதால் பெண்ணைப் பெற்றவர்கள் முன் யோசனையுடன் பணம் சேர்த்து வைக்கலாம் இல்லையா? கல்யாணத்தை முன்னிட்டுச் சேமிப்புகள் என்று விளம்பரங்கள் கூடப் போடுகிறார்களே?

இப்படிச் சிலர் சேமித்து விட்டதால் கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டுப் போகலாமே என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதுவும் தீமையே. வரதட்சிணை தராமலிருக்கவே போராட வேண்டும். மேலும் எல்லோராலும் சேமித்துவிட முடிகிறதா?

முன்பெல்லாம் பெண்களைப் படிக்க வைக்கும் செலவு இல்லை. இப்போது சிற்றூர்களில் கூட மகளிர் கல்லூரிகள் ஏற்பட்டிருக்கின்றன. பி. ஏ., பி.எஸ்ஸி. என்று படிக்க வைக்கிற செலவு வேறு பெண்ணின் பெற்றோர்க்கு உள்ளது. பட்டம் பெற்ற பிறகு சில பெண்கள் வேலையிலும் அமர்ந்து சம்பாதிக்கின்றனர். கணவனின் குடும்பத்துக்கு வாழ்நாளெல்லாம் உழைக்கப் போகிறவள், தன் சம்பளம் முழுவதையும் அக் குடும்பத்துக்கே வழங்கப் போகிறவள், தன் படிப்பின் பயனைக் கணவனின் குடும்பத்துக்கே அர்ப்பணிக்கப் போகிறவள் — அந்தப் பெண்ணின் பெற்றோர்களைக் கசக்கிப் பிழிந்து 'சட்டிக்காரன்' வட்டி வாங்குகிற மாதிரி வரதட்சிணை என்றும் சீர் என்றும் வசூலிப்பது பாவம், அநியாயம், அக்கிரமம் என்று நமது மக்கள் என்று உணரப் போகிறார்களோ — அன்றுதான் நமது தேசத்துக்கு விமோசனம்.


பேட்டி: **பாணன்**

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)



ஒளிமிகுந்த கண்களுக்கு உகந்தது சிங்கார் கண்மை

உங்களைச் சுற்றியுள்ள உலகை உங்கள் ஒளிப்பார்வையினால் வெற்றிகொள்ளுங்கள். கண்களின் இயற்கைக் கவர்ச்சியை இதமுடனே போற்றி காக்கும் சிங்கார் கண்மை உபயோகியுங்கள். கசிந்து பரவாமலும், அழகைச் சிதைக்காமலும் இருக்கும் சுகாதாரமான கண்மை இதுவே.

சிங்கார்

கண்மை

பாரமவுண்ட் ப்ராடக்ட்ஸ்
809, பிரசாத் சேம்பர்ஸ்,
பம்பாய்-4 (BR)



